

# விநோதம்

**ச**வுதி அரேபியாவில் பெண்கள் கார் ஓட்டக்கூடாது. பெண்கள் கார் ஓட்டிப் பிடிபட்டால், அவருடைய கணவருக்கு சிறை தண்டனை தரப்படும்.

*- எஸ். சுவாமிநாதன், மன்னார்குடி.*

## பிஸ்கெட்

'**பி**ஸ்கெட்' என்ற பிரெஞ்சு சொல்லுக்கு, இரண்டுமுறை வேக வைக்கப்பட்டது என்று பொருள். கப்பலில் நெடுந்தூரம் பயணம் செய்பவர்களுக்காகத்தான் முதன்முதலில் 'பிஸ்கெட்' தயாரிக்கப்பட்டது.

– இளாக்குளம் கோ. வசந்தராஜ்.



ஆர். மகேஸ்வரி

# தீயாய் வந்த தென்றல்



1

**மா**ர்கழி மாதம்!

பனியின் தாலாட்டில் உறங்கிக்கொண்டிருந்த நகரம்... மெல்ல மெல்ல விழித்து... சூரியனின் வருகைக்காக வழி மேல் விழி வைத்து காத்திருந்த காலைப்பொழுது!

அந்தப் பனி படர்ந்த வேளையில் மாடியில் ஓடினான் கவுதம் கொஞ்ச நேர ஓட்டம் முடிந்து... வழக்கமான உடற்பயிற்சிகளை எல்லாம் முடித்து... வியர்வை காய நாற்காலியில் அமர்ந்தான்.

தோட்டத்தில் மலர்ந்திருந்த விதவிதமான ரோஜாக்களி நறுமணமும்... முல்லை, மல்லிகையின் மணமும் போட்டிபோ

அவன் நாசியைத் தாக்கின.

சந்திரசேகரன்- மீனாட்சி தம்பதியருக்கு இரண்டு மகன்கள். மூத்தவன் கவுதம், தாயைப் போல நல்ல நிறம். அழகன். அடர்த்தியான மீசையும், அலைபாயும் கண்களும், தலைகொள்ளாத முடியுமாய் நல்ல உயரத்துடன் இருக்கும் அவனை கடக்கும் பெண்கள்... திரும்பிப் பார்த்து ஏக்கப் பெருமூச்சுவிடாமல் போகமாட்டார்கள். ஆண்மை பொருந்திய கட்டான உடல்வாகுடன் கம்பீரமாய் இருக்கும் அவன்... தொழிலில் சாமர்த்தியசாலி. தந்தையின் தொழிலை பன்மடங்கு பெருக்கி... முதல் இடத்திற்கு வர... படாதபாடு பட்டுக்கொண்டிருக்கும் சுறுசுறுப்பான திறமைசாலி! 'கம்ப்யூட்டர்' போல பொழுதுக்கும் சளைக்காமல் வேலை செய்வான்.

இளையவன் அரவிந்தன்! தந்தையைப் போல மாநிறமானவன். இவனும் அழகன்தான். ஆனாலும், கவுதம் அளவுக்கு திறமைசாலியல்ல! உழைக்க சோம்பேறித்தனப்படுவான். கவுதம் தூண்டுதலில் சுடர்விட்டு பிரகாசிக்கும் விளக்கு அவன்! இருவருக்கும் இரண்டே வயதுதான் வித்தியாசம்.

சந்திரசேகரன் உடல்நலம் பாதிக்கப்பட்டதில் இருந்து... பிள்ளைகளிடம் தொழிலை ஒப்படைத்துவிட்டு... பொழுதுபோக்கிற்கு வரலாற்று நாவல்களுடன் பொழுதைக் கழிக்கிறார். பத்தாதற்கு டி.வி.யில் போடும் பழைய படங்களையும் விரும்பிப் பார்ப்பார்.

அவர் மனைவி மீனாட்சிக்கோ எத்தனை வேலைக்காரர்கள் இருந்தாலும்... பிள்ளைகளுக்கு பிடித்தமான பதார்த்தங்கள், கணவருக்கு தேவையான உணவு என்று செய்துகொடுத்து... கட்டியவரும், பிள்ளைகளும் விரும்பி உண்பதைக் கண்டு ரசிப்பாள். சமையல் அறையை சொர்க்கமாகவே நினைப்பவள்.

திருமணமாகி பத்து ஆண்டுகள் பிள்ளையில்லாமல் கோவில் கோவிலாய் ஏறி இறங்கி- வேண்டுதலின் பலனாய் பிறந்தவன் கவுதம். அரவிந்தனின் மேல் பிரியம் இருந்தாலும்... கவுதம் என்றால் மீனாட்சிக்கு கொள்ளைப் பிரியம்! அவன் ஆபீஸ் முடிந்து வர... கொஞ்ச நேரம் தாமதமானாலும்... வீட்டுக்கும், வெளியுமாய் டந்து நடந்து தவித்துவிடுவாள். அவனைக் கண்டதும்தான் உயிரே ரும்.

எட்டு மணியானால் அனைவரும் சாப்பாட்டு மேசையில் இருக்க ண்டும். இது அவர்கள் வீட்டில் எழுதப்படாத சட்டம். அரவிந்தன் உறக்கம் கலைந்து எழுந்தவன்... மணியைப் ர்த்துவிட்டு பதறிப் போய்... குளியலை முடித்துக்கொண்டு



அவன் அங்கே வரவும்... அப்பா, கவுதம் சாப்பிட்டுக்கொண்டு இருந்தனர்.

"குட்மார்னிங் டாடி... ஸாரி டாடி...!" அப்பாவின் முறைப்பிற்கு கண்களாலேயே கெஞ்சிவிட்டு அமர்ந்தான்.

"எவ்வளவு நேரம் உறங்குவாய்? சீக்கிரம் படுயென்றால்... கேட்காமல்... சாமம்வரை கண்ட கண்ட சேனல்களை மாற்றி டி.வி. பார்த்துவிட்டு படுத்தால்... காலையில் எப்படி எழமுடியும்?" அப்பா கோபமாய் கத்த...

"பாவம்! விடுங்கப்பா. இந்தச் சின்ன வயதிலே பெரிய பெரிய பொறுப்புகளை ஒப்படைத்துள்ளதால்... ரொம்பவே கஷ்டப்படுகிறான்!" அரவிந்தனுக்கு பரிந்துகொண்டு கவுதம் வர... அப்பா சொன்னார்.

"உனக்கென்ன அவ்வளவு வயசாகிட்டதா? அவனைவிட இரண்டே வயது பெரியவன் நீ! எல்லாவற்றையும் திறமையா நடத்தலையா?"

"ஏன் அரவிந்த்... அப்பா திட்டுற மாதிரி வைக்கிறாய்?" அம்மா புத்திமதி சொன்னாள்.

"எல்லாவற்றிலும் சரியாய் இருப்பவன்... பெண் பார்ப்பதில் மட்டும் சரியில்லையே! எந்தப் பெண்ணைக் காட்டினாலும் பிடிக்கலே... பிடிக்கலேதான்! கவுதம், உன் மனசுல என்னடா நினைச்சிட்டு இருக்கே?" கடைசியில் கவுதமிடம் அப்பா குறை காண ஆரம்பித்துவிட்டார்.

"அப்பா... இது ஒன்றில் மட்டும் என் விருப்பம்போல விடுங்க! நீங்க காட்டும் எந்தப் பெண்ணையுமே எனக்குப் பிடிக்கலே!" முகம் சுளித்துச் சொன்னான் கவுதம் .

"ஆமா... பெண் எப்படித்தான் இருக்கணும்?" மீனாட்சி கேட்டாள்.

"எனக்கு சொல்லத் தெரியலேம்மா! ஆனா, பெண்ணைப் பார்த்ததும் முதல் பார்வையிலே பிடிக்கணும்! என் மனசு இவள்தான்... இவள்தான்டா உன் ஜோடின்னு சொல்லணும். அவளைப் பார்த்த மறுவிநாடி... அவ என் இதயத்துல ஏறி உட்கார்ந்துட்டு... என்னை இம்சிக்கணும்! அவள் நினைவுகள் என்னை வறுத்தெடுக்கணும்! திரும்ப திரும்ப அந்தப் பெண்ணோட நினைவால் என் மனசு அலையணும்! மண்டையைப் பிச்சிகிட்டு... மறுநாளு பார்க்கமாட்டோம்மான்னு நான் ஏங்கணும்! இப்படியெல்லாம் நீங் காட்டும்... எந்தப் பெண்ணுமே எனக்கு பாதிப்பை ஏற்படுத்தலே

– கவுதம் கண்கள் கனவுகளில் படபடத்தன.

"என்ன கவுதம், புதுவிதமான அர்த்தம் சொல்றே!"

"அப்பா... இது வாழ்க்கைப்பா! காலமெல்லாம் அவள் என்னோடு துணையா வரணும்! அந்தத் துணை எப்படி இருக்கணும்னு எனக்கும் சில கற்பனைகள், கனவுகள், விருப்பங்கள் இருக்கு. அதுக்கு ஒத்துப்போற மாதிரி எந்த ஒரு பெண்ணுமே என் கண்ணில் இதுவரை படலே! அப்படியொரு பெண் என் கண்முன் வருவான்னு எனக்கு நம்பிக்கை இருக்குப்பா!"

"எப்போது வருவா?" கொஞ்சம் கோபமாய் கேட்டார்.

"கூடிய சீக்கிரமே அவளை பார்ப்பேன்னு என் மனசு சொல்லுதுப்பா. பெண் பார்க்கன்னு வீடு வீடா கூட்டிட்டுப்போறதை நிறுத்திடுங்கப்பா. மாடு பிடிக்க சந்தைக்கு நடையா நடப்பது போல இருக்கு. எனக்கு பிடிக்கலே!" கவுதம் வருத்தத்தோடு சொன்னான்.

"ஏய் கவுதம்... பெருமாள் 'மினிஸ்டர்' வீட்டுக்கு இன்னிக்கு வருவதாய் வாக்கு கொடுத்திருக்கேன்!" அம்மா கூற...

"போங்கம்மா! உங்களுக்கு வேறு வேலையே இல்லையா? நான் வரமாட்டேன். என்னை விடுங்க! எனக்கு இந்தப் பெண் பார்க்கும் படலமே பிடிக்கலை. எனக்குன்னு ஒருத்தி தேவதையாட்டம் பிறந்து... அழகா... அம்சமா வளர்ந்துட்டு இருப்பா. என் கண்ணிலும், கருத்திலும் படுவாள். இனிமே அவள் பொறக்கப் போறதில்லை!"

"அத்தை வேறு பாவனாவுக்கு வயசாகிட்டே போகுதுன்னு நச்சரிக்கிறாள். அரவிந்தன் பயலுக்கு பொண்ணு தயார்! உனக்குத்தான் என்ன ராசியோ... இப்படி இழுத்துட்டுப் போகுது!" அம்மா சொல்லிவிட்டு நெடிய மூச்சொன்று விட்டாள்.

"பேசாமல் பாவனாவை கட்டிவச்சுடுங்களேன்! அந்த வாயாடியை எனக்கு கொஞ்சமா பிடிக்குது!" என்று கவுதம் நக்கலாய் அரவிந்தனை பார்த்துக்கொண்டு சொல்ல...

"ஏய் அண்ணா... என்ன இப்படி பேசுறே? என் அடிமடியில கைவைக்கப் பார்க்கிறியே! நான் உன் தம்பிடா! பாவமில்லையா? என் பாவனா... அவள் எனக்குத்தான் வேண்டும்!" அரவிந்தன் இடையில் புக...

"அவள் உனக்கு மட்டுமா அத்தைப் பெண்? எனக்கும்தானே! இப்படி ஒரேயடியாய் சொந்தம் கொண்டாடினால், நானும் இடையில் புகுந்து சண்டை போடுவேன், ஜாக்கிரதை!" பொய்யாய் மிரட்டி



கவுதம் சிரித்தான்.

"நாங்கள் 'லவ்' பண்றோம்! இடையில் புகுந்து காதல் துரோகியாய் ஆகிடாதே!" அரவிந்தன் சொன்னான்.

"நீ ஒழுங்கா நாங்கள் கைகாட்டும் பெண்ணை மணந்துகொள்! இல்லேன்னா உன் மனசுக்கு பிடிச்சவளை சீக்கிரமே கொண்டு வந்து நிறுத்துப்பா!"

"முயற்சி பண்ணுறேம்பா... இல்லேன்னா உங்க விருப்பத்துக்கு கட்டுப்படறேன். கொஞ்ச நாள் அவகாசம் கொடுங்க, ப்ளீஸ்..." கெஞ்சினான்.

"நாளைக்கு பாவனாவுக்கு பிறந்தநாள்! ஏதாவது நகை, துணின்னு வாங்கிட்டு வந்துடறீயா கவுதம்?" என்று அம்மா கேட்க...

"என் பாவனான்னு சொந்தம் கொண்டாடியவனிடம் சொல்லுங்க!" அவன் பொய்யாய் வீம்பு பண்ண...

"அவனுக்கு என்னடா தெரியும்? உனக்குத்தான் நல்லா தேர்வு பண்ண தெரியும்!"

"காதல் பண்ண நல்லா கத்துவச்சிருக்கானே! நினைச்சா ஆபீசுக்கு மட்டம் போட்டுட்டு... அவளோடு நல்லா சுத்தத் தெரியுமே! அப்படிப்பட்டவனுக்கு பிறந்தநாள் பரிசு வாங்கத் தெரியாதா? போடா மடையா... நான் மாட்டேன்!"

"எனக்கு எதுவும் தெரியாது. காதல் பண்ண மட்டுமே கத்து வச்சிருக்கேன்! ப்ளீஸ் அண்ணா... சாயங்காலம் நீயே வாங்கிட்டு வந்துடு!" அரவிந்தன் சிரித்தான்.

"சரி, கெஞ்சாதே! அசிங்கமா இருக்கு! தெரியாதுன்னு யாருக்கு காது குத்தறே? நான் அலைஞ்சி, திரிஞ்சி வாங்கிட்டு வந்தால்... நீ நாளைக்கு அழகா சிரிச்சுட்டு... 'பிடிச்சிருக்கா? எத்தனை கஷ்டப்பட்டேன்? ஒரு முத்தம் கொடேன்'னு பாவனாகிட்ட கேட்பே! ம்..." என்று குறும்பாய் கண் சிமிட்டினான்.

மாலையில் பாவனா வீட்டிற்கு 'போன்' செய்தான் கவுதம்.

"கவுதமா? எப்படிப்பா இருக்கே? பாவனாவா...? அவ 'ஷாப்பிங்' போறதாதான் கிளம்பினா. செல்போனை மறந்து வீட்டுலே வச்சிட்டு போயிட்டா. ஏன் எதுக்கு?"

"அவளுக்கு பிறந்தநாள் பரிசு வாங்கத்தான். சரி, நான் வாங்கிடறேன். வச்சிடறேன் அத்தை!"

நல்ல அழகான கல் வைத்த 'நெக்லஸ்' வாங்கியவன்... அடுத்து துணிக்கடையில் நுழைந்து சுடிதாரை அலசிக்கொண்டிருந்தான். எதுவும் பிடிக்காமல்... அலுப்புடன் கண்ணாடி ஜன்னலின் வழியே

வெளியே பார்க்க... பாவனா நடைபாதையில் நடந்து போய் கொண்டிருந்தாள்.

"இதோ வருகிறேன்" என்று ஊழியரிடம் கூறிவிட்டு... கடையைவிட்டு இறங்கி ஓடிவந்தான்.

"பாவனா... ஏய் பாவனா..." வேகமாய் கத்தினான்.

தென்றலாய்... அழகின் இலக்கணமாய் பிரியா படி ஏறி வர... திடீரென எதிரில் வந்தவளை கவனியாமல் ஓடி வந்தவன்... அவள் மேல் வேகமாய் மோத... "அம்மா..." என்று அலறியவாறு படிகளில் உருண்டாள்.

கவுதம் அதிர்ந்துவிட்டான்.

அவள் விழுந்த வேகத்தில் கை- கால்களில் சிராய்ப்பு. மண்டையில் அடி. ரத்தம் கொட்டியது.

தலையை பிடித்துக்கொண்டவள் கத்தினாள். "பொறுக்கி ராஸ்கல்...! பொம்பளைகளை துரத்திட்டு போகும்போது... எதிர்க்க வர்றவங்களை கண்ணே தெரியாதா?" பிரியா குற்றம் சாட்ட...

கவுதம் ஆடிப்போனான்!

## 2

சிறிய கூட்டம் கூடி வேடிக்கைப் பார்த்தது.

"ஐயோ... ரத்தம் ஆறாய் போகுதே! பிடியுங்க... இறுக்கிப் பிடியுங்க...!" பதற்றத்தோடு கூறிய கவுதம், அவள் அருகே சென்று... காயத்தைப் பிடிக்க போக... அவன் கையை கோபமாக தட்டிவிட்டாள்.

"தொடாதீங்க... தொட்டால் நடக்கிறதே வேறு! நான் பொல்லாதவளா ஆயிடுவேன்!"

"முதல்ல ரத்தத்தை நிறுத்தணும். ஏராளமா ரத்தம் வீணாகுதே!" என்றவன், தன் 'பேண்ட் பாக்கெட்'டில் கையைவிட்டு... கைக்குட்டை எடுத்து உதறி கட்டுப் போடப் போனான்.

அவள் பின்னே நகர்ந்தாள்.

"போங்க... போயிடுங்க! என்னைப் பற்றி கவலைப்பட நீங்க யார்?"

"சாரி... சாரிம்மா... நீங்க திடீர்னு வந்ததை நான் கவனிக்கலே! வேணும்னு உங்களை விழ வைக்கல. தெரியாமல் நடந்துடிச்சி!



வாங்க, ஆஸ்பத்திரிக்கு போகலாம். என் கார் அங்கே நிற்குது. கொண்டுவரேன்!"

"ஆஸ்பத்திரிக்குதானே? எனக்கு போய்க்க தெரியும்! நீங்க உங்க வேலையைப் பாருங்க!"

கவுதம் புரியாமல் விழிக்க...

"பெண்களை துரத்தும் உங்க வேலையைத்தான் சொன்னேன்!"

பிரியா நக்கலாய் பேசினாள். கவுதமுக்கு அவமானமாக இருந்தது.

"என்னைத் தப்பா புரிஞ்சிட்டீங்க!"

"சரியாத்தான் புரிஞ்சிருக்கேன்!"

"அவள் என் மாமா பெண். அவளுக்கு சுடிதார் வாங்க வந்தேன். எனக்கு எதுவும் பிடிக்கலே! அவள் போவதைப் பார்த்ததும், அவளையே அழைச்சிட்டு வந்து... அவளுக்கு பிடிச்சதா வாங்கலாம்னு ஓடி வந்ததில்... தெரியாமல் மோதிட்டேன். சாரி... வெரி சாரி,... முதல்ல வாங்க, பேச நேரமில்லை!" அவன் அவசரப்படுத்த...

"எனக்கு போகத்தெரியும்!"

"வீம்பு பிடிக்காதீங்க! சொன்னா கேளுங்க!"

"ஆட்டோ... ஆட்டோ..." என்று கைதட்டி அழைத்து... அதில் ஏறிப் போனாள் பிரியா. இறக்கையை இழந்த வண்ணத்துப் பூச்சியாய் வலியில் துடித்தாள்.

கவுதம் மனம் பதபதைத்தது. 'எக்கேடோ கெட்டுப் போகட்டும்' என்று விட்டுப்போக மனமில்லாமல்... காரில் ஆட்டோவை பின்தொடர்ந்தான்.

ஆஸ்பத்திரியில் காயங்களுக்கு தையல் போடப்பட்டது.

வராந்தாவில் கையைப் பிசைந்துகொண்டு நின்றான் கவுதம். டாக்டர் வெளியே வர...

"டாக்டர்... காயம் பலமா?"

"ஆமா சார். நாளை வீட்டுக்கு போகலாம். அவங்க உங்களுக்கு என்ன வேணும்?"

"தெரிந்த பெண்!" என்றான், யோசியாமல்.

"நான் பார்க்கலாமா?"

"ஓ.கே.!" என்று டாக்டர் சென்றுவிட, உள்ளே நுழைந்தான்

"உங்களை யார் வரச் சொன்னது? எதுக்கு வந்தீங்க?" கோபம கத்தினாள்.

"தெரியாமல் நடந்த தவறுக்கு மன்னிக்கக் கூடாத

"என்ன தெரியாமல்? அழகான பெண்களைக் கண்டால்... எதிரில் வருபவர்களைத் தெரியாதா?" சீறினாள்.

"தப்பா பேசாதீங்க"

"நான் அப்படித்தான் பேசுவேன்!"

"மன்னிக்க முடியாதா... என் செயலை?"

"முடியாது. முதலில் வெளியே போங்க!"

"டாக்டர் உங்களை நாளைக்குப் போகச் சொல்கிறார். உங்க 'அட்ரஸ்' சொல்லுங்க?"

அவள் முறைத்தாள். கண்களில் நெருப்பு கனல் வீசியது.

"உங்க அப்பா பெயர் என்ன? உங்கள் வீட்டு 'போன் நம்பர்' கொடுக்க முடியுமா?"

இந்தக் கேள்வியால் பத்திரகாளி ஆனாள்.

"என்ன சார்... அவமானப்படுத்தறீங்க?

"அட்ரஸ் கேட்டால்... அவமானப்படுத்தறதா நினைக்கலாமா?"

"இதுக்கு பதில் சொல்ல முடியாது. நீங்க போறீங்களா?"

அப்போது உள்ளே வந்த புதிய டாக்டர்...

"மேடம்... கவுதம் சார் கவுரவமான மனிதர்! பெரிய தொழிலதிபர்! இப்படி மரியாதை இல்லாமல் பேசறீங்களே!" என்றார்.

"பெரிய கவுரவமான மனிதர்!" என்று முனகினாள். "நானே வீட்டுக்கு தெரிவிச்சிக்கிறேன். நீங்க கிளம்புங்க!"

"நான் பணம் கட்டிடறேன் டாக்டர். என்ன சொன்னாலும் அவங்க என்னைப் புரிஞ்சிக்கமாட்டாங்க. ஏன்னா, என்னால பாதிக்கப்பட்டிருக்கிறாங்க."

டாக்டர் "சாரி!" என்று சென்றுவிட...

"எனக்காக யாரும் பணம் கட்ட வேண்டாம்! என்கிட்ட பணமிருக்கு!"

"சரி, உடம்பை பார்த்துக்கங்க. நாளைக்கு காலையில வர்றேன்!"

"நாளைக்கும் நீங்க இங்கே வர்றதாய் இருந்தால்... நான் இப்பவே கிளம்பிடுவேன்!"

"எதுக்கு இப்படி ஏட்டிக்குப் போட்டி? என்னைப் பிடிக்கலையா?" கவுதம் கேட்க...

"உங்களை எனக்கு எதுக்கு பிடிக்கணும்?"

"ம்... கல்யாணம் செய்துக்க!" – இந்தச் சொற்கள் இயல்பாய் அவன் வாயிலிருந்து வந்தன. அது அவனுக்கே ஆச்சரியத்தைக்



கொடுத்தது.

அவள் திக்கென்று அதிர்ந்து மிரட்சியுடன் அவனை நோக்கினாள்.

"ச்சும்மா... விளையாட்டு! வரட்டா? இப்படி நீ அதிரும்போதும்... கோபப்படும்போதும் கூடுதலாய் அழகா இருக்கே!" சொல்லிவிட்டு சென்றான்.

அவன் போனதும் அந்த இடமே வெறுமையானது போலத் தோன்றியது, அவளுக்கு.

காயம் வலித்தது. அதைவிட, 'உன் அப்பா பெயர் என்ன?' என்று கேட்டது இன்னும் வலித்தது. அழவேண்டும் போல இருக்க... தேம்பித் தேம்பி அழுதாள்.

பசியெடுத்தது.

ஒரு உணவுப் பொட்டலத்தை நர்ஸ் நீட்டி... "அவர் வாங்கிக் கொடுத்துட்டுப் போறார்" என்றதும், அந்த உணவுப் பொட்டலத்தை வாங்கினாள். நர்ஸ் அகன்றதும் சுவரில் வீசினாள்.

அவளுக்கு இரவு நல்ல காய்ச்சல்! இல்லத்திற்கு 'போன்' செய்து சொல்லிவிட்டு... அநாதையாய் அழுகையோடு... சுருண்டு கிடந்தாள்.

இங்கே கவுதம் உண்ணாமல், உறங்காமல்– அவள் நினைவிலேயே தவித்தான். மீண்டும் மீண்டும் அந்த அழகு முகம் மனதில் வந்து குற்றம் சாட்டி... கண்கலங்கி நின்றது.

'கல்யாணம் செய்துக்க!' என்று தான்தானா சொன்னது என நம்பாமல், தன்னையே மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டான்.

'அவளை கல்யாணம் செய்துகொண்டால் எப்படி இருக்கும்?' – கேள்வியே தித்தித்தது.

எப்போது விடியும்? அவளைப் போய் பார்க்கலாம் என்று விடியாத இரவை சபித்துக்கொண்டே, விடியற்காலையில் நிம்மதியாய் உறங்கினான்.

இனி, நிம்மதியாய் உறங்கவே முடியாது என அறியாமல்!

3

**ம**றுநாள்...

பிறந்தநாள் கொண்டாட்டத்தை மாலை வைத்துக்கொ

பாவனாவும் அவனோடு வருவதாய் கூற... அவளையும் அழைத்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு வந்தான்.

"நீங்க ராத்திரி 'போன்' பண்ணியதும்... அந்தப் பெண் மேல் பரிதாபம் வந்துவிட்டது. அவ எப்படி இருக்கிறாளோன்னு கவலையா இருக்குத்தான்!" என்று பாவனா வருத்தப்பட்டாள்.

"எனக்கு ராத்திரி தூக்கமே வரல... ரத்தம் வடிய, வலியில் கண் கலங்கி அவ துடிச்ச துடிப்பும், அந்தக் கோபமான பார்வையும் சதா என் கண்முன்னே காட்சியளித்து மிரட்டியது. என்னை இம்சித்தது, வேதனைப்படுத்தியது பாவனா!" – கவுதம் மனம் கலங்கி சொன்னான்.

அவன் ஒரு பூங்கொத்தை கையில் பிடித்துக்கொண்டும்... பாவனா பை நிறைய ஆப்பிள், ஆரஞ்சு என்று தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு உள்ளே வரவும்... அதைக் கண்ட பிரியா கோபத்தின் உச்சிக்கே சென்றாள்.

அவன் பூங்கொத்தையும்... பாவனா பழங்கள் அடங்கிய பையையும் நீட்ட... நல்லப் பிள்ளையாய் இருவரிடமும் வாங்கியவள்... பின்னர் தூக்கி ஆத்திரத்துடன் வீசியடித்தாள்.

பூங்கொத்திலிருந்த அழகிய மலர்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் சிதறி கவுதமைப் பார்த்து சிரிக்க... பழங்கள் அத்தனையும் அறையெங்கும் ஓட.... காட்சியே கலவரமாய் இருந்தது.

"என்ன அத்தான்... இந்தப் பெண் பைத்தியம் பிடித்தவளா என்ன?" சந்தேகமாய் கேட்டாள் பாவனா.

"என்னங்க... என் மேல் அவ்வளவு கோபமா? ரொம்ப ஆத்திரமா இருந்தால் ரெண்டு அடி அடிச்சிருக்கலாம். அதைவிட்டுட்டு... எங்கள் அன்பை, பரிவை இப்படி கேவலப்படுத்தி இருக்க வேண்டாம்!" கவுதம் வருத்தத்துடன் சொன்னான்.

"போங்க... போயிடுங்க! என் கண்முன் நிற்காதீங்க!"

"ராத்திரி காய்ச்சல் வந்துடிச்சாமே... இப்போ பரவாயில்லையா?"

அவன் கேட்க– அவள் முறைத்துக்கொண்டே பதில் சொல்லாமல் இருந்தாள்.

"உங்க அப்பா, அம்மாவுக்கு தகவல்கிடைத்து வந்தாங்களா?"

இந்தக் கேள்வியால் பிரியாவின் கண்களில் நீர் முட்டி மோதி, கரையை உடைத்துக்கொண்டு வெளியே வரப் பார்க்க... அதை அடக்க பெரும்பாடுபட்டாள்.





"என்னைப் பற்றி சொன்னீங்களா? உங்க பெற்றோர் என்னை சபிச்சாங்களா?... சொல்லுங்க?" என்று அப்பாவியாய் கவுதம் கேட்க...

"எனக்கு கோபம் வருது! கண்டபடி திட்டிடுவேன். அதற்குள் மரியாதையா போயிடுங்க!" எரிமலையாய் பிரியா சீற... புரியாமல் கேட்டான்.

"அப்படி தப்பா எதுவும் கேட்டுட்டேனா?"

"நான் அநாதைன்னு தெரிஞ்சே கேவலப்படுத்தறீங்களா?" – பிரியா கண்களில் நீர் வழிய அழுதுகொண்டே கேட்கவும், இதயமெல்லாம் பதறி ஆடிப்போனான் கவுதம்.

"என்ன சொல்றீங்க?"

"எனக்கு அப்பா, அம்மா கிடையாதுன்னு தெரிஞ்சேதானே என்னை அவமானப்படுத்துறீங்க? ம்...!"

"இல்ல. எனக்கு தெரியாது! அப்போ ராத்திரியெல்லாம் துணைக்கு யாருமே இல்லாம தனியாய் தவித்தாயா? என்ன பெண் நீ? சொல்லி இருக்கலாம்தானே! சாரி... சாரிம்மா...!"

"என்ன சார்... சாரி?"

"எனக்கு தெரியாதும்மா. உன்னைப் பற்றி எதுவுமே தெரியாது! ஆமாம், எங்கே தங்கி இருக்கிறாய்? உன் அப்பா, அம்மா என்ன ஆனார்கள்?"

"உங்ககிட்ட சொல்லணும்னு அவசியமில்ல! முன்னே பின்னே தெரியாதவர்களிடம் என்னைப் பற்றி சொல்லணும்னு எனக்கு தலையெழுத்தில்லே!"

கவுதம் இதுபோல் யாரிடமும் அவமானப்பட்டதில்லை. அவனது பொறுமையைப் பார்க்க பார்க்க பாவனாவுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

"சரி... உன் பெயரையாவது சொல்லலாமே?"

"என் பெயரை கேட்க நீங்க யார்? போங்க வெளியே!"

"விரட்டறதிலேயே குறியா இருக்கியே! உனது பெயரென்ன... பிளீஸ்?"

"........"

"ராட்சசியா? அதுவும் அழகான ராட்சசியா என்ன?" அவ[n] சிரித்தபடி கேட்க...

"எவ்வளவு திமிர்"

"இவ்வளவு இருக்குமா?" என்று கவுதம் கைவிரித்து காட்டவு[m] சீறினாள்.

"நான்சென்ஸ்... வேற வேலையே இல்லையா? ஏன் இந்தப் பெண் அலுத்துட்டாளா?"

பாவனா திக்கென்று நிமிர்ந்தாள்.

"என்ன இது... விரசமான பேச்சு?" – கவுதம் கேட்க...

"ஏய்... நாக்கை அடக்கிப் பேசு!" பாவனா சொல்ல...

"நான் அப்படித்தான்டி பேசுவேன்! உன்னால என்னை என்ன செய்ய முடியும்?"

"................"

"அத்தான்... ச்சே! பாவம் பார்த்து வந்தது தப்பு. நீங்க வேண்டுமானால் இந்தப் பைத்தியத்தை கொஞ்சிட்டு இருங்க. நான் வரேன்!" – பாவனா ஆத்திரத்துடன் வெளியேறினாள்.

"அவளுக்கு இன்று பிறந்த நாள்! அந்த கொண்டாட்டத்தை விட்டுவிட்டு... உன்னைப் பார்க்க வந்த நல்லப் பெண்ணின் மனசை நோகடிக்கிறாயே... இது உனக்கு நல்லாயிருக்கா?"

"நான் அப்படித்தான் பேசுவேன். அவள் அலுக்கவும், என்னைத் தேடி வர்றீங்களா? இதுதான் உங்க தொழிலா?"

அவள் குற்றச்சாட்டு புரியாமல் அவன் விழிக்க...

"யாரையோ தேடி ஓடுவது போல ஓடி... உங்களுக்கு அந்தப் பெண்ணை பிடித்திருந்தால்... இடித்துத் தள்ளி... ஆஸ்பத்திரிக்கு போக வைத்து... பார்க்க வருகிற சாக்கில் அக்கறை காட்டிக்கொண்டு... இதுவரை எத்தனைப் பெண்களை உங்க வலையில் விழ வச்சீங்க?"

"ஏய்... நாக்கை அடக்கு! அதுபோல பொறுக்கி நான் இல்ல! எனக்கு என் தொழிலைப் பார்க்கவே நேரம் போதல. இதில் பொண்ணுங்க பின்னாடி எப்படி சுத்துவதாம்? அதற்கெல்லாம் நேரம் வேண்டாமா?"

"வேலையிருப்பவர் நேரே ஆபீசுக்குல்ல போகணும்! அதைவிட்டுட்டு எதுக்கு இங்கே வந்தீங்க?" குற்றவாளியிடம் கேள்வி கேட்பதுபோல கேட்கவும்– அசந்து நின்றுவிட்டான்.

"நம்மால் காயம்பட்டு ஆஸ்பத்திரியில் கிடக்கறாளேன்னு பாவம் பார்த்து வந்தால் என்ன பேச்சு பேசுகிறாய்? ம்?" என்று அவன் கோபமாய் மிரட்ட...

"நீங்க யார்... எனக்கு பாவம் பார்க்க?" சிறுகுழந்தையாய் கேட்டவளிடம்...

"ம்... உன் காதலன்! அதான் உன் மேல் இந்தளவுக்கு பரிதாபம்... அக்கறையெல்லாம்!" என்று கவுதம் கூறி... அவள் வாய்க்கு பூட்டு



போட... அவள் அதிர்ந்து அவனை நோக்க...

"இதை... இதையே 'கண்டிநியூவ்' பண்ணு! அழகா இருக்கு! அத்தான் மாலையில் வரேன்! 'பில்' கட்டிட்டு உன்னை அழைத்துப் போய் உரிய இடத்தில் விடுறேன்!"

"அத்தான்... பொத்தான்னா எனக்கு கெட்ட கோபம் வரும்! யாரும் இங்கே வரவேண்டாம்!"

"வருவேன்... கட்டாயமாய்! எனக்காக வழி மேல் விழிவைத்து காத்திரு! இந்த முழிப்பு ரொம்பவே அசத்தல்! ஐயோ... என் இதயத்தை கொள்ளை கொள்ளுதே! வரட்டா...?" கவுதம் கண்சிமிட்டி கம்பீரமாய் நடந்துபோனான்.

"அந்த திமிர் பிடித்தவளைப் போய் கொஞ்சிட்டு வருகிறீர்களே... அத்தான்!" என்று பாவனா குறைப்பட்டுக்கொள்ள...

"பாவம்... இரவெல்லாம் காய்ச்சல், காயத்தோடு அநாதையாய் படுத்திருக்கிறாள். இவள் இப்படி கஷ்டப்பட நான்தானே காரணம்! அவளுக்கு வடிந்த ரத்தத்தை போல உனக்கு வடிந்திருந்தால்... ஊரையே கூட்டி ரெண்டு பண்ணியிருப்பாய். உன் அம்மா, என் அப்பா– அம்மா, அரவிந்தன், நான் என்று உன்னை மாறி மாறி தாங்கி பார்த்திருப்போம். ஆனால், இந்தப் பெண் யாருமே இல்லாமல் அநாதையாய் இருப்பவள், எப்படி தாங்குவாள்... சொல்லு?"

"நீங்க இப்படித்தான் பேசுவீங்க! ஏன்னா அந்த அளவுக்கு அவள் உங்களை மயக்கியிருக்காள். நீங்களும் மயங்கிப் போய் கிடக்கீங்க!"

"நீ சொல்வது நூறு சதவீதம் உண்மைதான் பாவனா. ஆனால், நான் அதற்காக இப்படி பேசவில்லை. அவளுடைய நிலையை நினைத்துப் பார்! உனக்கே புரியும். யாருமே இல்லாமல் அநாதையாய் வாழ்வது கஷ்டமில்லையா? அவளது இடத்தில் நீ இருப்பதாய் கொஞ்சம் கற்பனை செய்துபார்... அவ வேதனைப் புரியும்!"

அவள் சிந்தித்தாள். "நீங்கள் சொல்வது சரிதான் அத்தான்! மாலையிலும் இங்கே வரப்போறீங்களா?" என்றாள்.

"ஆமா. அவளுக்கு 'பில்' கட்டிட்டு... அவள் இருப்பிடம் எங்கேன்னு பார்க்கணும் அல்லவா?" என்று புன்னகை புரிய...

"அப்போ... கூடிய சீக்கிரமே எனக்கும், அரவிந்தனுக்கும் 'லைன் கிளியர்' ஆகப்போவுது... இல்லையா அத்தான்?" என்று பாவனா கிண்டல் செய்து சிரித்தாள்.

"ஏய் வாலு... உதைப்படப் போறே!" என்று பொய்யாய் கையை ஓங்கினான்.

"ஆனாலும், இப்படியொரு கோபக்காரியோடு எப்படித்தான் குப்பைக் கொட்டப் போறீங்களோ? சதா துறுதுறுன்னு சந்தோசமாய் இருப்பவர் நீங்கள்! அவளோ சிரிக்கவே தெரியாத உம்மணாமூஞ்சியாய் இருக்கிறாள்! ம்ம்...!" என்று உதட்டைப் பிதுக்கி அழகு காட்டினாள், பாவனா.

எங்கே மாலையில் வருவானோ என்று பயந்து... கையில் இருந்த தொகையுடன்... கழுத்தில் கிடந்த தங்கச் செயினையும் கழற்றிக் கொடுத்தாள். சிறுக சிறுக சேர்த்து ஆசையாய் வாங்கியதை கொடுக்கவே மனம் இல்லாமல் கொடுத்தாள்.

"பணம் கொடுத்துட்டு மீட்டுக்கிறேன்" என்றாள்.

"வேணாம்மா... கவுதம் சார் திட்டுவார்" என்றாள் நர்ஸ்.

"எதற்கு திட்டணும்? என் மருத்துவ செலவுக்கு அவர் எதற்கு 'பில்' கட்டணும்? ம்..."

"வேண்டாம்... அவர் வந்தால்..."

"ப்ளீஸ்... பிடியுங்க!"

"உங்க அட்ரஸ்?"

"அவர்கிட்ட என் 'அட்ரஸ்' கொடுக்கக்கூடாது. பிராமிஸ்" என்றுவிட்டு, விலாசம் சொல்லிச் சென்றாள்.

மாலை வந்த கவுதமுக்கு ஏமாற்றம். 'ச்சே! என்ன பெண் இவள்?' என்று நொந்து... அவள் செயினை மீட்டுச் சென்றான்.

கொஞ்சம் பணத்தை நீட்டி... திரும்ப திரும்ப கேட்டு அதட்டவும்... அந்த நர்ஸ் விலாசம் கொடுத்துவிட்டாள்.

'ஏய்... என் உள்ளம் கவர்ந்த கள்ளி! நேரில் அங்கே வந்து உன்னை உண்டு இல்லைன்னு செய்கிறேனா... இல்லையான்னு பார்!' என்று உரக்க சொல்லி சவால்விட்டுச் சென்றான்.

'அவசரமாய் ஒரு வாரத்திற்கு வேலை விஷயமாய் வெளியூர் சென்று வந்ததும்... உன்னைப் பார்ப்பதுதான் என் வேலை பிரியா!' என்று மனதிற்குள் நினைத்துக்கொண்டான்–

விதி இனிதான் கண்ணாமூச்சி காட்டி... கண்சிமிட்டப் போகிறது எனத் தெரியாமல்!

4

ஒரு வாரம் கழிந்தது.



அன்று ஞாயிற்றுக்கிழமை. மாலையில் காரை எடுத்துக்கொண்டு வந்தான். அந்த இல்லத்து தலைமை 'சிஸ்டர்' மரியாளை ஏற்கெனவே தெரியும். ஆண்டுதோறும் ஒரு பெரிய தொகையை நன்கொடையாய் தருவான் கவுதம். புத்தாண்டில் ஆடைகளும், இனிப்புகளும் வாங்கி அனுப்பிவிடுவான்.

அலுவலக அறையில் அவன் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்க...

"கூப்பிட்டீங்களா சிஸ்டர்?" என்று கேட்டுக்கொண்டு பிரியா வந்தாள்... பாவாடை, சட்டையில்! கூந்தல் தரையை பெருக்காத குறையாய் நீண்டு வளர்ந்திருக்க– தேவதையாய் துள்ளி வந்தவள்... கவுதமை அங்கு கண்டதுமே கண்களில் எரிச்சலைக் காட்டி நின்றாள்.

"இங்குள்ள பெண்களுக்கு ஒரு விதிமுறை. வேலை கிடைத்தவுடன் வெளியேறிவிட வேண்டும். ஆனால், பிரியாவிற்கு மட்டும் விதிமுறையைத் தளர்த்தி இருக்கேன். நல்லபெண்! எதையும் சட்டென்று புரிந்துகொள்வாள். என் வளர்ப்பு பெண் போல இவள்! ஏம்மா... இவரால்தான் உனக்கு இந்த விபத்து நேர்ந்ததாமே... சொல்லவே இல்லையே?"

"........"

"தடுக்கி விழுந்துட்டதா சொன்னாப்பா! சாரை தெரியுமா? பெரிய ஆள். அவரோட கருணையும் நம் இல்லத்துக்கு உண்டு மகளே! வருஷமானால் ஒரு பெரிய தொகையை அனுப்பிடுவார். உன் உடல்நலனை விசாரிச்சிட்டு போக வந்திருக்கார்!"

"நல்லா இருக்கேன் சிஸ்டர். நான் என் அறைக்கு போகவா?" என்று அவள் திரும்ப...

"இது மரியாதையா மகளே? அவர் எங்கள் வளர்ப்பைப் பற்றி என்ன நினைப்பார்? எவ்வளவு தூரத்தில் இருந்து அக்கறையாய் உன்னைக் காண வந்திருக்கிறார்!"

"கொஞ்சம் பேசணுமே சிஸ்டர். உங்கள் அனுமதி கிடைக்குமா?" என்று கவுதம் கேட்க...

"ஓ... யெஸ்! போம்மா!" என்று அவரே அனுப்ப... பல்லை கடித்துக்கொண்டு... எரிச்சலை விழுங்கி... அவன் பின்னே சென்றாள்.

கவுதம் அந்த அழகான மர நிழலில் கிடந்த பெஞ்சில் அமர்ந்து... "உட்கார்!" என்று பக்கமாய் கைகாட்ட... அவள் சண்டைக் கோழியாய் சிலுப்பிக்கொண்டு நின்றாள்.

அவள் அழகையும், தோற்றத்தையும் விழி எடுக்காமல்... விழுங்குபவனைப் போல பார்த்தவன் சொன்னான்.

"நெற்றியில் சுருண்டு புரளும் முடி கூடுதல் அழகு!" என்று அவளது முன் நெற்றியில் சுருண்டு தென்றலோடு விளையாடிய முடிக்கற்றைகளைப் பார்த்துச் சொன்னான்.

அவள் எரிச்சலோடு கன்னங்கள் செழுமையுற நின்றாள்.

ஆண் வாசனையே அறியாதவள்...! அவனின் பாராட்டில் தடுமாறினாள்.

"உன்னை என்னால் பார்க்காமல் இருக்க முடியவில்லை பெண்ணே! எந்த நேரமும் என் கண்முன்னே நின்று கண்ணாமூச்சி ஆடுகிறாய்! உன் நினைவுகள் என்னை இம்சிக்கின்றன! நீ ஆஸ்பத்திரியில் இருந்து கிளம்பிய அன்றே வந்திருப்பேன். நீயோ கோபக்காரி! கத்துவாய். உன் உடல் நலம் பாதிக்கும் என்று விட்டுவிட்டேன். அப்புறம் தொழில் முறையாய் வெளியூர் சென்றேன். நிம்மதியாய் வேலை பார்க்க முடியாமல்... வம்படியாய் விரைவிலே உன் நினைவு என்னை வரவழைத்துவிட்டது. இந்த இடைப்பட்ட நாளில் நீயும் குணமடைந்திருப்பாய் என்று நினைக்கிறேன். உடம்பு பரவாயில்லையா?" ஆசையாய், ஆர்வமாய் கேட்டான்.

"உங்களுக்கு என்ன வேணும்? நான் ஆஸ்பத்திரியில் என் அட்ரஸை சொல்லக்கூடாது என்று சொன்னேனே? சத்தியம் வாங்கினேனே?"

"என்ன பெரிய சத்தியம் வாங்கிட்டு கொடுத்தே! உன் சத்தியத்தை என் 'கரன்சி' விலை பேசிடிச்சி!"

"காசு இருந்தா இந்த உலகில் என்ன வேணும்னாலும் செய்ய முடியும்... அப்படித்தானே?"

"தப்பு பெண்ணே! எல்லாம் வாங்கலாம்தான். ஆனால், இந்த மாதிரி அழகான பெண்ணின் அன்பை வாங்க முடியாதே!"

"என்ன பேச்சு ஒருமாதிரி இருக்கிறது? நீங்க யாருன்னே தெரியாது. என்னை எதுக்கு பார்க்க வந்தீங்க?" அவள் சீற்றத்துடன் கேட்டாள்.

"என்னைத் தெரியாதா? என்னைப் பார்!" என்றவன், அவள் விழியோடு தன் விழியை வைத்து நோக்க... திணறிவிட்டாள். சட்டென்று குனிந்துகொண்டாள். அவனது விழிகளின் வீச்சு அவளை என்னென்னவோ செய்தது!

"உன் காயம் எப்படி இருக்குன்னு பார்க்கணும்?"

"எதுக்கு பார்க்கணும்? உங்களுக்கும், எனக்கும் உறவு எதுவுமே



இல்லை! பார்த்தாச்சு இல்லையா? இடத்தை காலி பண்ணுங்க!"

"இப்படி விரட்டறீயே!"

"எனக்கு அசிங்கமா இருக்கு! எல்லோரும் என்னை நல்லவளாய் நினைத்து நல்லபடி நடத்துறாங்க. இதுபோல ஆண்கள் தேடி வந்தால்... அவர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பாங்க?"

"என்ன நினைப்பாங்க, ம்....?" புரியாமல் கேட்டான்.

"நான் உங்களை காதலிப்பதாய் தப்பா அர்த்தம் புரிந்துகொள்வார்கள். நீங்க என் ஆள், என் ஆம்பளைன்னு நினைத்து கிண்டல் செய்வார்கள்! என் தோழிகள் எல்லோரும் ஆண் வாசனையே அறியாமல் காய்ஞ்சி போய் கிடக்கிறாங்க! அவங்க வாய்க்கெல்லாம் அவல் கொடுத்தது போல ஆயிடும். இனிமேல் என்னைப் பார்க்க வராதீங்க" சத்தமாய் சொன்னாள்.

"நீ சொல்வது உண்மைதானே?"

"என்ன உண்மை?"

"நான் உன் ஆம்பளைதானே?" சொல்லிவிட்டு, கண்ணடித்து அவன் அழகாய் புன்னகைக்க... எரிச்சலானாள்.

"ச்சீய்... போங்க! இப்படி இனிமேல் வந்து அசிங்கப்படுத்தாதீங்க!" –அவள் கையெடுத்துக் கும்பிட்டாள்.

"உன்னைப் பார்க்க பிரியமாய், ஆசையாய் வந்தால் கோபப்படுறீயே பெண்ணே! சரி, நான் இனி இங்கே வரலை. நீயே சொல்... நாம எங்கே சந்திக்கலாம்?"

"எதுக்கு சந்திக்கணும்?" மிரட்டலாய், மிரட்சியாய் கேட்டாள்.

"உன்னை எனக்கு பிடிச்சிருக்கு! இந்தப் பிரியாவின் பிரியமானவன் நானல்லவா? பிரியா– கவுதம்! பேர் பொருத்தம்கூட ரொம்ப நல்லா இருக்கில்லையா?"


"ஐயோ... என்ன இது அசிங்கம்? ஏன் என்னை பாடாய்ப்படுத்தறீங்க? எனக்கு இது பிடிக்கல! சுத்தமா உங்களை பிடிக்கல! உங்க பேச்சு பிடிக்கல! உங்களைக் கண்டாலே பிடிக்கல! எரிச்சல் எரிச்சலா இருக்கு! போயிடுங்க!" அழாத குறையாய் சொன்னாள்.

"எனக்கு பிடிச்சிருக்கு! ஆசை வரும்போது பிரியாவை தேடிவருவான் இந்த கவுதம்!"

"அந்த கவுதம புத்தரோட பேரை வச்சிகிட்டு... ஏன் பொறு மாதிரி நடந்துக்கிறீங்க?"

"நாளை உன் ஆபீசுக்கே வரட்டா?"

"ஐயோ... சாமி! இங்கே அசிங்கப்படுவது போதாதா... அங்கே



ந்தால் என்ன செய்வேன் தெரியுமா?"
"என்ன செய்வாய்?"
"போலீசில் புகார் கொடுக்கவும் தயங்கமாட்டேன்!"
"நான் நீயாய் ஆன பின்னால்... என்னை அசிங்கப்படுத்துவது... ன்னையே அசிங்கப்படுத்துவது போலல்லவா?"
"சிஸ்டர்கிட்ட சொல்லுவேன்... இப்படி பேசினால்!"
"என்னன்னு சொல்லுவாய்? இந்தத் தடியன் தகாதமுறையில் டந்துகிறான்னு சொல்லுவாயா என்ன?"
"நீங்க ஒண்ணும் தடியனில்லே!" சொல்லிவிட்டு நாக்கைக் கடித்துக்கொண்டாள்.
"வர்ரே... வா... நான் தடியனில்லாமல் பின்னே என்ன?" அவன் நெற்றியை சுரு க்கிக் கேட்க...
"நான் வரேன்!" அவள் நகரப் போனாள்.
"அவ்வளவு எளிதில் விடுவேனா?" அவள் கையைப் பிடிக்க...
"ச்சே...! என்ன ஆம்பளை நீங்க? பார்த்து ஒரு வாரம்தான் ஆகுது. இப்படி வெட்கம் கெட்டு கையைப் பிடிக்கறீங்களே?" புயலாய் வார்த்தைகளை வீசினாள்.
"உன் கையைத்தானே பிடித்தேன்! ஏன் தப்பாக நடந்துவிட்டது போல கத்துகிறாய்?"
"கடவுளே..." காதைப் பொத்திக்கொண்டாள்.
"நான் உன்னை தொந்தரவு பண்ணாமல் போகணும்னா... நாளை சாயங்காலம் கடற்கரையில் சந்திக்கலாம், சம்மதம் சொல்"
"நான் வரமாட்டேன். ஏமாறப் போறீங்க?"
"வருவே... நிச்சயமாய் வருவே! என்னைத் தேடி வருவே! உன்னுள் நான் இருக்கிறேன்!"
"ஆசைதான்! என்ன உளறல்?"
"உன் இதயத்தைக் கேட்டுப் பாரு... தெரியும்!"
"எனக்கு அப்படியொரு எண்ணமில்லே!"
"பொய்! எண்ணமில்லாதவளாய் இருந்தால்... என்னோடு தனியாய் வர சிஸ்டரிடம் மறுத்திருப்பாய்!"
"உங்களுக்கு மரியாதை கொடுத்து வந்தது எவ்வளவு மடத்தனம்? பெரிய தப்பாப் போச்சே! கடைசியாய் கேட்கிறேன்... என்ன வேணும் உங்களுக்கு?"
"நீதான் வேண்டும்! உன் இதயம் வேண்டும்! உன் காதல் வேண்டும்! உன் நேசம் வேண்டும்!"
"ஏன், அந்தப் பெண் என்ன ஆனாள்?"

"என் அத்தைப் பெண்ணா? நான் அவளை காதலிக்... உனக்கு கற்பனை சக்தி அதிகம்! நீயாக ஏதாவது யோசனை செ... பேசாதே!"

"போர் அடிச்சிடிச்சா... அலுத்துட்டாளா?" கோபம... கேட்டாள்.

"என்ன உளறல்? பைத்தியக்காரி... வாயை மூடு!" அவன் கை... ஓங்கினான்.

"அவள் பிடிக்காமல் போரடித்துவிட.... புதுமலர் தேடுறீங்க... தேன் எடுக்க?" – நாக்கில் தீயை ஏற்றிச் சுட்டாள்.

"சத்தியமாய்... கனவிலும் அவளை காதலியாய் நினைச்சதில்லே... என் தம்பியை மணந்துகொள்ள போறவள்! அசிங்கமா பேசாதே!" எரிச்சலாய் சொன்னான்.

"நீங்க போகலன்னா... இன்னும் அசிங்கமாய் பேசுவேன்!"

"என் கனவில் வந்து சித்திரவதைப்படுத்தும் அழகான மோகினி பிசாசே! நாளை கடற்கரையில் உன்னை எதிர்ப்பார்ப்பேன் தவறாமல் வந்துவிடு!"

"எதற்கு... எதற்கு?"

"சுண்டல் வாங்கி ரெண்டு பேரும் சாப்பிட! கேட்கிறாள் பார் கேள்வி! மடச்சி... ஓடிப்பிடித்து மணலில் காதல் விளையாட்டு விளையாடத்தான்!"

"வேறு எவளையாவது தேடிப் பிடியுங்க! நான் மாட்டேன்!"

"நீ... நீதான் வேண்டும், என்னோடு விளையாட! அதுவும் அப்பா, அம்மா விளையாட்டு விளையாட!" கண்ணடித்து சொன்னான்.

"ச்சே... அசிங்கம்!" கண்களைப் பொத்திக்கொண்டாள்.

"என்ன அசிங்கம்? எது அசிங்கம்? இந்த வயதில் விளையாடாமல் பின்னே எந்த வயதில் காதல் விளையாட்டு விளையாடுவது?"

"போங்க... போயிடுங்க" – வெளியே போகும்படி கையைக் காட்டினாள்.

"போறேன். ஆனா நீ கண்டிப்பா வருவே... கட்டாயமாய் வருவே! வர்றேன்" என்று எழுந்து அருகில் வந்து... அவளது கன்னத்தில் லேசாய் தட்டிவிட்டுச் சென்றான்.

அவன் தொடுதலில் சிலிர்த்துப் போனாள்.

கவுதம் புன்னகையோடு சென்றான்.

'அவன் திரும்பிப் பார்க்கமாட்டானா?' என்று ஏங்கிய மனதிற்கு ஆத்திரமாய் ஒரு குட்டு வைத்தாள் பிரியா.

அவளைப் பார்த்த ஆனந்தத்தில் அவனோ உற்சாகமாய்



சென்றான்.

நாளை என்ன நடக்கப்போகிறது என்று தெரியாமல்!

## 5

**ம**றுநாள் மாலை. சீக்கிரமே வேலையை முடித்துக்கொண்டு... கடற்கரைக்குப் போனான் கவுதம். பிரியாவுக்காக காத்திருந்தான்.

ஆனால், காத்திருந்ததுதான் மிச்சம். அவள் வந்தபாடில்லை. அவன் பொறுமையை இழந்தான். அவள் மேல் எரிச்சல் பட்டுக்கொண்டே.... காரை வேகமாய் கிளப்பினான். மனம் புயலடித்த மாதிரி புலம்பியது.

'வந்து வச்சிகிறேண்டி!' – கறுவினான். அவள்மேல் உள்ள அத்தனை ஆத்திரத்தையும் 'ஸ்டீரிங்'கில் காட்ட... கார் பறந்தது.

சாலை ஓரமாய் அவள் நடந்து போக... பார்த்தவன் சுதாரித்தான். சட்டென்று ஓரமாய் காரை நிறுத்திவிட்டு... சாலையின் எதிர்பக்கம் ஓடினான். கார், ஆட்டோக்காரன் திட்டியதை காதில் வாங்கிக்கொள்ளாமல், "ஏய் ராட்சசி...! என் அழகான ராட்சசி...!" என்று அழைத்துக்கொண்டே ஓடினான்.

கவுதமின் குரலைக்கேட்டுபயந்தவள்– திரும்பிப் பார்க்காமல் நடந்தாள்.

"ஏய் ராட்சசி... மோகினி பிசாசே!" கத்திக்கொண்டே போய்– கையை நீட்டி வழி மறித்தான். அவனுக்கு மூச்சு வாங்கியது. வியர்வையில் குளித்திருந்தான்.

"என் வியர்வையை உன் சேலை முந்தானையால் துடைச்சி விடுடி!" சிரித்தபடி கேட்க...

அவள் மீறிக்கொண்டு போக... சட்டென்று கையைப் பிடித்தான்.

"ஐயோ... காப்பாத்துங்க! என்னை காப்பாத்துங்க! இந்தாளு என் கையைப் பிடிச்சி இழுக்கிறான். பிளீஸ்... "

அழகான பெண் இப்படி கத்தினால் கூட்டத்திற்கா பஞ்சம்? சிறு கூட்டம் அவசரமாய் கூடிவிட்டது.

கவுதமுக்கு அவமானமாய் போய்விட்டது.

"ஏய்... பார்த்தா பெரிய மனுசன் போல இருக்கே! புத்தியில்லே? ரோட்ல போற பெண்ணை இப்படியா வழி மறிச்சி அத்துமீறுவே?

அறிவில்லையா? விடுடா... அந்தப் பெண்ணை!" என்று பெரி
ஒருவர் கை ஓங்கி வர...

"அவள் கையை விடப்போறியா? இல்லையா?" என்று இளை
ஒருவன் அடிக்க ஆயத்தமாகி அருகில் வந்து நிற்க... அசந்துவி
கவுதம். பின் தைரியமாய்...

"யோவ்... உன் வேலையைப் பார்த்துட்டு போய்யா! இ
என் பொண்டாட்டி! என் மேல கையை வச்சீங்க... கம்பி எ
வச்சிடுவேன். புரியுதா? புருஷன், பொண்டாட்டி தகராறுல மூக்
நுழைக்க நீங்க யார்? போங்க... போங்கய்யா!"

"பொண்டாட்டியா?" கூட்டம் அத்தனையும் வாய் பிள
கேட்க...

"ஆமாம். எங்களுக்குள்ளே ஆயிரம் இருக்கும். உங்க வேலையை
பாருங்க!"

"இல்லை... இல்லை... இந்த ஆள் யாருன்னே எனக்கு தெரியாது
பிரியா கத்த...

"என்னப்பா?" என்று வயதான பெண்மணி கேட்க... சட்டென்
ஒரு யோசனை மனதில் உதிக்க... சொன்னான்:

"அம்மா... இவளுக்கு பைத்தியம்! பைத்தியம் பிடித்த
பொம்பளை! வீட்டுலேயே அடைஞ்சி கிடக்கிறாளேன்னு, வெளியே
அழைச்சிட்டு வந்தேன். அவள் ஒரு பொம்மை கேட்டாள். வாங்கி
தரலே! அதான் கோபிச்சிட்டு வந்துட்டா. ஏய் செல்லம்! வா,
கேட்ட பொம்மையை வாங்கித் தரேன்!" சிரிப்பை அடக்கியபடி
கவுதம், பிரியாவைப் பார்த்து சொல்ல...

"இல்லே... இல்லே..." என அவள் அழவும்...

"பைத்தியம் முத்திடிச்சி! என்னடா கழுத்துல தாலி இல்லைன்னு
பார்க்கறீங்களா? கையில கல்யாண மோதிரம் இருக்கு பாருங்க. என்
பேர் மைக்கேல். அவ பேர் நான்சி"

"இல்ல... என் பேர் பிரியா! இவர் என் புருஷனில்லே!"
கத்தினாள்.

"ஏய்... லூசே! வரப் போறியா... இல்லையா? கூட்டம்
போடாதீங்க... போங்க சார்!" என்று கையெடுத்து கும்பிட...

"அடடா... பெண் தேவதையாட்டம் இருக்கா! இவளுக்கு போய்
பைத்தியம் பிடிச்சிடிச்சே!"

"கடவுளே... ரொம்ப சின்னப் பெண்ணாய் இருக்காளே!
தம்பி, இத்தனை சின்ன வயசுலையா நீங்க இந்தக் கொடுமையை
அனுபவிக்கிறது?"



"டாக்டர் என்னப்பா சொல்கிறார்? சரியாயிடுமா?"

"எந்த ஜென்மத்து பாவமோ, இப்படி பைத்தியத்தோடு
மாரடிக்கறியே?"

"ரொம்ப நல்லவன் உன் கணவன். அடம்பண்ணாதேம்மா!"

"எங்காவது கொண்டுபோய்... இதுபோல பைத்தியத்தை விட்டுட்டு
போறக் காலத்தில்... இப்படி ஒரு நல்ல மாப்பிள்ளையா?"

"உன்னை நினைச்சால் பெருமையா இருக்கு தம்பி! பாப்பா...
இவருக்கு தொல்லைக் கொடுக்காமல் போம்மா! பொம்மையோடு
சாக்லெட், ஐஸ்கிரீம் எல்லாம் வாங்கித் தருவார்!" என்று ஆளாளுக்கு
சொல்லி நகர்ந்துவிட... அவர்கள் இருவர் மட்டுமே நின்றனர்.

"நீங்க என் புருஷனா? மூஞ்சியும், முகரக்கட்டையும் சகிக்கலே!"
பிரியா முகம் சுளித்து சொன்னாள்.

"என்னைவிட அழகான மன்மதனை பார்த்திருக்கியா?"

"தற்பெருமை...! தற்பெருமை மெல்ல கொல்லும் விஷத்துக்கு
சமம்! ஆமா, நான் பைத்தியமா?" வீறிட்டு கத்தினாள்.

"அப்படி சொல்லலைன்னா இவனுங்ககிட்ட யார் உதை
வாங்கிறது?"

"தனியா போறப் பெண்ணிடம் வழிமறிச்சி கலாட்டா
பண்றீங்களே... உங்களுக்கு வெட்கமா இல்லையா?"

"இல்லையே!" அவன் அழகாய் உதட்டைப் பிதுக்கி அழகுகாட்ட...
அவளுக்கு கோபம் அதிகமானது.

"சரி வா... வந்து கார்ல ஏறு! உனக்கு 'லாலிபாப்' வேணுமா?
ஐஸ்கிரீம் வேணுமா?" – கேட்க...

"உங்களை என்ன செய்வது?" ஆத்திரமாய் கேட்க...

"சொல்லட்டுமா? அப்படியே மாமாவை இறுக்கி கட்டிக்கிட்டு...
உதட்டுல ஒரு 'கிஸ்' அடிச்சிடு! செய்யறீயா? எனக்கு
சம்மதம்மா!"

"ச்சை... போடா!" என்று அவள் அலட்சியப்படுத்திவிட்டு
நகர–

"லேசில் விடுவேனாடி?" அவள் கையை இறுக்கமாய் பற்ற...

"விடுங்க... அசிங்கமா திட்டிடுவேன்!"

"திட்டுடி!"

"அடிப்பேன்! பொம்பளை கையால் அடிவா
அவமானப்படாதீங்க!"

"அடிடி... ஆஹா, நான் செய்த புண்ணியம்! அப்படியாவது
கை என் மீது படட்டும்!"

"உங்களுக்கு என்னதான் வேண்டும்? ஏன் இப்... நடந்துக்கிறீங்க?"

"நீதான்... நீதான்டி வேண்டு..."

"இப்ப பைத்தியம்... நானா, நீங்களா?"

"காதல் வந்தால்... இப்படித்தான் பைத்தியமாய் உ... தோன்றும்!"

"காதலா?" அவள் அதிர்ந்து சிலையாய் நிற்க...

அவளது அழகான உதட்டில் ஒற்றை விரலால் தடவி எடு... தன் உதட்டில் வைத்து முத்தமிட்டான்.

"ச்சே! என்னை நிஜமாகவே பைத்தியமாக்காதீங்க! பைத்தி... என்ன செய்யும் தெரியுமா? மேலே விழுந்து புரளும்! நகத்தா... பிராண்டும்! கடிக்கும்! செய்யட்டும்மா?"

"ஓ... நான் காத்துட்டு இருக்கேன். வா!" என இருக்கை நீட்... அழைக்க...

"என்னது... எல்லாத்துக்கும் கண்றாவியாய் அர்த்தம் எடுத்துட்டு..." முகத்தை சுளித்தாள்.

"முதல்ல காருக்கு வா!"

"மாட்டேன்!"

"அப்படியே அணைச்சி, அலாக்கா தூக்கிட்டுப்போனால்தா... உனக்கு பிடிக்குமானால்... அதை செய்யவும் நான் தயார்டி!"

"நான் உங்களுக்கு கிடைக்கமாட்டேன். அது நிஜம்!"

"அதையும் பார்த்துடலாம்! நீ வரப்போறீயா, இல்லையா... தூக்கிக்கவா?" அவள் அருகில் வந்து அவளைத் தூக்க ஆயத்த... செய்ய... அதற்கு பயந்து "கார் எங்கே?" என்று கேட்டு ஓடிப் போ... ஏறினாள்.

"ஏன் கடற்கரைக்கு வராமல் ஏமாற்றினாய்?"

"எனக்காக எதுக்கு காத்திருக்கணும்?"

"நேற்று அவ்வளவு சொன்னேன்! அப்படியும் அலட்சியம்... விட்டுடுவேனா? இன்னும் உன்னை சீக்கிரமே அடையணும்னு... வெறியே வருது! ஆமாம், என்னை ஏமாற்றியதற்கு என்ன தண்டனை... கொடுக்கலாம்?" காரை ஓரமாய் நிறுத்தினான். அவள் அருகில்... நகர்ந்தான்.

"என்ன இது? என்ன செய்யப் போறீங்க? தூரப் போங்க!" அவள்... பயந்து நகர... கதவருகே ஒண்டினாள்.

"ஒரு அழகான தண்டனைக் கொடுக்கப்போறேன். அது நிச்சயமாய்... உனக்குப் பிடிக்கும். என்ன...?"



அவள் எதிர்பாராத தருணம் அவளை இழுத்தணைத்தான். அவள் திமிறினாள். அவன் இன்னும் இறுக்கிக்கொண்டான். அவளது உதட்டை நோக்கி தன் உதட்டை கொண்டு செல்ல... அவள் முகத்தை இப்படியும் அப்படியும் அசைத்து... "நோ... நோ கவுதம்! வேண்டாம்! நான் பொல்லாதவளாயிடுவேன்! விடுங்க" என்றாள். அவன் பேச்சை கேட்கவில்லை. உதட்டில் முத்தமிட்டு கவ்விக்கொண்டான். பலத்த போராட்டத்திற்கு பின்பு தன் உதடுகளை அவனிடமிருந்து விடுதலை செய்தாள்.

"நாளை கடற்கரையில் எதிர்ப்பார்ப்பேன்டி! வரலே... இதைவிட மேலே போவேன். தெரியுதா? புரியுதா? கவுதமை ஏமாத்தலாம்னு மட்டும் நினைச்சிடாதே! நீ எங்கே ஓடி ஒளிஞ்சாலும்... கண்டுபிடிச்சி... இழுத்துட்டு வந்து... கார்ல தூக்கிட்டுப்போய்... இங்கே வச்சு இல்லே! மகாபலிபுரத்துல... கதறகதற... கத்தக் கத்த... துடிக்க துடிக்க... தவிக்க தவிக்க... ஏதாவது பண்ணிடுவேன். புரியுதா?" அவன் கடுமையாய் முகத்தை வைத்துக்கொண்டு மிரட்ட... பயந்து நடுங்கிவிட்டாள்.

"சும்மாதானே சொல்றீங்க?"

"வரலேன்னாதானே இந்தத் தண்டனை. நீதான் வரப்போறீயே! ஐ லவ் யூ! ஐ லவ் யூடி! என் முத்தம் பிடிச்சிருக்கா?" மன்மதனாய் புன்னகைத்து கேட்டான்.

அவள் முறைத்தாள்.

"பிடிச்சிருக்கு இல்லையா? அதான் வாயாடுறதை விட்டுட்டு அமைதியாயிட்டே அப்படித்தானே?"

"இல்ல... நான் எங்க வரணும்?"

"குட்! இப்பதான் நல்லப் பெண்ணாய் பேசுகிறாய்! மெரினாவுக்கு வந்துடு. யாருமில்லாத இடத்தில் நாம ரெண்டு பேர் மட்டும்..." அவன் கண்சிமிட்ட...

"ச்சே... இப்படி அசிங்கமாய் பேசினால் வரமாட்டேன்!"

"பேசிட்டு இருக்கலாம்னு சொல்ல வந்தேன்!" என்று கன்னத்தில் குழிவிழ சிரிக்க... தன்னைக் கேளாமலே அவள் மனம் அவனிடம் அடிமையானது.

ஆண், பெண் ஈர்ப்பு மிக வலிமையானது! கடவுள் மனிதர்களை ஆண்– பெண் என்று வேறுபடுத்தி படைத்திருப்பதே ஒருவர் மீது ஒருவர் ஈர்ப்புக் கொள்ளத்தான் என்று புரிந்தது.

அவனின் ஆண் வாசனையும், கம்பீரமும், குறும்புகளும்... அவளின் இதயக் கதவின் பூட்டுகளை தகர்த்து எறிந்தன.

'இதுவரை எந்த ஆணிடமும் சலனப்படாத நான்... எனக்கே

'சலனம்தானே சாத்தானுக்கு வரவேற்பு பாடும்!'

'கவுதம் நல்லவனா? கெட்டவனா?'– அவன் முகத்தை ஊடுரு

பார்க்க...

அவன் திரும்பவும் அவளை இழுத்து அணைத்து முத்தமி 'இனியும் இப்படி ஒரு கேள்வியா?' என்று தன்னை கேட்டுக்கொண்டாள்.

இனி அவனில்லாமல் அவளால் வாழமுடியுமா?

## 6

பிரியா இரவெல்லாம் அவன் முத்தமிட்ட உதட்டை தொட்டு தொட்டுப் பார்த்து மகிழ்ந்துபோனாள். தனக்கு இப்படியொ அழகன்... அன்பானவன் கிடைப்பான் என்று கனவிலு நினைக்கவில்லை. யாரிடமும் ஒட்டாமல்– படிப்பு, வேலையை தவிர எதுவும் தெரியாமல் இருந்தவளுக்கு அவன் அன்பு தித்தித்த அவளைத் திக்குமுக்காட வைத்தது! சின்ன வயதிலிருந்து அன்புக்கா ஏங்கி ஏங்கியே தவித்தவளை, கவுதமின் காதல் அடிமைகொள் வைத்தது!

வேற்று ஆணையோ, காதலையோ, காமத்தையோ அறியா பேதை...! கவுதமை முதன்முதலாய் பார்த்தபோதே அவளுக்கு சலனம்! அவள் அமைதியான இதயக்குளத்தில் ஆசை என் கல்லை வீசி சலனப்படுத்திவிட்டான் கள்வன்! கவுதமின் காதலி விழுந்துவிட்டாள், எழவே முடியாமல்! அவன் அணைத்து முத்தமிட்டது இனிமையாகவும்... அவ்வளவு சுகமாகவு இருந்தது.

இது சரியா? தவறா? அவனுக்கு தான் தகுதியானவளா? என்று கேள்வி மேல் கேள்விகேட்டு கலங்கினாள்.

கடற்கரை!

கவுதமுக்காக பிரியா ரொம்ப நேரமாய் காத்திருக்க... ஒருவழியா வந்து சேர்ந்தான். அவள் அருகில் அமர்ந்தான்.

"சாரி... சாரிடா செல்லம்!" கண்களால் கெஞ்சி மன்னிப் கேட்டான்.

"கவுதம்... நம் ஆசை நிறைவேறுமா?"



"என்ன இது... வந்ததும் வராததுமாய் மடத்தனமான கேள்வி அடுத்த மாதமே நம் திருமணம் நடக்க முயற்சி எடுக்கிறேன். இனி என்னால் தாங்கமுடியாது! கண்ட கண்ட கனவுகள் வந்து என்னை தூங்கவிடாமல் இம்சிக்குது தெரியுமா?"

"எப்போ பாரு ஒரே 'ரொமான்ஸ் மூடு'தானா? எனக்கு கவலையா இருக்கு. நான் உங்களுக்கு பொருத்தமானவளா?"

"அழகா இருக்கே! புத்திசாலி வேற! போதாதா?"

"நான் உங்களுக்கு ஏற்றவளா?"

"படிப்புள்ளவள்! ஆத்திரம் உள்ளவள்! கோபப்படச் சொன்னால்... அழகாய் கோபப்பட தெரியும்!"– புன்னகைத்தான்.

"என் தகுதிக்கு மீறிய ஆசையில்லையா... உங்களை காதலிப்பது?"

"தகுதின்னு எதைச் சொல்றே? பணத்தையா? அது கிடக்கு குப்பை! பணம் இன்று வரும்... நாளையே போகும்!"

"நான் அநாதையாச்சே?"

கவுதமுக்கு சுறுசுறுவென்று கோபம் வந்தது.

"ஏய்... இனி அப்படி சொல்லக்கூடாது. சொன்னால் எனக்கு கெட்டக் கோபம் வரும். கவுதம் கோபப்பட்டு பார்த்தது இல்லை இல்லையா?" சீறினான்.

மறுகணம் கவுமின் கையை எடுத்து கண்களில் ஒற்றிக்கொண்டாள்.

"யாரோடவும் ஒட்டாமல் இவ்வளவு நாள் எனக்குள் வட்டம் போட்டு வாழ்ந்து பழகிட்டேன். என்னை திருமணம் செய்தால் கஷ்டப்படுவீங்க. அதுவும் நிறையவே! நான் உங்களுக்கு தகுதியானவள் ஆகமாட்டேன். என்னை விட்டுடுங்க. அதுதான் உங்களுக்கு நல்லது!"

"ஏன் நீயா இப்படி கற்பனை பண்ணிக்கிறே? எங்க வீட்டுல எல்லாருமே நல்லவங்க, அன்பாய் இருப்பாங்க."

"என்னால் நீங்க அவமானப்பட நேரும். எனக்கு யாரையுமே பிடிக்காது! தெரியுமா?"

"என்னை எப்படி பிடிச்சது? அதுபோல என் அப்பா, அம்மா, தம்பி, பாவனா, அத்தைன்னு ஒவ்வொருத்தரா பிடிக்கும். என் பிரியா குட்டி மேல் எனக்கு பூரண நம்பிக்கை இருக்கு!"

"உங்க நம்பிக்கை வீண்போகப் போகுது! அப்புறம் வருந்துவதிலோ... என் மீது கோபப்படுவதிலோ புண்ணியம் இல்லை."

"விட்டா பேசிட்டே போவே! உன் வாயை எப்படி மூடுறதுன்னு

எனக்குத் தெரியும். செய்யட்டுமா?" என்று அவள் உதடு தோ...
குவிய...

"நோ...நோ..." அலறினாள்.

"வாயை மூடிக்குவியா? இனி பேசமாட்டியே?"

"ம்கும்... மாட்டேன்... மாட்டேன். போங்க!" அவனைப் பிடித்...
தள்ளினாள்.

"படுபாவி... ஆசையாய் வந்தால் தள்ளிவிடறீயே! ராட்ச...
உன்னை அப்படியே கட்டிக்கணும் போல இருக்கு! நீயா முத்...
தர்றியா? இல்லே என்னை முத்தமிட விடறியா? ரெண்டில் ஒண்...
செய்யணும்! உன்னை அருகில் வைத்துக்கொண்டு சும்மா...
இருக்க முடியலை. இறுகக் கட்டிக்கவா?" கண்களில் காதல் வழிய...
கேட்டான்.

"எப்போ பார் கட்டிக்கணும்... முத்தமிடணும்னேதான் பேசிட்...
இருப்பீங்களா? வேற நினைப்பே இருக்காதா?"

"நான் ஒண்ணும் சாமியார் இல்லையே! காதல்ல இதெல்லாம்...
சகஜம்தானே! நீ எந்த காதல் படமும் பார்த்தது இல்லையா...
நாளைக்கே ஏதாவது படத்துக்கு உன்னைத் தள்ளிட்டுப் போய்...
பால்கனியில் வச்சி சில்மிஷம் பண்ணினாத்தான் உருப்படுவே...
இல்லேன்னா அங்கே தொடாதீங்க... இங்கே தொடாதீங்க... தூ...
போங்க... ச்சே! எப்பொழுதும் முத்தம் பற்றிய நினைப்புதானான்னு...
முகம் சுளிப்பே! நாளைக்கு படத்துக்கு போகலாமா?" ஆசையா...
கேட்டான்.

"கல்யாணத்துக்குப் பிறகு போகலாம்!"

"கல்யாணத்துக்குப் பிறகு... நம் குழந்தையையும் தூக்கிட்டுப்...
போலாம்!" அவன் பழித்துக்காட்ட... பலமாய் சிரித்தாள்.

"சரி, எனக்கு களைப்பா இருக்கு. உன் மடி எதுக்கு இருக்கு...
நான் படுக்கணும்!" என்று அவள் எதிர்பாராத தருணம்– மடியில்...
தலைவைத்து படுக்க...

"முதல்ல எந்திரியுங்க... என்ன இது விவஸ்தை இல்லாம?"

"எனக்கே எனக்குன்னு இருக்கிற மடியில் படுத்தால் என்ன தப்பு...
நாம ரெண்டு பேரும் காதலர்கள். நாளைக்கு கல்யாணம் செய்துக்கப்...
போறோம்!"

"ஆமாம்... நெற்றியில எழுதி ஒட்டியிருக்கு பாருங்க! ஆமா,
நீங்க வர ஏன் இத்தனை தாமதம்? போற வர்ற பொறுக்கிகள்
எல்லாம் மொறச்சி மொறச்சி பார்த்துட்டுப் போறான்" – அவள்
கஷ்டத்துடன் சொல்ல...





"சாரி... சாரிடா! ஒரு பெண் வீட்டுக்கு போய் பஜ்ஜி, சொஜ்ஜி,
...ாயாசமெல்லாம் சாப்பிட்டு வர தாமதமாயிடிச்சி. சாரிடா பிரியா!"
...ன்று அவன் சிரிக்காமல் சொல்ல...

"என்ன?" என்று அதிர்ந்து கேட்டவள்... அவனைப் பிடித்து
...ழ தள்ளினாள்.

"ஏய்...ஏய்... என்னடி இது அநியாயம்?" என்றவன், மீண்டும்
...வள் மடி தேடி தலைவைத்துப் படுத்துக்கொண்டான்.

"இந்த... இந்த கோபமான முகத்தைப் பார்க்கத்தான் ஆசை
...ந்துச்சி. அது தப்பா?"

"அப்போ... பொய் சொன்னீங்களா?" அவன் தலைமுடியை
...காத்தாய் பிடித்து ஆட்ட...

"வலிக்கு... வலிக்குது! விடுடி! அட 'டீப் லைட்'டே! என்னை புரிஞ்
...க்கிட்டது அவ்வளவுதானா? என்னைக்கு இந்த அழகு தேவதையை
...தன்முதலா சந்திச்சேனோ... அன்றிலிருந்து வேறு பெண்ணை
...றெடுத்து பார்த்திருப்பேனா? உன்னைப் பார்த்த கண்ணால்...
...வறொருத்தியைப் பார்க்க முடியுமா?" அவன் பாடினான்.

"இது பெரிய பொய்தானே?" அவள் நம்பாமல் கேட்க...

"மெய்டி! ஏய் லூசே! உன்னைத் தவிர வேறொரு பெண்ணை
...னவிலும்கூட நினைக்கமாட்டேன்."

"உங்க அன்பு முழுக்க எனக்குத்தானே?"

"ஏய்... என்ன கேள்வி இது? இந்தக் கவுதம் பிறந்ததே உனக்கே
...னக்குத்தான்! என் உயிர்... என் உடல்... என் ஆத்மா எல்லாம்
...தானடி பெண்ணே! என் சொர்க்கம் நீதானடி! நீ இல்லேன்னால்
...ான் இல்லை! இதுவரை எந்தப் பெண்ணிடமும் கவுராத
...ான் உன்னிடம் கவுந்துட்டேனடி! எனக்கென்றே பிரம்மனால்
...டைக்கப்பட்டவள் நீ!" அவன் உருக்கமாய் பேசி முடித்தான்.

"அநாதை இல்லத்தில் வளரும் பரதேசியை தன்
...பயனுக்கு கட்டிவைக்க... எந்த அப்பா– அம்மாவுக்கு
...டிக்கும்?"

"பயப்படாதே... என் பெற்றோர் நல்லவங்க. அநாவசிய கவலை
...வண்டாம்! சொன்னால் புரிந்துகொள்வார்கள்!"

"புரிந்துகொள்ளவில்லை என்றால்..." அவள் மீண்டும் கேட்க...
...ரிச்சலானான்.

"பிரிஞ்சிடலாம். நம் காதலுக்கு 'டைவர்ஸ்' கொடுத்துடலாம்...
...ன்ன...?" – கவுதம் சட்டென்று சொல்ல...

இதைக் கேட்டவள் ஓவென்று அழுதாள். விக்கிவிக்கி அழுதா...

விம்மினாள்.

அவன் பக்கென்று சிரிக்க...

"என் கவலை... உங்களுக்கு சிரிப்பா இருக்கா?" அழுகையோடு கேட்டாள்.

"பின்னே உன்னைப் போல் அடிமுட்டாள் யார் இருப்பாங்க? விளையாட்டுக்கு சொன்னால்... அழுமூஞ்சி இப்படியா அழுவாய்? இந்த அளவு பழகிட்டு... விட்டுடுவேனா? நான் ஏமாற்றுக்காரனா? என்னைப் பார்த்தால் அப்படியா தெரியுது?

இந்த கவுதமை குறைச்சி எடை போட்டுட்டயே! நீயெல்லாம் நடிக்கப் போனால்... அத்தனை விருதுகளையும் ஒட்டுமொத்தமா தட்டிச் செல்வாய்! என்னே ஒரு உணர்ச்சி குமுறல் உன்னிடம்!" அவன் சொல்ல... அவனது மார்பில் குத்தினாள்.

"ஏய்... போதும், விடு! என்னால் தாங்கமுடியலை." "நீயே என்னை சாகடிச்சிடாதே!"

அந்த வார்த்தையைக் கேட்டவள், "கவுதம்...!" என்ற அலறலோடு அவனை அணைத்துக்கொண்டாள்.

"என்ன... இப்படி உன் இதயம் வேகமா துடிக்குது! கூல் பேபி... கூல்!" அவள் முதுகில் தட்டிக்கொடுக்க... அவளின் அழுகை அதிகமானது.

"இதோ... இதோப் பார்! இனி விளையாட்டுக்குக்கூட சங்கடப்படுத்தமாட்டேன்" என்றவன், அவளை வெறியோடு முத்தமிட்டான்... கன்னம், உதடு, நெற்றியென்று!

அவன் இதழ்கள் எழுதிய கவிதையால்... அவளுக்கு மனசெல்லாம் மத்தாப்பூ பூத்தது.

அவள் காதலைக் கண்டு ஆனந்தித்தான்– தீயாய் இந்தத் தென்றல் தீண்டப்போவது தெரியாமல்!

## 7

**மா**லை ஐந்து மணி அளவில்... பிரியாவின் மேசை மேல் இருந்த தொலைபேசி அலறியது.

'கவுதமாகத்தான் இருக்கும். அவனோடு அதிகம் வெளியில் செல்லக்கூடாது. கள்வன், நேற்று போல சந்தர்ப்பம் கிடைத்தால், மடியில் புரளுவதும்... கட்டி முத்தமிடுவதுமாய் வரம்பு மீறுவான். ஆசைகொண்ட என் மதிகெட்ட மனசும்... அது தப்பு என்று தெரிந்தாலும்... அவன் கொடுக்கும் முத்தத்தை இன்பமாய் பெற்றுக்கொள்ளும்.

வேண்டாம். இது கூடாது. அவன் அத்துமீறிவிட்டு... கைகழுவிச் சென்றாலும்... தனக்காக அவன் சட்டையைப் பிடித்துக் கேட்க... சொந்தம் என்று யாருமே இல்லை. எனக்கு நானே எமனாகாமல்... என் கற்பை காக்க வேண்டுமல்லவா? என்னை அவனிடம் இழந்துவிட்டால்... அதைவிடக் கேவலம் ஒன்றுமில்லை அல்லவா? விளக்கில் விழுந்த விட்டில் பூச்சியாய் ஆகிவிடக்கூடாது.

நேற்று அவனை மடியில் படுக்கவே விட்டிருக்கக் கூடாது. ச்சே! பாழாய்ப்போன மனது அவனைக் கண்டால் தேன் குடித்த மனமாய் போய்விடுகிறது. அவனை மறுத்து ஒரு வார்த்தை பேசமுடியாமல் ஆகிவிடுகிறது.

அந்த அளவு ஈர்ப்புகொண்டவனாய் இருந்தான். இவளை வீழ்த்துவது அவனுக்கு எளிது.

தன் தோழியிடம் ஜாடை காட்டி... "நான் இல்லைன்னு சொல்லு" என்றாள்.

"அலோ... தேவி பேசுறேன்..."

"பிரியாவைப் பேசச் சொல்லுங்க!" குரலின் அதிகாரத்திலேயே கவுதம் என்று அறிந்த தேவி...

"அவள் கிளம்பிட்டாள்!" என்றாள்.

"நீ அவள் உயிர்தோழியா? அல்லது உயிர்கொல்லி தோழியா?"

"சார்...சார் என்ன பேசறீங்க?"

"முதலில் போனை அவளிடம் கொடு!"

"அவள் இல்லே!"

"பொய் சொல்லாதே! போனை அவளிடம் கொடு!" அவன் எதிர்முனையில் மிரட்ட... பயத்துடன் பிரியாவிடம் நீட்டினாள்.

"என்னடி கள்ளி? எனக்கு ஏற்கெனவே காது குத்தியாகிவிட்டது. போனை 'கட்' பண்ணிட்டு... ஜன்னல் வழியே பார். நான் வந்துட்டேன். அரைமணி நேரமா உனக்காக கீழே தவமிருக்கேன். நீயா வர்றியா? இல்லே மேலே வந்து... அப்படியே கட்டியணைத்து... எல்லோரும் பார்க்க பார்க்க தூக்கிட்டு வரட்டுமா? உனக்கு எது பிடிக்கும்? இரண்டாவதாக சொன்னதா? ம்... பதில் சொல்லு."

"ஐயோ... அங்கேயே இருங்க. அப்புறம் இவளுங்க... கிண்டல் கேட்க... எனக்கு ரெண்டு காது பத்தாது!" கூறிவிட்டு... ரிசீவரை வைத்தாள். பையை எடுத்துக்கொண்டு பதற்றமாய் ஓடி வர... அங்கே

கவுதம் அழகான 'கூலிங் கிளாஸ்' அணிந்து– காரில் ம...
சாய்ந்து 'போஸ்' கொடுத்துக்கொண்டிருந்தான்.

அவனைக் கண்ணுக்குள் நிரப்பினாள்.

அவன் அழகு... அவள் உள்ளத்தை கொள்ளைகொண்...

"நான் உங்களோடு வரமுடியாது!" சொன்னாள்.

"ஏன்?"

"நீங்கள் கையை வைத்துக்கொண்டு இருக்கமாட்டீர்கள்!"

"வேண்டுமானால் ஒன்று செய். என் கை, காலை க... போட்டுவிடு!" கலகலவென சிரித்தான்.

"என்ன... கிண்டலா? எதற்கு வரணும்? வி... ஒண்ணுமில்லையே!"

"எதையாவது பேசி அறுக்காதே! என் வேதனையைப் புரிந்து... சரியாய் இருபத்தி நாலு மணி நேரம் ஆகிறது, உன்னைப் பார்... நரக வேதனையாய் இருக்கிறது. பேசாதே! ஒழுங்கா காரில் ஏ..."

"இதுநாள் வரை எப்படி இருந்தீர்கள்?"

"இதுவரை பெண் என்றாலும்... பெண் இவ்வளவு கொடுப்பாள்... போதைக் கொடுப்பாள்னு தெரியாது. காதல் என்னன்னே தெரியாமல் சாமியார் போல இருந்தவனை... முந்தானையில் முடிந்துவிட்டேயே?"

"என்ன இது பொய்யான குற்றச்சாட்டு?"

"பின்னே... சிவனேன்னு இருந்தேன். என் கண்ணிலும், கருத்தி... பட்டு... உள்ளத்தை கொள்ளைகொண்டு போய்விட்டாய்! இதயம் உன்னிடமிருக்க... இங்கே இதயம் இல்லாதவனா... இருட்டில் தவிக்கிறேன். வெளிச்சமாய் என்னை வழி நடத்த... வ... சீக்கிரம்!"

"இது என்ன பேச்சா? இல்லை கவிதையா? எப்போது கவி... ஆனீர்கள்?"

"உன்னைக் கண்ட நொடிதான் கண்ணம்மா!"

"கொஞ்சியது போதும்! வரல, நான் போகணும்!"

"ஏய் பாவி... வார்த்தையாடிட்டு இருக்காதே! உன்னை ... வீட்டுக்கு அழைத்துப் போகணும்! இனி நீயில்லாமல் என்ன... இருக்க முடியாது. அப்பா, அம்மாவிடம் சொல்லி... உன்... காட்டி... கல்யாணம் செய்துவைக்க சொல்லணும்!"

"ஐயோ... பயமா இருக்கு! ஒத்துப்பாங்களா?"

"எதுக்கு பயம்? சம்மதித்தால் தெரிந்து கல்யாண... ...த்துக்கலைன்னா திருட்டுக் கல்யாணம்!"– சொல்லிவிட்டு ...ரித்தான்.

"ஐயோ... என்ன பேச்சு? நான் திருட்டுக் கல்யாணத்திற்கு ...ருபோதும் சம்மதிக்கமாட்டேன்!"

"உன் சம்மதம் யாருக்கு வேணும்? சம்யுக்தையை குதிரையில ...தூக்கிட்டு பிருத்திவிராஜன் போன மாதிரி... இந்தப் பிரியாவை ...காரில் கடத்திட்டுப் போய் கல்யாணம் பண்ணிக்குவேன்!"

"உங்கள் தொல்லைக்கு அளவே இல்லையா?"

"இதுவே தொல்லையென்றால்... கல்யாணத்துக்கு பின்பு நான் ...செய்யும் குறும்புகளை என்னவென்று வர்ணிப்பாய்... ம்?" என்றவன், ...கண்ணாடியை கழற்றி கண்ணடித்தான்.

கார் கதவைத் திறந்துவிட... அவள் ஏறி அமர்ந்தாள்.

"எங்கே போறோம்... கடற்கரைக்கா?"

"உனக்கு சம்மதமென்றால்... அங்கே போய் அப்படியே ஒரு மூச்சு ...காதல் விளையாட்டு விளையாடிட்டு... அதன்பிறகு வீட்டுக்குப் ...போக சம்மதம். என்ன...?"

"சூழ்நிலை புரியாமல்... கிண்டல் பண்ணிட்டு!"

"பயப்படாதே! பக்கத்தில் பாயும்புலியாய் நானிருக்க... ...னக்கெதுக்கு பயம்? ஆமாம்... பையில பவுடர், சீப்பெல்லாம் ...இல்லையா?"

"எதுக்கு?"

உன்னைப் போல ஆபீஸ் போறவங்க... உள்ளே நுழையும்போது ...ப்படி போனீர்களோ... அதே போலத்தானே 'மேக்கப்' போட்டு ...திரும்புகிறீர்கள். அதான் கேட்டேன்!"

"எனக்கு அதெல்லாம் பிடிக்காது!"

"ஆமா... அதெல்லாம் இல்லாமலே தேவதை மாதிரி ...ஜொலிக்கிறாய்! 'மேக்கப்' எல்லாம் போட்டுக்கொண்டால்... ரோட்ல ...ஒரு ஆண்களுமே நடக்கமாட்டாங்க. எல்லோருமே உன் அழகில் ...மயங்கி... விழுந்துடுவாங்க, இல்லையா?"

அவள் கனல் வீசும் கண்களோடு முறைக்க...

"நெற்றிக்கண்ணை மூடிக்கொள் தாயே! சாம்பலாகி ...விடப்போகிறேன்!"

"உங்களைப் போய் பெரிய 'பிசினஸ்மேன்'னு சொன்னால் நம்பவே ...முடியலை! எப்போ பார் சிரிப்பும், கூத்துமாய்... சகிக்கலே!"

"ஏன், பெரிய 'பிசினஸ்மேன்'னா உம்மனாமூஞ்சியா ...இருந்தாத்தான் நம்புவீங்களா? பைத்தியக்காரி... வாழ்க்கையை

எளிதாய் எடுத்து...
"உங்களுக்கென்ன... எல்லோருமே இருக்காங்க. என்...
போல் அநாதையாய் தவித்திருந்தால்... செத்துப் போயிரு...
செத்து!"- அவள் சொல்ல... அவளது கையை எடுத்து நெ...
வைத்துக்கொண்டான்.
"பிரியா, நீ அநாதைன்னு உனக்கு இன்னும் ரொம்ப வருத்...
இருக்கா?"
"இருக்காதா பின்னே?"
"என்னைக் கண்ட பின்பும் நீ அப்படி நினைக்கலாமா?"
"மாடு இன்னும் பிடிக்கவே இல்லை! அதற்குள் நெய்க்...
ிருக்கும் ஆசைப்படலாமா?"
"வாயை மூடு! உனக்கு என்ன பிடிக்கும்? பட்டு பிடிக்குமா...
"இல்ல... பல உயிர்களுக்கு கல்லறை தோண்டிட்டு... அ...
ாரிக்கும் பட்டுச்சேலையை சுத்தமா பிடிக்காது!"
"நகை?"
"ம்கூம்!"
"பின்னே என்ன பிடிக்கும்? எதைப் பிடிக்கும்?"
"யாரைப் பிடிக்கும்னு கேளுங்க! கவுதம்! கவுதமை மட்டு...
க்கும்! நான் நேசிக்கும் மனிதன்... நான் பூஜிக்கும் தெய்...
க! உங்களைத்தான் இந்த உலகில் அதிகம் பிடிக்கும்!" அ...
சையாய் கண்கள் பளபளக்க சொல்ல...
"என்னடி பிரியா... உன் அன்பில் விழுந்தவனை... எழ...
டியாமல் பண்ணுகிறாயே!" என்று ஆச்சரியமானவன்... அவ...
க்கையால் இழுத்து அணைத்துக்கொண்டான். அவள் ...
ாில் அழுந்த முத்தமிட்டான்.
"ஐயோ... விடுங்க! ரோட்டைப் பார்த்து காரை ஓட்டுங்...
ங்களோட சந்தோஷமா வாழணும்னு கனவு கண்டுட்டு இருக்கே...
ா கனவில் மண்ணை அள்ளிப் போட்டுடாதீங்க கவுதம்! பிளீ...
வள் கெஞ்சுவது போல நடிக்க...
"என் பிரியா...!" என்று மேலும் இறுக்கினான். அவள் நிம்மதிய...
வன் நெஞ்சில் சாய்ந்துகொண்டாள்.
"ஏய் பிரியா... உனக்கு பாட்டு பிடிக்குமா? நல்ல...
டுவியா?"
"எனக்கு பாரதியார் பாட்டுன்னா இஷ்டம். ஏன், உயிருன்னு...
ால்லலாம். எல்லாப் பாட்டும் அத்துப்படி. பாடட்டுமா?"
"ம்..."





அவள் பாடினாள்.
"திக்குத் தெரியாத காட்டில்- உனைத்
தேடி தேடி இளைத்தேனே...."
அவளின் குரல் இனிமையாய் இருந்தது. நளினமும், குழைவும்
...ிதித்தன.
"கல்யாணத்துக்கு பிறகு... தினமும் என்னை மடியில்
...ாட்டு... பாடியே தூங்க வெச்சிடுவாய்னு நினைக்கிறேன்.
...ப்படித்தானே?"
"நீங்க பார்க்கத்தானே போறீங்க! இங்கே அன்பை ஏராளமா
...திரப்படுத்தி இருக்கேன். அது மடை திறந்த வெள்ளமாய்...
...முதமாய் உங்கள் மேல் பாயப் போகிறது!"
"சந்தோஷம்! உனக்கு கவிதை பிடிக்குமா?"
"எழுதுவேனே!"
"அப்படியா? ஒரு கவிதை சொல்லேன்!"
"திடீர்னு கேட்டால் எதைச் சொல்ல...ம்?"
கன்னத்தில் ஒற்றைவிரல் தட்டி, யோசித்துவிட்டு சொன்னாள்.
"வானமெங்கும் மேகக் கூட்டம்
பூமியெங்கும் வறட்சி ஓட்டம்
ஓ...மேகங்களே...!
மழைக் குழந்தை வேண்டாமென்று
'கருத்தடை'
செய்துகொண்டீர்களா?"
"சூப்பர் பிரியா! பார்க்க ஒண்ணுமே தெரியாத மாதிரி இருந்துட்டு...
...த்தனை திறமைகளை ஒளித்து வைத்திருக்கிறாயே... என் இதயம்
...ஷ்மீர் பனியில் நனைஞ்ச மாதிரி குளிர்ச்சியா இருக்கு!" என்று
...னந்தப்பட்டான்.
இனிதான் வேதனையை அனுபவிக்கப் போகிறோம் என
...றியாமல்!

## 8

**மா**லைத் தென்றலின் தாலாட்டில் மயங்கி... சூரியன் மேற்கு
...லைக்குப் போய் உறக்கத்தைத் தழுவிக்கொள்ள- சென்னை நகரம்
...ழகாய் விளக்குகள் ஏந்தி இரவை வரவேற்க தயாராகிவிட்டது.

...னுடைய பெற்றவர்களை சந்திக்கும் மனப்பக்குவத்தை ஏற்ப... ஒருவ...

...னர் அவளை அழைத்துச் சென்றான்.

...கப் பிரமாண்டமான கட்டடத்தின் முன் கார் நிற்க...

வீடு வந்தாச்சு! இறங்கு பிரியா" என்று சொல்ல...

...ாண்டியைக் கண்ட குழந்தையாய் நடுங்கிக்கொண்டே...

...னே சென்றாள்.

பங்களா பெரிசா இருக்கே!" தடுமாற்றத்துடன் சொன்ன...

'பங்களாவைப் போலவே அப்பா–அம்மா மனசும் பெ...

...படாதே!"– அவள் கையை கெட்டியாய்ப் பிடித்துக்கொண்ட...

...ந்த பிடியை விடாமலேயே உள்ளே அழைத்துச் சென்றான்...

இவ்வளவு பெரிய பங்களாவில் வாழ... என...

...தியிருக்கிறதா?'

இத்தனை அந்தஸ்தில் உள்ள கவுதமை காதலித்தது தப்பா...

இப்படி அறிவு ஜீவியாய் நினைத்துப் பார்ப்பதே தப்பு. நீ கவு...

...லாமல் வாழ்வாயா?'– மனம் கேட்டது.

முடியாது!'

கவுதம் இல்லையென்றால்... கிடைக்கவில்லையென்றால் எ...

...வாய்?"

...ாலமெல்லாம் கன்னியாகவே இருப்பேன்!'

...ன் உள்ளம் கேட்குமா? உன் உடல் கட்டுப்படுமா?'

கேட்கவில்லையென்றால்... தீயிட்டு கொளுத்திவிடுவேன்!'

மனிதராய் பிறப்பதே... ஒருமுறைதானே?'

அதற்காக... மனதில் ஒருவனையும், மடியில் ஒருவனை...

...ட்டு கொஞ்ச முடியுமா?'

காதல் என்ன ஒருமுறைதான் வருமா? ஒருவரிடம் மட்டும்தா...

...டுமா?'

பின்னே? ரோஜா செடியில் இன்று ஒரு பூவைக் கிள்ளினா...

...ள இன்னொன்று பூக்கும்! இது என்ன பூவா? காதல் அல்லவ...

...தல் கடைசிவரை ஒரு ஆணிடம் மட்டுமே வர வேண்டு...

...டம் காதல் கொள்வது அபச்சாரம்! இப்போதும்... எப்போது...

...னவன் கவுதம் மட்டுமே! அதை மாற்ற முடியாது! விதி வசத்தா...

...வன் வேறொருத்தியை மணந்தாலும்... இப்பிறவி முழுக்க எ...

...வன் அவன்தான்! அவன் தொட்ட உடம்பை வேறொருவ...

...விடமாட்டேன்!'



சந்திரசேகரன்–மீனாட்சி இருவரும் சோபாவில் அமர்ந்திருந்தனர். ...ருவரையும் புரியாமல் பார்த்தனர்.

"கும்பிட்டுக்க பிரியா!" என அவன் மெதுவாய் சொல்ல...

"வணக்கம்" என்று கைகுவித்தாள்.

"யார் இந்தப் பெண்?"

"பிரியா. நான் காதலிக்கும் பெண்! இவளை எனக்கு ரொம்பவே ...டிச்சிருக்கு! உங்களிடம் காட்டி... உங்கள் சம்மதம் பெற அழைத்து ...ந்தேன்" நேரடியாகவே கவுதம் அச்சமின்றி கூறியது அவளுக்கு ...டித்திருந்தது.

"உட்காரம்மா...!" என்று சந்திரசேகரன் கூற...

கவுதம் அவளை விட்டுவிட்டு... அன்னையின் அருகில் சென்று ...மர... பிரியாவிற்கு அவன் செயல் பிடிக்கவில்லை. நெஞ்சு ...ந்திற்று. சீற்றத்தை அடக்க பெரும்பாடுபட்டாள்.

"உன் அப்பா யார்?"

அவர் கேட்ட முதல் கேள்வியிலேயே சுருண்டாள்.

"என்ன செய்கிறார்? அரசாங்க வேலையா?... இல்ல ...னஸ்ஸா?"

அவள் கடுப்பாகி போனாள். 'இந்த அறிவுகெட்ட கவுதம் ...தலிலேயே என்னைப் பற்றி சொல்லிவிட்டு... அழைத்து ...திருக்கலாமல்ல? இப்படி அவமானப்பட வைத்துவிட்டானே!'

"நான் சொல்றேம்ப்பா"– இடையில் புகுந்தான் கவுதம்.

"பிரியாவுக்கு அப்பா– அம்மா இல்லை! ஒரு ஆதரவற்றோர் ...லத்தில் வளர்ந்து படித்தாள். அங்கேயே தங்கி வேலையும் ...ர்க்கிறாள். நல்லப் பெண்! அறிவாளி! நீங்களே பார்க்கறீங்க ...லையா... அழகானவள்! சமீபத்தில்தான் பார்த்தேன். பார்த்ததுமே ...னுள் பாதிப்பை ஏற்படுத்தியவள்! எனக்கு பிரியாவை ரொம்பவே ...டிச்சிருக்குப்பா!" குழைவான குரலில் கூறினான்.

அப்பா, அம்மா இருவருக்குமே கோபம் பொத்துக்கொண்டு ...தது.

"என்ன கவுதம்... வீட்டுக்கு மூத்தப் பிள்ளை, இப்படியா ...றிவுகெட்டு அலைவது?"

"எல்லாரும் என்ன நினைப்பார்கள். நம்ம அந்தஸ்துக்கு... நல்ல ...டும்பத்தில் பெண் எடுப்பதை விட்டுட்டு... ச்சே!"

"உன்னை எவ்வளவு உயர்வாய் நினைத்தேன்! கடைசியில் இப்படி ...ன் புத்தி விழுந்துடிச்சே?"

"நாளைக்கு தொழிலில் கஷ்டம் வந்தால்... கைதூக்கிவிட

ஆளில்லாமல் தவிப்பாயே?"

பெற்றோரின் கேள்விகளில் துவண்டான்.

"பிரியா கோபிச்சிக்க போறா! அவளை வார்த்தை... நோகடிக்காதீங்க... பாவம்!" என்றான்.

பிரியாவோ அவர்களின் ஒவ்வொரு சொல்லிலும் செத்தே... எப்படியோ தன்னை கட்டுப்படுத்திக்கொண்டு அமர்ந்திரு...

"மாமியார் வீட்ல சாப்பிட கொடுத்து வைக்கணும்!"

"நாளை ஒரு நல்லது கெட்டதுன்னு வந்தால்... நாம பார்க்கணும்! தேவையா? சீமந்தம், பிரசவம் எல்லாம் நம் தலை... விழும்!"

– பெற்றோர் தொடர்ந்து குறைகள் சொல்ல... கோபமா...

"வாயை மூடுங்க. உங்களுக்கு சம்மதமா... இல்லையா? ... சொல்லுங்க?" ஆவேசத்தோடு கேட்டான்.

"இப்படி பட்டுன்னு கேட்டால் எப்படி சொல்வது? தவம்... தவமிருந்து எங்களுக்கு கிடைத்தவன் நீ. கொஞ்சம் 'டைம்' கொடு... யோசிச்சி சொல்றேன்!" சந்திரசேகரன் கூற...

"இதுல யோசிக்க என்னப்பா இருக்கு? எனக்கு அவ... பிடிச்சிருக்கு. வாழப்போவது நான்! அதில் நீங்க என்ன... யோசிப்பது?"

"இவ முன்னாடி அப்பாவை அவமானப்படுத்தணுமா?... என்ன பிள்ளைடா கவுதம் நீ!" அம்மா கோபமாய் கத்தினாள்.

"பின்னே என்னம்மா... நீங்க அவ மனசை நோகடிக்க மா... பேசறீங்க! இதையெல்லாம் பார்த்துட்டு சும்மா இருக்கணு... உங்களைப் போல அவளும் எனக்கு முக்கியம்தான்!"

"பெத்து, படிக்க வைத்து, இத்தனை காலம் என்ன புண்ணி... இன்று வந்தவள் உனக்கு உசத்தியாடா?"– என மார்... அடித்துக்கொண்டு அம்மா அழ...

"அம்மா... ரெண்டு கண்ணுல எந்தக் கண் பிடிக்கும்னு கேட்டா... எதைன்னு சொல்வது?"

கவுதம் பேச்சு கொஞ்சம் ஆறுதலாய் இருந்தது.

பிரியாவின் மனதில் புயலடிக்க... கண்களில் கண்ணீர் வ... எழுந்தாள்.

"உனக்கு பிடிச்ச பெண்ணாப் பார்த்து அழைத்து வா! மறு... இல்லாமல் திருமணம் செய்து வைக்கிறேன்னு சொன்னீங்க... இல்லையா? அதெல்லாம் பொய்யா? வெறும் வார்த்தை...



...னமும்தானா? என்னப்பா நீங்க?"

"நீ இப்படி புத்திகெட்டு வருவேன்னு தெரியுமா?" அம்மா ...னாள்.

"ஒரு வாரம் அவகாசம் கொடுடா" அப்பா கேட்டார்.

"என்னவோ செய்யுங்க!" என்று சொன்னவன்... ...பித்துக்கொண்டு கிளம்பிய பிரியாவுடன் சென்றான்.

அவள் வேகமாய் நடக்க....

"பிரியா, ஏய் பிரியா... ப்ளீஸ் நில்லுடி!" எதிரில் போய் வழி ...க்க–

"தள்ளுங்க!" என்று சென்றவளின் கையை இறுக பற்றினான்.

"பிரியா... சொல்வதைக் கேளு! அழாதே! என் கண்ணுல்லே! ...பாவும், அம்மாவும் நல்லவங்க! தன் பிள்ளைன்னு வரும்போது ...சிக்கிறாங்க!"

"அப்போ அநாதைன்னா கேவலமா?"

"நான் சொன்னேனா? நாளை உன் பிள்ளையும் இப்படி ...ய்துட்டு வந்தால்... நீயும்தான் யோசிப்பாய்! அவங்க மறுக்கல ...யா! யோசிக்க அவகாசம் கேக்கறாங்க! அது தப்பா?"

"தப்புதான்! அவங்களுக்கு பிடிக்கலன்னா விட்டுடுவீங்களா?" ...ழகையோடு பிரியா கேட்க...

"எப்படி? எப்படி விடமுடியும்? நீ என் உயிரில்லையா? ...வங்க மறுக்கமாட்டாங்க! கவலைப்படாதே! நல்ல முடிவாய் ...ல்லுவாங்க!"

"எந்த முடிவும் சொல்ல வேண்டாம்! அவர்கள் கைகாட்டும் ...ண்ணை கட்டிட்டு சந்தோஷமா இருங்க! எல்லோரும் ...லிச்சவங்களையே கட்டிக்கணும்னா நூத்துல தொண்ணூற்று எட்டு ...ருக்கு கல்யாணமே ஆகாமல் இருக்க வேண்டியதுதான்!"

"சாகச் சொல்லு... செத்துடறேன்! ஆனா, இப்படியெல்லாம் ...சி என்னை வார்த்தையால் கொல்லாதே பிரியா!" அவன் ...தனையுடன் கூற...

"கவுதம்...!" என்று அவன் வாயைப் பொத்தி கதறினாள்.

"என்ன மடத்தனமாய் பேசுகிறாய்? ஏன்டா என் கண்ணில் பட்டுத் ...தொலைத்தாய்? ஏன் இப்படி என்னை காதலித்து கொல்லுகிறாய்? ...தோஷ பறவையாய் சுற்றித் திரிந்த என்னை ரெக்கையை முறிச்சி ...படிக்கைப் பார்க்கிறியா? ஏன்டா... என் பின்னாடியே சுற்றி ...து... அடாவடித்தனம் செய்து... என் மனதை அள்ளிக்கொண்டு ...ானாய்?"– தெருவில் ஓடினாள்.

# 9

பிரியா எப்படித்தான் பஸ் பிடித்து வந்தாளோ...!

படுக்கையில் விழுந்து போர்வையை போர்த்திக்கொ ஊமையாய் அழுதாள். சத்தம் போட்டு அழக்கூட அ முடியாத நிலை! அருகில் படுத்திருப்பவர்கள் எழுந்து என்ன என்று கேட்டுவிட்டால்... இந்த வேதனையை எப்படி சொ என சத்தமில்லாமல் தலையணையை நனைத்தாள்.

கண்ணீர் வற்றிப்போகும் அளவுக்கு அழுது தீர்த்தாள்.

கவுதமை காதலித்துவிட்டு புயலில் சிக்கிய புள்ளிமா தவித்தாள்.

மறுநாள் ஆபீஸ் போக முடியவில்லை. மனதைப் போ அலட்டிக்கொண்டதில் காய்ச்சல் அனலாய் சுட்டது.

கவுதம் வருவான் என்று எதிர்பார்த் து... ஏங்கி ஏமாந்தது மிச்சம். அவன் வரவேயில்லை!

'ஆஸ்பத்திரிக்குப் போ!' என்று சிஸ்டர் கூறியும் போகா மாத்திரையை போட்டுக்கொண்டு அறையிலேயே முட கிடந்தாள்.

அடுத்த நாள்... கவுதம் வந்தான்.

பிரியாவின் உடல்நிலை பற்றி சிஸ்டர் கூற... தவிப்புடன் பெ அமர்ந்திருந்தான்.

பிரியா நடக்க முடியாமல் மெதுவாய் வந்தாள். கவுதம் ப போனான்.

"பிரியா... பிரியா... என்னடாம்மா? உடம்புக்கு என்ன? கிளம் ஆஸ்பத்திரிக்கு போலாம்!" அவன் அவசரப்படுத்த...

"நான் வரமாட்டேன்!" அவனை ஏறெடுத்துப் பாரா நிலத்தை நோக்கி சொன்னாள்.

"ஏன்?"

"எனக்கு உங்களைப் பிடிக்கல! உங்க முகத்தைப் பார்க் சுத்தமாப் பிடிக்கல! எதுக்கு வந்தீங்க? நொந்து கிடப்பவளை மே



ாகடிக்கவா? போங்க... போயிடுங்க!" ஆவேசமாய் கத்தினாள்.

அவள் பேச்சு தந்த வலியால் அவன் துடித்தான்.

"எப்படி போகமுடியும்? என் உயிராய்... உணர்வாய்... பேச்சாய்... னவள் நீ! உன்னைவிட்டு எப்படிடா போக முடியும்?"

"இப்படி உருகி உருகி வசனம் பேசுவதையெல்லாம் விட்டுடுங்க! தார்த்தம் என்னன்னு தெரியாமல்... உங்க அழகிய வார்த்தைகளில் யங்கின பிரியா... நேற்றோடு செத்துட்டாள். உங்களை எதிர்பார்த்து... மாந்தப்பவே... என்னோட ஆசைக்கும், காதலுக்கும் பெரிசா சமாதி டிட்டேன்! நீங்க போறீங்களா?" அவள் நாக்கு நெருப்பு குழம்பை கியது போல சுழன்று தாக்கவும்... வெளிறிவிட்டான்.

"நேற்று முக்கியமான தொழில் விஷயமாய் வெளியூர் போன ன்னால் திரும்ப முடியலை. இப்போதான் வந்தேன். வந்த உடனே ன்னைத் தேடி வந்தேன்!"

அவள் நம்பாமல் எரிமலையின் சீற்றத்தோடு பார்க்க...

"உண்மைம்மா! உன் மேல் ஆணை! அவசர வேலை! சாரி... ரிடா...!"

"சாரியா? உங்களை மன்னிக்க நான் யார்?"

"அப்படியெல்லாம் சொல்லாதே! என் காதலியும் நீதான், என் ண்டாட்டியும் நீதான்!"

"இப்படியெல்லாம் பேச வெட்கமா இல்லை?"

"என் பிரியாவிடம் அப்புறம் எப்படி பேசுவதாம்?"

"பொண்டாட்டியாம் பொண்டாட்டி! நடக்காததை சொல்ல வமானமா இல்லையா?"

"ஏன் நடக்காது?"

"உங்க பெற்றோர் சம்மதமில்லாமல்... நான் கல்யாணத்திற்கு துக்கமாட்டேன்!" முடிவாய் சொன்னாள்.

"அவங்க சம்மதம் கிடைச்சாச்சே!"

"எப்படி? எப்போ?"

"நீ அழுதுட்டு ஓடினாயே... அப்போ திரும்ப உள்ளே போய்... ளக்கோ விளக்கென்று விளக்கியதும் புரிந்துகொண்டார்கள். பானில் உன்கிட்ட சொல்லி இருக்கலாம். ஆனால், நேரில் சால்லத்தான் ஆசை. உன்னை அப்படி பேசி அவமானப்படுத்தியதற்கு ருத்தப்பட்டார்கள்! உனக்கு இப்ப சந்தோஷம்தானே?"

"எப்படி சந்தோஷப்படுவது? என்னை அந்த அளவுக்கு வதனைப்படுத்தி அனுப்பியவர்கள்...திடீர்னு ஒத்துக்கொண்டால்

ல்லவர்கள் ஆகிவிடுவார்களா ? வீட்டுக்கு வந்து அவர்களை என்ன செய்கிறேன் பாருங்க!"

"ஏய் பிரியா... பொய்யாய்த்தானே பேசுகிறாய்?"

"சத்தியம்!"

"இது சரியில்லை! அப்புறம் என் நிம்மதி போய்விடும்! நீ அப்படிப்பட்டவளாய் இருக்கமாட்டாய்! எனக்குத் தெரியும்!" அவளைப் பார்த்து புன்னகைத்தான்.

"அப்பா தேதி கூட பார்த்துட்டார். அடுத்த மாதம் கல்யாணம்!" அவன் சொன்னான். "நாளை தயாரா இரு! நம்ம வீட்டுக்கு வந்துடு! சரியாய் ஐந்து மணிக்கு வருவேன். சரியா?"

| ராணி முத்து சந்தா விவரம் | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |
| **வெளிநாடுகள்** | |
| ஒரு ஆண்டு | ரூ. 1225 |
| ஆறு மாதம் | ரூ. 615 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:
மேலாளர்,
"ராணி முத்து",
சென்னை–600 007.

"பாலையும், பூனையையும் ஒரே இடத்துல யாராவது விடுவாங்களா?"

"ஏய்...ஏய்... நான் பூனையா?"

"வெறும் பூனையல்ல! கடுவன் பூனை! புரிஞ்சிட்டா சரி!"

அவள் கலகலவென சிரிக்க... அந்தச் சிரிப்பில் சொக்கிப் போனான் கவுதம்.

"நாளை தயாரா இருக்கியா ?"

"இல்ல கவுதம்! திருமணத்துக்கு முதல் நாள் மண்டபத்துக்கு வருவேன். புரிஞ்சிதா ?

"அம்மா- அப்பா பேசியதை மனதில் வைத்துக்கொண்டு... எதற்கு இந்த வீண் பிடிவாதம்? சேலை, நகைன்னு உனக்கு பிடிச்சதா எடுக்கணும்!"

"எனக்கு பட்டுச் சேலையோ, நகையோ பிடிக்காது! உங்க கையால தாலியும், கூரைச் சேலையும் மட்டுமே போதும் !"

பிரியாவைப் பெருமையாய்ப் பார்த்தான் கவுதம். பிறகு சொன்னான்.

"நல்லா இருக்குமா? பாவனா நிறைய நகை போட்டுக்குவா,

பேராசைக்காரி!"

"ரெண்டு திருமணமும் ஒன்றாகவா நடக்கப் போகுது?"

"என்னைவிட அரவிந்தன்தான் பறந்தான். சின்னஞ்சிறுசு ஒண்ணுகிடக்க ஒண்ணு ஆயிடுமோன்னு அப்பா- அம்மா கவலை. அவனுக்கும் வயசாகுதுல்லையா?"

"எனக்கு பிடிக்கலையே!" முகத்தைச் சுளித்தாள்.

அது அவனுக்கு பிடிக்கவில்லை.

"பெரியவர்களை மறுத்துப் பேச முடியல. அலைச்சல், ம... மிச்சம். இல்லேன்னா... அப்புறமாய் அவங்க கல்யாண வே... நம் தலையில் முடியும்! நாயாய் பேயாய் அலையணும். தே... பிரியா?"

"உங்களுக்கு சரின்னு பட்டால் எனக்கும் சம்மதமே!"

"ரொம்ப ரொம்ப சந்தோஷம் பிரியா!" ஆனந்த... சிரித்தான்.

அவனுக்கு தெரியாது... இனி சிரிக்கவே முடியாது என்று!

## 10

நாட்கள் மெதுவாய் நகர்ந்தன.

இரவெல்லாம் பனி பொழிந்து நகரை வாட்டி வதைக்கிற... என்றால், பகலெல்லாம் கோபம் கொண்ட பெண்ணைப் போ... தன் கிரகங்களால் சுட்டு எரித்தான் சூரியன்.

இல்லத்திற்கு வந்து சிஸ்டரிடம் பிரியாவைப் பார்க்க அனும... கேட்டுவிட்டு... வழக்கமான பெஞ்சில் அமர்ந்தான். பிரியா சோக... உருவாய், இறுகிப் போன முகத்துடன் வந்து அமர்ந்தாள்.

"பிரியா நம் வீட்டுக்கு வந்து தங்கிக்கடா!"

"எதுக்கு? நான் பிடிவாதக்காரி! சொன்ன மாதிரி கல்யாணத்துக்... முதல் நாள்தான் வருவேன்!"

"இது நல்லா இருக்கா?"

"எனக்கு புடிச்சிருக்கு! என் தன்மானத்தையும், சுயமரியாதையு... சுயகவுரவத்தையும் விட்டுட்டு... என்னைப் பிடிக்காத மனிதர்க... உள்ள வீட்டில் வந்து தங்கமாட்டேன்!"

"உன்னை பிடிக்காமலா கல்யாணத்துக்கு ஒத்துகிட்டாங்க?"

"ஆயிரம் குறை சொல்லி மறுத்தவர்களிடம்... நீங்கள் கெஞ்சி...



...த்தாடி... யார் கண்டார்கள், அழுது கண்ணீர்விட்டு... காலில் ...ழுந்து சாதித்தீர்களோ... என்னவோ!"

"இது அநியாயம்! வயதானவர்கள், தன் பிள்ளையென்று வந்ததும் ...கொஞ்சம் யோசித்தார்கள். அவ்வளவுதானே?"

"அவ்வளவுதானா? என்ன புளுகு! என்னை வைத்துக்கொண்டு ...த்தனை பட்டம் கட்டினார்கள். நினைத்தால் நெஞ்சமெல்லாம் ...ரியுது!"

"பெரியவர்கள் ஏதோ பேசிவிட்டார்கள்! அவர்கள் என் பெற்றோர்! என்னைப் பத்து மாதம் சுமந்து, பெற்று, வளர்த்தவர்கள். இப்படி ஒரு அழகான, அறிவான, அம்சமான, திறமைசாலியான பிள்ளையைப் பெற்று... உனக்குக் கொடுக்க இருக்கிறார்களே... அதற்காக மன்னிக்கக் கூடாதா?

"........"

"ஏன், எனக்காக அந்தச் சம்பவத்தை உன் நினைவிலிருந்து அழிக்கக்கூடாதா? மறக்கக்கூடாதா? என்னோடு புறப்படு!"

"மாட்டேன்!"

"இதுதான் உன் முடிவா?"

"மீறி வற்புறுத்தினால் இந்தக் கல்யாணம் வேண்டாம்!"

"என்ன சொல்றே?" அதிர்ந்து போய் கேட்டான் கவுதம்.

"நான் மட்டும் சிவனேன்னு இருந்தேன். என்னைச் சுற்றி சுற்றி வந்து... அடாவடி பண்ணி... அசைக்கவே முடியாதபடி என் இதயத்துல ஏறி உட்கார்ந்துகிட்டு... ஏன் இப்படி வேதனைப்படுத்தறீங்க? உங்களை நான் சந்திச்சே இருக்கக்கூடாது. கடவுள் உங்களை சந்திக்க வச்சி பழிவாங்கிட்டார். எனக்கெல்லாம் கல்யாணம் ஒரு கேடா? கல்யாணம், புருஷன், புள்ளக்குட்டின்னு கனவுகளும், கற்பனைகளும் இல்லாமல் இருந்த என்னை இப்படி கெடுத்து... உங்களிடம் உருக வச்சி கஷ்டப்படுத்தறீங்களே! ஐயோ... நான் பழைய பிரியா ஆகமாட்டேனா?" கண்ணீர் வடித்தாள்.

"எதுக்கு ஆகணும்?"

"எனக்கு பிடிக்கலே!"

"யாரைப் பிடிக்கல?"

"மனுஷங்களை!"

"ஏன் இப்படி பேசறே? உனக்கு யார் மேல கோபம்? என் மேலா?" தவிப்புடன் கேட்டான்.

"ம்கூம்! உங்க ஒருத்தர்கிட்ட மட்டும்தான் கோபமே வரல. எனக்கு இந்தச் சமுதாயத்தின் மீதுதான் கோபம்! என்னை அநாதையாய்

ஆக்கிட்டுப் போன... என்னைப் பெற்ற படுபாவிகள் மேல் கோபம்! என்னை அநாதையென்று இழிவாய் பேசியவ பார்த்தவர்கள் மேல்தான் கோபம். எனக்கு வாழவே பிடிக்காமல் வாழ்ந்துட்டு இருந்தேன். கடவுள் கொடுத்த உயிரை நா மாய்த்துக்கொள்ள பிடிக்காமல்தான்... ஏனோ தானோ வாழ்ந்துட்டு இருந்தேன். என்னை இப்படி உங்க அன்பால் கட் போட்டீங்களே! உங்களிடம் என்னை விழ வைத்த என் மனசு இதயத்தையும் சுட்டுப் பொசுக்கணும் போல ஆத்திரம் ஆத்தி வருது!" கண்ணீர்விட்டான்.

"என்ன பிரியா இப்படி பேசறே? நீ இப்படி பேசும்போது என கஷ்டமா இருக்குடா! நான் இருக்கேன் பிரியா, உனக்கு தே கொடுக்க! உன் சந்தோஷத்தைப் பார்த்து மகிழ!

நான் ஒருத்தன் இருக்கும்போது உனக்கு அநாதை எ உணர்வு வரலாமா? உனக்கு பெற்ற தாயாகவும், தந்தையாக சகோதரனாகவும், சகோதரியாகவும், கணவனாகவும் மாறி ம உன்னை என் கண்ணுக்குள்ளே வச்சிப் பார்த்துக்குவேன் பிரிய என்னை நம்பறியா?"

"உங்களை நம்பாமல் யாரை நம்புவேன்? எனக்கு இருக் ஒரே பிடிப்பு நீங்கதான்! உங்களைப் பார்த்த பிறகுதா வாழணும்னே எண்ணம் வருது" அவன் கையை கெட்டியா பிடித்துக்கொண்டாள்.

"ஆனால், திருமணம் நெருங்க நெருங்க... இந்த அநாதைக்கு இ ஒரு கேடா, தேவையான்னு தோணுது கவுதம்! எனக்கு வாழ பிடிக்காதது போல இருக்கு இப்ப!"

"உன்னை தனியே விட்டா நீ இப்படித்தான் எதையாவது போட் மனசை கஷ்டப்படுத்திக்கொள்வாய்! போலாம் பிரியா!"

"எங்கே?"

"விடிய விடிய ராமாயணம் கேட்டுட்டு... சீதைக் ராமன் சித்தப்பாவான்னு கேட்ட கதையா இருக்கே! எ வீட்டுக்குத்தான்!"

"என்னை வற்புறுத்தாதீங்க கவுதம். இது மட்டும் வேண்டாம் பிளீஸ்..."

"சரி! நீ என்ன சின்னப் பிள்ளையா? ரெண்டு அடி அடிச் இழுத்துட்டுப் போவதற்கு?"– சொன்னவன் முகத்தை உர்ரென்று வைத்துக்கொண்டான்.

"கோபமா... என் காதலருக்கு?"



"ஆமான்னு சொன்னால் என்னோடு புறப்பட்டுவிடுவாயா... என்ன?"

"அது மட்டும் மாட்டேன்!"

"உனக்கு தேவையானதை வாங்கணும்!"

"எனக்கு நகையென்றால் மஞ்சள் கயிற்றில் கோர்த்த தாலியும், சேலையென்றால் கூரைப் புடவையும் போதும்னு அன்றே சொன்னேனே!"

"நீ இப்படியெல்லாம் பேசும்போது உன்மேல் அன்பும், அக்கறையும் கூடுதுடி பிரியா!" செல்லமாய் அவள் கன்னத்தில் தட்டினான்.

"எனக்கு நீ... நீங்க மட்டும் போதும்! இந்த உலகில் வேறு எதுவும் வேண்டாம்!" அவன் தோளில் சாய்ந்து நிம்மதியாய் அழுதாள்.

அன்புக்காகவும், பாசத்துக்காகவும் ஏங்கியே கரைந்தவளை ஆதரவாய் பற்றினான், கவுதம்!

"ஏய் அழுமூஞ்சி, நா...நான் மட்டும் போதுமா? கண்ணைத் துடைச்சிட்டு என்னைப் பார். என்னைப் போல குட்டி கவுதம்... உன்னைப் போல குட்டி பிரியான்னு வேண்டாமா?" கூறிவிட்டு சிரிக்க...

அவள் கண்களைத் துடைத்துவிட்டுச் சொன்னாள்.

"ம்கூம்! எனக்கு ரெண்டு போதாது! வருஷத்துக்கு ஒண்ணுன்னு வரிசையாய் பிள்ளைகள் வேணும். ஆமாம்... சொல்லிட்டேன்!" சுட்டு விரல் நீட்டி அழுகையோடு கூற...

"நான் ரெடிம்மா...!" என்று அவளருகில் அவன் போக...

"ச்சே...!" என்று தள்ளிவிட்டாள் கவுதமை! அவர்கள் இணைந்து கலகலவென சிரித்தார்கள்.

## 11

விடியாத வேளை! இருட்டோடு மின்மினிப் பூச்சியாய் மண்டபத்தில் உள்ள வண்ண விளக்குகள் விளையாடிக் கொண்டிருந்தன.

பிரியா தன் இல்லத்து தோழிகளோடு படுத்திருந்தவள்... எழுந்து குளித்தாள். எளிமையான சேலையைக் கட்டிக்கொண்டாள்.

மீனாட்சி பட்டுச் சேலை, தட்டு நிறைய நகை சகிதமாக– அலங்கரிக்கும் பெண்ணோடு வந்தவள்... திகைத்து நின்றாள்.

"என்னம்மா? அதை அவிழ்த்துப் போட்டுட்டு... இந்தச் சேலை உடுத்திக்கோ! இந்த நகையைப் போட்டுக்கோ! உனக்கு அலங்கா பண்ணிவிடத்தான் இவங்க வந்திருக்காங்க!" என்றாள்.

மீனாட்சியைப் பார்த்ததும் ஆத்திரம் ஆத்திரமாய் வந் இரண்டு முறை 'இல்ல'த்திற்கு பார்க்க வந்த பெண்மணி பார்க்காமலேயே திருப்பி அனுப்பினாள்.

"மன்னிக்கணும்! எனக்கு இப்படி இயற்கையாக இருப்பது பிடிக்கும்! நகைக்கும், சேலைக்கும் அலைபவள் நானல்ல!" எ துடுக்காய் பேச... மீனாட்சி துவண்டாள்.

"அன்றைக்கு அப்படி பேசியதற்கு மன்னிக்கணும்மா!" என்ற மீனாட்சி.

"உங்களை மன்னிக்க நான் யார்? வற்புறுத்தாதீங்க! போங் என்று கூறவும், மறுபேச்சு பேச முடியாமல் மீனாட்சி சென்றா திரும்பவும் கவுதமோடு வந்தாள்.

"என் முடிவை மாத்திக்கமாட்டேன்! நான் பிடிவாதக்கா எனக்குன்னு சில கொள்கைகள் இருக்கு! அதை நான் மீறமாட்டே சொல்லுங்கள் சிஸ்டர்!" என்றாள்.

அங்கே நின்ற சிஸ்டரும்... "ஆமாம் கவுதம். அவளுக்கு சரியென் படுவதை செய்வாள். அவளை மாற்ற முடியாதுப்பா" என கூ இருவரும் அவ்விடம்விட்டு அகன்றார்கள்.

அப்படித்தான் அன்று கவுதம் வந்து திருமணப் பத்திரிகையி சேர்க்க அவளுடைய தாய், தந்தை பெயரைக் கேட்க... சிஸ்டர் சொல் வாயெடுத்தபோது... பிரியாவே முன்னே வந்து சொன்னாள்.

"எனக்கு அப்படி யாருமே இல்லை. நான் கடவுளோட பிள்ளை அப்படியே போட்டுக்குங்க. அல்லது சிஸ்டர் மரியாள்தான் எ பாதுகாவலர். அவர் பெயரைப் போடுங்கள்!" என்றாள்.

மணவறையில் அழகே உருவாய் கவுதம் அமர்ந்திருக்க... அ அழகனுக்கு மேலும் அழகு சேர்க்கும் விதமாய்... ரதியாய் இருந்தா பிரியா.

பாவனாவின் அருகில்... அவளுடைய அம்மா ஜெய அத்தை மீனாட்சி, சந்திரசேகரன் மற்றும் உறவுப் பட்டாளங்க குழுமியிருக்க...

பிரியா அருகில் சிஸ்டரும், இல்லத்து தோழிகள் சொற்ப பே நின்றிருக்க...

நகரே திரண்டு எதிரில் அமர்ந்து இருந்தது. "கெட்டிமேளம், கெட்டி மேளம்" என்று அய்யர் கூற... கவுதம், பிரியா கழுத்திலும்,



ரவிந்தன், பாவனா கழுத்திலும் தாலி கட்டினர்.

பாவனாவுக்கு தந்தை இல்லை! ஆனால், பிரியாவுக்கு உறவென்று யாருமே இல்லை! அதனை நினைக்க... நினைக்க அழுகை முட்டி மோதிக்கொண்டு வந்தது. அவளால் கண்ணீரை கட்டுப்படுத்த முடியவில்லை. அனலில் விழுந்த புழு தத்தளிப்பது போல... மணமேடையில் அமர்ந்து தத்தளித்தாள்... தவித்தாள்.

"பிரியா..." என்று கவுதம் தோளோடு தோள் இடித்து– "என்ன? அழுமூஞ்சி! எந்த நேரத்தில் அழுவது? ம்..." என்று மெதுவாய் கூறினான்.

"நன்றி.. நன்றி கவுதம்!" சுற்றிலும் உள்ள மனிதர்கள் என்ன நினைப்பார்கள் என்ற எண்ணமோ, அருவருப்போ இன்றி கண்ணீர் வழியும் கண்களோடு கும்பிட்டாள். தாலியையும் கண்ணில் ஒற்றிக்கொண்டாள்.

அவன் கையால் தாலியை கட்டிக் கொண்ட பின்... அவனைவிட்டு அகலாமல்... அவனோடே இருந்தாள். அதில் ஒரு சுகம் அவளுக்கு!

மதியமே வரவேற்பு!

கூட்டம் அதிகம். பிரியாவை அனைவரும் புகழ்ந்தனர்.

"பெண் தேவதைப் போல இருக்காள்!"

"என்ன ஒரு சூப்பரான பொருத்தம்! கவுதமுக்காகவே பிறந்தவள் போல... என்ன அழகு!"

"எளிமையா இருக்கா. ஆனால், ஆளை அசர அடிக்கும் அழகு! அப்படியே நிஜ மகாலட்சுமி பூமிக்கு இறங்கி வந்துட்டா போல இருக்கு!"

அப்படி சொல்லும்போது மலர்ந்தவள்,

"பெண் அநாதையாம்!" என்றதும் வாடிப்போனாள். துடிதுடித்துப் போனாள். துவண்டு போனாள்.

"கவுதம், வாங்க... வாங்கன்னு சொல்லியே களைச்சி போயிட்டீங்க! வருகிறவர்களை சிரிப்போடு வரவேற்று... உங்க கன்னமெல்லாம் வலி எடுத்திருக்கும்! கொஞ்ச நேரம் உட்காருங்க!" அக்கறையோடு அவனைப் பிடித்து நாற்காலியில் அமர்த்தினாள்.

"பிரியா... சும்மா இரு! அது மரியாதை குறைவாய் போய்விடும். எனக்கு களைப்புமில்லே! கன்னத்துல வலியுமில்லே!" சொல்லி எழப் போனவனை...

"முடியாது. உட்காருங்க!" வம்படியாய் பிடித்து அமர்த்தினாள்.

"அடடா.. என்னம்மா வேர்த்திருக்கு!"என்று கைக்குட்... அவன் முகத்தில் இருந்த வியர்வையை ஒற்றி விலகினான்.

"வேண்டாம் பிரியா!" எல்லோரும் பார்க்கிறாங்க. எ... இருக்கு! அரவிந்தனையும், பாவனாவையும் பார். அ... பொறுப்பாய் வந்தவர்களை வரவேற்கிறார்கள். விடு!"

"என் கணவனுக்கு துடைச்சி விட எனக்கு உரிமையில்லை... எதுக்கு அசிங்கம்? நான் உங்க பொண்டாட்டிதானே?"

"எல்லோரும் பார்க்கிறார்களே!"

"பார்க்கட்டுமே!"

"தெரியாமல் சொல்லிட்டேன்!"

"என்ன தெரியாமல் சொல்லிட்டீங்க? ம்..."

"கண்ணுபடுமேன்னு அப்படி சொன்னேன்!

"பேச்சை மாற்ற வேண்டாம்! என்னிடம் பேசும்போது பார்... பேசணும்!"

"நான் இப்போ என்ன செய்யணும்?"

"இந்த கூல்ட்ரிங்சை குடிக்கணும்!" ஒரு பாட்டிலை எடு... நீட்டினாள்.

"வயித்துல இடமில்லை. பிரியா வேண்டாமே!"

"குடிக்கப் போறீங்களா... இல்லையா?"

"மாட்டேன்!" சின்னக் குழந்தையாய் அவன் அடம் பிடிக்க...

"என்ன மாட்டேன்! வாயைத் திறங்க!"என்று வாயில் வைக்க... கஷ்டப்பட்டு குடித்தான்.

"இரண்டு மணி நேரத்துல ஐந்து பாட்டிலை உள்ளே தள்ளியிருக்... நான் சாப்பிட வேண்டாமா?"

"நிறைய சாப்பிட வேண்டும்!"

"உன் தொல்லைக்கு... அன்புத்தொல்லைக்கு அள... இல்லையா? உன்னிடம் மாட்டிக்கொண்டேன். இனி எப்படித்தா... சமாளிப்பேனா!"– சலிப்பாய் சொல்வது போல அவன் நடிக்க... அவள் சிரித்தாள்.

அவளின் அபரிமிதமான அன்பு அவனுக்கும் பிடித்திருந்தது.

இரவு எட்டு மணிக்கு வீடு வந்தார்கள். உறவுகள் எல்லா... காலியாக இருந்த அறையில் போய் படுத்துவிட...

ஹாலில் இரண்டு ஜோடி மணமக்களும், சந்திரசேகரன், மீனாட்சி... ஜெயாவும் இருந்தனர்.

சந்திரசேகரன் சொன்னார். "தேனிலவுக்கு எந்த ஜோடி முதலில்...



போகிறீர்கள்? கவுதம் நம்ம தொழிலுக்கு... யாராவது ஒருத்தர் இருக்கணும்! யார் போவது என்று முடிவு செய்துகொள்ளுங்கள். நான் சொல்வது புரியுதாப்பா?"

கவுதம் என்ன சொல்வானோ என்று அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் பிரியா.

"அரவிந்தன் போகட்டும்பா!" என்று கவுதம் சொல்ல... காற்று இறங்கிய பலூன் போலானாள், பிரியா.

பாவனா சந்தோசத்தில் துள்ளிக்குதிக்க.. அதனைக் கண்டு எரிச்சலானாள். சுறுசுறுவென கோபம் தலைக்கேறியது, பிரியாவுக்கு!

"வேண்டாம் அண்ணா! அண்ணியும், நீங்களும் போங்க! நான் தொழிலைப் பார்த்துக்கிறேன்!"

"மடையா... அதிக பிரசங்கி. எனக்கென்ன அவசரம்? நான் சுற்றிப் பார்க்காத நாடுகளா? நீயும், பாவனாவும் போயிட்டு வாங்க! 'டிக்கெட்' ஏற்பாடு பண்ணிட்டேன்! நாளைக் காலையில் கிளம்பணும்! சரியா?" என்று கவுதம் ஆணையிட...

"அண்ணி ஏதாவது நினைக்கப் போறாங்க!" என்று அரவிந்தன் இழுக்க...

"பிரியாவா...? நீயா ஏதாவது கற்பனை பண்ணிக்காதே! போ... போய் சந்தோசமா இரு!"

"சரிண்ணா!"

பாவனா மகிழ்ச்சியில் மலர... பிரியா சூரியனைக் காணாத தாமரைப்பூ போலானாள்.

நல்ல நாளாய் இருப்பதால் இன்றே முதலிரவு.

அலங்கரித்த அறைக்கு அரவிந்தனும், கவுதமும் சென்றனர்.

பாவனா நன்கு தன்னை அலங்கரித்துக்கொண்டாள். நகைக் கடை விளம்பரப் பெண்ணாய் மாறி... மீனாட்சி தந்த பால் சொம்பை ஆனந்தமாய் வாங்கிக்கொண்டு சென்றாள்.

பிரியா எந்தவித அலங்காரமும் செய்துகொள்ளாமல் நிற்க... மீனாட்சி தயங்கியபடியே... "அலங்கரிச்சிகலையா பிரியா?" எனக் கேட்க...

"எனக்குப் பிடிக்காது!"– வழக்கமான பதில் பட்டென்று வந்தது. மீனாட்சி நீட்டிய பால் சொம்பை... வேண்டாவெறுப்பாய் பெற்றுக்கொண்டாள்.

பிரியாவின் வருகைக்காக முகமெல்லாம் மலர்ச்சியுடன்... எதிர்பார்ப்புடன் கவுதம் காத்திருக்க– உணர்ச்சியை துடைத்த

"இதை -அப்புறம் பார்த்துக்கலாம்! பிரியா வாழ்க்கையில மறக்கமுடியாத நாள் இந்தப் புனிதமான முதலிரவு. வாழ்க்கையில் ஒருமுறை மட்டுமே வரும் பொன்னான நாள். நீ வீணா வம்பு பண்ணாதே! என் பொறுமையை சோதிக்காதே!" அவனைத் தூக்கப் போக... போர்வையின் மறுபுறமாய் புரண்டுபோய்... அவனுக்கு முதுகுகாட்டிப் படுத்துக்கொண்டாள்.

"எந்த நிமிடம் உன் கழுத்தில் தாலி ஏறியதோ... அந்த நிமிடமே... நீ என்னுடையவள்! என் சொத்து! நான் நினைச்சா உன் அனுமதி இல்லாமலே... உன்னை அத்துமீறி அடையவும், அனுபவிக்கவும் முடியும். பெண்ணோட அனுமதியில்லாமல் தொட்டால்... நமக்கும், மிருகங்களுக்கும் என்ன வித்தியாசம்னு பார்க்கிறேன். நான் மனுசனா இருப்பதும், மிருகமாய் மாறுவதும்... உன் கையில்தான் இருக்கு!" மிரட்டினான்.

"........"

"என் உரிமையை நிலைநாட்டவா? பிரியா... நீ அப்புறம் தாங்கமாட்டாய், சொல்லிட்டேன்!..."

"ஓகோ... சாருக்கு அப்படியொரு கீழ்த்தரமான புத்தி இருக்கா? நீங்க தாலி கட்டிட்டா... எனக்கு பிடிக்கலைன்னாலும், தலையை ஆட்டிட்டு நாயா உங்க பின்னாடி குரைச்சிட்டு நிற்கணுமா?" சீறாய் சீற...

"ச்சே...!" என்று சலித்துக்கொண்டு... கோபத்தை அடக்கியவன் கட்டிலில் போய் அமர்ந்தான்.

"பிரியா... என் பி.ஏ. நடிகை ஷீலா போல இருப்பாள்! செம உடம்பு! கம்மா தளதளன்னு... நச்சுன்னு இருப்பாள்!"

பிரியா புரியாமல் அவனைப் பார்த்துக் கேட்டாள்.

"அதுக்கென்ன?"

"மகாபலிபுரம் போலாம் சார்ன்னு துளைச்சிட்டே இருப்பா. "மகாபலிபுரம் போலாம் சார்ன்னு நான் கயாண பத்திரிகையை கேட்டிங்க எப்போ வச்சுக்கலாம்னு நான் கயாண பத்திரிகையை நீட்டும் வரையும்... என்னைப் பார்த்து ஜொள்ளுவிட்டு கேட்டுட்டே இருந்தாள்."

பிரியாவிற்கு அவன் பேச்சின் அர்த்தம் புரிந்து... இதயத்தில் ஒரு இடி. வேகமாய் எழுந்து அமர்ந்தாள்.

"நாளைக்கு அவளோடு மகாபலிபுரம் போகப் போறேன்!" என்று மத்தகாசமாய் புன்னகை புரிய... விலவிலுத்து புறப்பட்ட அம்பாக வந்தாள். அவன் சட்டையை கொத்தாய் பிடித்தாள்.

"பொம்பளை பழக்கமிருக்கா? உங்களுக்கு அப்படி ஒரு கெட்ட

பழக்கமிருக்கா? சொல்லுங்க... சொல்லுங்க?"

"இதுவரைக்கும் என் கற்பை கட்டிக்காத்து வைத்திரு… நீதான் சரியான பொண்டாட்டியா நடந்துக்கலையே! எதுக்காக பிரம்மசரியம் காக்கணும்? நாளைக்கு என் பி… 'பிக்கப்' பண்ணிட்டுப் போய்... 'காட்டேஜ்' எடுத்து தங்… கற்பையெல்லாம் வீணடிச்சிட்டு வரப்போறேன்!" சிரிப்பை… சொன்னான்.

"உங்களுக்கு அப்படியொரு ஆசையிருக்கா? உங்களை விடுவே… என்னைப் பார்த்தால் ஏமாளியா தெரியுதா? எனக்கு துரோ… நினைப்பீங்களா? எனக்கு துரோகம் செய்வீங்களா?" அவ… மல்லாக்க தள்ளி... அவன் மேல் ஏறி உட்கார்ந்து... கன்னத்… அறைந்தாள். மார்பில் குத்தினாள்.

"சொல்லுவீங்க?... நீங்க எனக்கு மட்டுமே வேண்டும்!"

"வலிக்குது பிரியா! போதும் விடு!"

"என் கவுதம்! என்னுடைய கவுதம்!" வெறிகொண்டவள்… அவன் மார்பில் விழுந்து புரண்டு அழ... அவளை இறு… அணைத்துக்கொண்டான்.

"நீ... நீங்க வே...வெறொருத்தியை நினைக்கக் கூடாது!" சி… குழந்தையாய் நடுங்கியவளை மூச்சுமுட்ட அணைத்தான். அவ… சொர்ப்பழ உதட்டை சிறை செய்தான். அவளது உடல் நடுங்கி… இதயம் வேகமாய் அடித்துக்கொண்டது.

"ஏய் பிரியா... இங்கே பார்! சும்மா... சும்மாடா! உன்னை… என்னிடம் வரவழைக்கவே பொய் சொன்னேன்!"என்று சிரிக்க…

அவள் திமிறி முரண்டு பிடிக்க... அவன் மூர்க்கமாக- அங்கே… ஊடலும், கூடலும் போட்டி போட... அவள் தன்னை இழந்து… முழுவதும் அவனுடையவள் ஆனாள்.

அன்று இரவு தூக்கத்திலிருந்து திடீர் திடீரென விழித்து அலற… அவளை அணைத்து ஆறுதல்படுத்தினான்.

## 12

வாழ்க்கையை வெல்வது கடினம்! வென்றுவிட்டால் வாழ்வது எளிது!

ஆனந்தமாகவும், மகிழ்ச்சியாகவும் வாழப் பழகிக்கொள்வதே...



பெரிய வரம்தான். வாழ்க்கையில் எப்படிப்பட்ட துன்பம் வந்தாலும் சந்தோசத்துடனே எதிர்கொள்பவன் கவுதம். அதனாலயே பிரியாவை அவனால் சமாளிக்க முடிந்தது. அவள் செய்யும் அட்டகாசங்களை தாங்கிக்கொள்ள முடிந்தது.

ஆனால், பெரியவர்களால் சமாளிக்க முடியவில்லை.

பிரியாவிடம் கோபப்படுவதா? பெற்றோரை சமாதானப்படுத்துவதா? என்று தெரியாமல் சில நேரம் அவன் திண்டாடுவான். பிறகு தெளிந்து, பெற்றவர்களிடம் எடுத்துச்சொல்லி சமாளித்துவிட்டு... பிரியாவிடம் போய் தனது மன்மத பாணங்களை வீசி மகிழ்வான்.

அவளிடம் கடிந்து பேசவே மனம் வராது. இதுவரை அன்பையும், பாசத்தையும் பார்த்தறியாத பெண் என்று அவள் மேல் பச்சாதாபமும், பரிதாபமும் கொண்டான்.

அன்று விடியற்காலையிலே விழிப்பு வந்தது. குளித்துவிட்டு... பெட்டியில் இருந்த படத்தை எடுத்துப்போய் சுவரில் ஒரு பக்கமாய் மாட்டிவிட்டு கண்மூடி பாடினாள்.

பிரியாவின் பாடும் குரல் கேட்டு... அங்கு வந்த மீனாட்சி முகம் சுளித்தாள். காரணம், அவள் பாடியது கிறிஸ்துவ பாடல்!

பிரியா கோபத்தை அடக்க பெரும்பாடுபட்டாள். அன்று கணவன் அலுவலகத்துக்கு செல்ல... வீடே வெறிச்சோடி தெரிந்தது. இதுவரை அனுபவித்திராத புதுவித இம்சை வாட்டியது. அவனோடு நாள் முழுக்க ஒட்டிக்கொண்டு வளைய வந்தவளுக்கு அவனில்லாமல் வேதனையாய் இருந்தது.

மாமனார், மாமியாரோடு பேசவே பிடிக்கவில்லை. பாவனாவின் அம்மா ஜெயலட்சுமியிடம் பேசப் பிடிக்கவில்லை. அவள் முகத்தைக் கண்டாலே வயிறெல்லாம் எரிந்தது. ஏன் அந்த உணர்வு என்றே அவளுக்கு தெரியவில்லை.

மாலையில் சூரியன் கொஞ்சம் தன் சிற்றத்தை தணித்தபோது... மண்வெட்டியோடு தோட்டத்திற்கு சென்றாள். அங்குள்ள புல், பூண்டுகளை கொத்தி அகற்றியபோது தோட்டக்காரன் ஓடி வந்து தடுத்தான்.

"வேண்டாம்மா! தாயீ... நீங்க உள்ளே போங்க. இது என் வேலை! நான் பார்த்துக்கிறேன். முதலாளி பார்த்தால் அவ்வளவுதான். தொலைஞ்சேன்ம்மா. ஏன் பிழைப்பில் கை வைக்காதிங்கம்மா...!" என்று கையெடுத்துக் கும்பிட்டான்.

"சும்மா பயப்படாதேப்பா, நானாக பிரியப்பட்டுதான் செய்கிறேன்.

உன்னை ஏன் திட்டுறாங்க? நான் பார்த்துக்கிறேன்!" என்று வேலையைத் தொடர... அவனும் உதவினான். பிரியாவை அவனு பிடித்துவிட்டது.

பிரியா அவனிடத்தில் தோட்டத்தில் செய்யப்பட வேண் மாறுதல்களை பட்டியலிட்டாள்.

"தாயீ... எப்படி செய்யணும்னு சொல்லுங்கம்மா. நா செய்துடுறேன்" அவன் அக்கறையாய் சொன்னான்.

பிரியா வியர்வை பெருக வேலை செய்வதைப் பார்த்து பதறிக்கொண்டு வந்தார் சந்திரசேகரன்.

"பிரியா... மகாராணி மாதிரி இருக்கிறதை விட்டுவிட்டு உனக் ஏம்மா இந்த வேலையெல்லாம்?" அக்கறையாய் கேட்க...

"எனக்கு பிடிச்சிருக்கு!" என்றாள், ஒற்றை வரியில்.

"இது கொஞ்சம்கூட நல்லாயில்லை. சாப்பிட்டுட்டு... அழகா அலங்கரிச்சிட்டு, என் பையனோடு சந்தோசமாக இருந்தா போதும். இது உனக்கு தேவையில்லாத வேலை. ஏதாவது மாற்ற செய்யணும்னா அவனிடம் சொல். அதை விட்டுட்டு... உனக்கென்ன தலையெழுத்தா மண்வெட்டி புடிச்சி... வெயிலில் வேலை செய்யணும்னு! ஏய் கந்தா... உனக்கு அறிவு இல்லையாடா? என்ன இதெல்லாம்? என் மருமகளை வேலை வாங்கிறியா?" எரிச்சலோடு மாமனார் கேட்டது அவளுக்கு பிடிக்கவில்லை.

"சொன்னேன்ய்யா! அம்மாதான் பிடிவாதம் பிடிக்கறாங்க. கேட்கவே இல்லை!"

"போம்மா... போய் டி.வி பார். அல்லது அத்தையோடு பேசிட்டு இரு!"

"எனக்கு பிடிக்கலே!"

"எதும்மா?"

"அத்தையோட பேச!" பிரியா அதிரடியாக கூற... அதிர்ந்து போய் அவளைப் பார்த்தார்.

அவர் முகம் வாடி செல்வதைக்கண்டு... திருப்தியுடன் புன்னகைத்தாள்.

வேலை முடித்து வந்து- குளித்துவிட்டு அழகாய் உடுத்திக்கொண்டு காத்திருந்தாள் பிரியா. கார் சத்தம் கேட்க... எழுந்து வாசலுக்கு ஓடிவந்தாள். அவன் கையில் இருந்த பெட்டியை வாங்கிக்கொண்டாள்.

"கவுதம்... என்னால் நாள் முழுக்க உங்களைப் பிரிஞ்சி இருக்க முடியலே!" முகம் வாடி சொன்னாள். கண்கள் கண்ணீரில்





"ஏன் இவ்வளவு தாமதம்?"

"இன்னிக்கு கூடுதலா ரெண்டு சேலை துவைக்க வேண்டியதாகி போச்சு சார்!"

– லெ.நா. சிவகுமார், சென்னை.



"நான் மாசத்துல பத்து நாள் என் கணவர்கிட்ட கோவிச்சுட்டு எங்க அம்மா வீட்டுக்குப் போயிடுவேன். நீ எப்படி?"

"அந்த நேரத்துல உங்க வீட்டுக்குப் போயிடுவேன்..."

– பாண்டியன், கரூர்.



"சீக்கிரம் என் கணவரை 'டிஸ்சார்ஜ்' பண்ணுங்க டாக்டர்."

"ஏம்மா இவ்வளவு அவசரப்படுறே?"

"எத்தனை நாளைக்குத்தான் நான் சமைக்கிறது?"

– சேகர், திருத்துறைப்பூண்டி.

பளபளத்தன.

"இப்போ அப்படித்தான் இருக்கும், பழகிட்டால் சரியா...

"என்னால் முடியலே!" சிறு குழந்தையாய் சொன்னான்.

"ராத்திரி பண்ணின குறும்பை நினைச்சி நினைச்சி ரசிச்சு... இருக்க வேண்டியதுதானே!" கண்ணடித்து அவன் சிரிக்க...

"ச்சீ... போங்க! சுத்த மோசம் நீங்க! நானும் உங்களோடு ஆ... வரவா?"

"அதெல்லாம் வேண்டாம். நீயும் என்னோடு வந்தா... அழகான பெண்களை கண்டு நான் ஜொள்ளு விடுவது எப்படி... என்றவன்...

"பெட்டியை நம்ம அறையில் கொண்டுபோய் வை பிரியா... என்று சொல்லிவிட்டு, அம்மாவிடம் போனான். அம்மா கொடு... காப்பியை அருந்திவிட்டு.... சோபாவில் அமர்ந்திருந்த அம்மாவி... மடியில் தலைவைத்துப் படுத்துக்கொண்டான்.

அலுவலகம் முடிந்து வந்தால்... அம்மாவின் மடியில் படுத்... கொஞ்சிச் செல்வது அவன் வழக்கம்.

அம்மா கொஞ்ச– மடியில் தலை வைத்துப் படுத்திருந்த கவுத... ரசனையுடன் சிரிக்க... காட்சியே கலவரமாக தெரிந்தது பிரியாவுக்கு... அவள் உள்ளத்தில் எரிமலை பூத்தது. அருகில் போனாள்.

"கவுதம்... எந்திரிங்க!" கத்தினாள்.

"ஏன்?"

"வாங்க என்கூட!"

"எங்கே?"

"காலையில் இருந்து உங்களைப் பிரிஞ்சி தவியா தவிச்சிட்டு இருக்கேன். நீங்க என்னடான்னா, அதை புரிந்துகொள்ளாமல்... உங்க அம்மாவோடு கொஞ்சலும், குலாவலும்? இது உங்களுக்கு நல்லதா தோணுதா?" வார்த்தைகளை வீசினாள்.

"ஏய் பிரியா... என்ன பேசறே?"

"உங்களுக்கு மனைவின்னு ஒருத்தி எதற்கு? கல்யாணம் ஒரு கேடா?"

"ஏய், என்ன பேசறேன்னு தெரிஞ்சித்தான் பேசறியா?"

"ச்சே... பேசாதீங்க! எனக்கு பிடிக்கலை!"

"என்னடி பிடிக்கலை?" கவுதமுக்கும் கண்மண் தெரியாமல் கோபம் வந்தது.

"என்னை கட்டிட்டு வந்து... இந்த ராட்சச கூட்டத்தில் காலை



முதல் விட்டுட்டு... இப்ப வந்ததும் இங்கே என்ன கொஞ்சல்?"

"என்னை பெற்றவர்கள் ராட்சசர்களா? இனி ஒருமுறை வார்த்தை மீறினால் நடப்பதே வேறு!" கோபத்தோடு கத்தியவன் சொன்னான்.

"ஆபீஸ் முடிந்து வந்தால் அம்மாவின் மடியில் கொஞ்ச நேரம் படுத்துவிட்டுத்தான் மறுவேலையே செய்வேன்!"

"அது அப்போ"

"எப்போ?"

"கல்யாணத்துக்கு முன்னாடி!"

"இப்போ?"

"என்னைத்தான் முதலில் பார்க்கணும்! என் தேவையைத்தான் முதலில் கவனிக்கணும்!"

"இது என்ன சட்டமா?"

"சட்டமில்லே! இதுதான் முறை!"

"எனக்கு புரியலே! புரியும்படியா சொல்லு?"

"இதுவரை அம்மா பின்னாடி அலைந்து இருக்கலாம். இனி நான் நான்தானே முக்கியம்!"

கவுதம் முகம் சிவக்க கத்தினான்.

"பழமொழி தெரியாதா? தாய்க்கு பின்தானே தாரம்!"

"என்னைவிட உங்களுக்கு தாய்தான் உசத்தியா?"

அவர்களின் வாய்ச்சண்டை முற்றுவதைக் கண்ட மீனாட்சி....

"விடுப்பா! வேண்டாம். நீ அவளோடு போ!" என்றாள்.

"இல்லம்மா? ஏய் பிரியா, என் தாய் உசத்தின்னு உன்னிடம் சொல்லலை இதுவரை! இப்போ சொல்கிறேன், கேட்டுக்கோ! என்னைப் பெற்றவள் முதலில்! அப்புறம்தான் மற்ற எல்லோருமே!"

"உண்மையாகவா?"

"ஆமா!"

"கவுதம்... ஒரு கணவனுக்கு மனைவி தாயாகலாம்! ஆனால், தாயால் மனைவியாக முடியுமா?"

"ஐயோ கவுதம்...! பிரியா, என்னம்மா பேசுறே?" உன் வார்த்தையால உயிரே போற மாதிரி இருக்கே!" என்று மீனாட்சி அழுதுகொண்டே காதைப்பொத்தவும்... கவுதம் துடிதுடித்துப் போய்விட்டான். கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

"என்னடி சொன்னே?" என்று ஓங்கி வேகமாய் மனைவியின் கன்னத்தில் அறைந்தான்.

## ...தயம் பேசுகிறது

### இரட்டை முத்திரை!

...ர செந்தூர்பாண்டி
...ம்மா', வி.உஷாவின்
...கவே வந்தாய்'–
...நாவல்களும் அழகிய
... கிளிகள் போல
...க இருந்தன.
...ஸ். எல். பிச்சைமுத்து,
...ங்கப்பெருமாள்கோவில்.
... நாவல்களுமே
...ந திருப்பங்கள்
...தப் படைப்புகள்.
...ண்டதே தெரிய
...மா தித்தன்,
... ணியம்மா
...ம் நிர்க்கதியாய்
... சென்றது
...ர்.கே. லிங்கேசன்,
...கிருஷ்ணன்புதூர்.
...வல்களைத் தந்து
...ரில் இரட்டை
...துவிட்டீர்கள்.
...தம்!
...ன், அயன்புரம்.

'நர்சம்மா' நாவல் அடையோடு அருந்த நேர்ந்த மலைத் தேனாக சுவைத்தது!

*ஆர்.ஆர். உமா, செல்வமருதூர்.*

'எனக்காகவே வந்தாய்' இலக்கிய ஓவியமாக, இதயத்துக் காவியமாக எதிரொலித்துக் கொண்டே இருக்கிறது.

*ஆர். ராஜகோபாலன், கொம்மடிக்கோட்டை.*

'நர்சம்மா' நாவல் கடைசியில் கண்கலங்க வைத்துவிட்டது.

*சதோக்ராஜ், இந்திராநகர்.*

'நர்சம்மா' நெஞ்சை நெகிழ்த்தியது. 'எனக்காகவே வந்தாய்' காதல் ரசம் சொட்டியது.

*ஆர்.பி.ஜெயச்சந்திரன், பூனாம்பாளையம்.*

'காதல் மனம்' சிறுகதை இன்றைய இளசுகளை சிந்திக்க வைக்கும்.

*எஸ்.மாரிமுத்து, அரியலூர்.*

அட்டையில்:

நடிகை அனுஷ்கா

...ட்டு, உங்கள் கருத்துகளை எழுதி அனுப்புங்கள்.
...சுகிறது, "ராணி முத்து", சென்னை-600 007.



பிரியா இதை எதிர்பார்க்கவில்லை. கன்னத்தைப் பிடித்துக்கொண்டு சிலையாய் நின்றுவிட்டாள்.

## 13

வானமென்னும் விளையாட்டு மைதானத்தில்... நிலவுக்குழந்தை மேகங்களிடையே தத்தி தத்தி ஓடி மறைந்து மறைந்து கண்ணாமூச்சு ஆட... நட்சத்திர குழந்தைகள் நிலவை விரட்டிக்கொண்டு பின்னே ஓடியது அழகாய் இருந்தது.

'பிறருடைய குற்றங்களைப் பாராமல், குணங்களை மட்டுமே எண்ணிப் பார்க்கும் ஒருவனின் வாழ்நாள் முழுவதும் இனிமையாகவே அமையும்'.

ரமணரின் பொன்மொழிகளில் ரொம்பவே நேசித்து ரசித்தது, இது.

இதை மனதிற்குள் சொல்லிக்கொண்டவன், பிரியாவைத் தேடிச்சென்றான்.

பால்கனியில் கன்னத்தை பிடித்துக்கொண்டு அமர்ந்திருந்த பிரியாவின் அருகில் போய் நின்றான். அவனைக் கண்டதும் விசும்பி விசும்பி அழுதாள். முகத்தை இரு கைகளால் பொத்திக்கொண்டு அழுதாள்.

அடி பலம். அச்சாய் ஐந்து விரலும் கன்னத்தில் பதிந்திருந்தன. அதனை கண்டவனின் மனது வலித்தது.

"இனிமேல் இப்படியெல்லாம் நடந்துக்கமாட்டேன். பனி அதிகமா இருக்கு. உடம்புக்கு ஒத்துக்காது. சாப்பாடு எடுத்து வந்துருக்கேன். சூடு ஆறுவதற்குள் வந்து சாப்பிடு பிரியா"– அவள் கையைப் பிடித்து எழுப்ப... உதறினாள்.

"என்னைத் தொடாதீங்க!"

"நீ அப்படி பேசலாமா? அம்மாவை அப்படி அசிங்கமா பேசலாமா? இனி அப்படி பேசாதே! நானும் இது போல கோபப்படலை, சரியா?"

"போங்க. உங்களைப் பார்க்கவோ... பேசவோ எனக்கு

பிடிக்கல!"

"நீ எவ்வளவு நல்லவள்! ஏன் இப்படி நடந்துக்கிறாய். ஆனந்தமா வாழ்வை ஏன் அழிக்கிறாய். என்னிடம் பிரியமாய் இருக்கு உன்னால்... ஏன் என்னை பெற்றவர்களிடம் பாசமாய் இல்லாமல் வெறுப்புடன் நடந்துக்கிறாய்?"

"அப்படித்தான் நடந்துப்பேன்!"

"என்ன பிரியா இப்படி பேசுகிறாய்? வெறுப்பு ஒருநாள் விருப்பா மாறும். 'வெறுப்புக்கும், விருப்புக்கும் இடையே ஒரு நூலிழைதா இடைவெளி' என்று யாரோ கூறியதாய் படித்த ஞாபகம். வெறுப் ஒருநாள் மாறட்டும். ஆனால், அநாவசிய வார்த்தையால் அவர்களின் மனசை நோகடிக்க வேண்டாம். ப்ளீஸ்..."

"........."

"எழுந்து வரப்போறியா... இல்லையா? நீ இப்படி எதையும் வாயால் சொன்னால் மதிக்கமாட்டாய். செயலில் காட்டினால்தான் அடங்குவாய்... செய்யட்டுமா?" என்றவன், குனிந்து பூக்குவியலை அள்ளுபவன் போல அள்ளியெடுத்து அவளை தோளில் போட்டு நடந்தான்.

"விடுங்க... விடுங்க..." திமிறி கை- காலை ஆட்டினாள். பிரியாவை தூக்கி வந்து கட்டிலில் போட்டு அவள் மேல் படர்ந்து... கன்னம், உதடு, நெற்றி என முத்தமிட.... தீப்பற்றியவள் போலானாள்.

'ஊடலோடு கூடிய காமம் இத்தனை சுகமா? இத்தனை இன்பமா?' வியந்தாள்.

காதலோடு கூடிய கல்யாணம் எத்தனை மகிழ்ச்சியானது! மன நிறைவானது! அன்பானது! நேசிக்கப்பட வேண்டியது! போற்றப்பட வேண்டியது!

பிரியாவிற்கும் காதலோடு கூடிய கல்யாணம் என்றதும் எத்தனை ஆனந்தித்தாள்! பின்னே, எத்தனைப் பெண்களுக்கு காதல் கைகூடி கல்யாணத்தில் முடிகிறது?

'ஐயோ... கடவுளே! காதல் கைகூடாதவர்கள் பாவம் அல்லவா? விதியைப் பற்றி முன்பே எல்லோருக்கும் தெரிந்தால் எவ்வளவு நல்லது? அவர்களின் காதல் கைகூடாது என முன்பே தெரிந்தால் காதலிக்கவேமாட்டார்கள், அல்லவா? கடைசியில் மனம் வெந்து நொந்து, வேதனைக்கு உள்ளாகமாட்டார்கள் அல்லவா? உடல்



ஒருவனோடும், உள்ளம் ஒருவனோடும் என்று வெறுப்போடு வாழமாட்டார்கள், அல்லவா?'

'ச்சே... என்ன இது கவுதமோடு சந்தோசிக்கும் நல்ல நேரத்தில்... பாழாய் போன கற்பனைகள்!' மனதிற்கு கடிவாளம் போட்டாள்.

அரவிந்தனும், பாவனாவும் தேனிலவு முடிந்து வந்துவிட... பிரியாவை கவுதம் அழைக்க... வரவே முடியாது என மறுத்துவிட்டாள்.

எவ்வளவு கெஞ்சியும், கொஞ்சியும் மனமிரங்காமல் போக... கவுதம் தேனிலவு போகும் திட்டத்தை கைவிட்டுவிட்டான்.

சில நேரம் பிரியாவின் பிடிவாதங்கள், செயல்கள் கவுதமுக்கு எரிச்சலையும், சீற்றத்தையும் உண்டு பண்ணும். அநாதை இல்லத்தில் எதுவுமே தெரியாமல் வளர்ந்தவள். பாவம் என்று மனதை கட்டுப்படுத்தி, அவளுடைய போக்குக்கு விட்டுக்கொடுத்து வாழ்ந்தான்.

அத்தை ஜெயலட்சுமி மட்டும் தனியாய் வாழ... பாவனாவை பார்க்காமல் இருக்க முடியாமல்... அடிக்கடி ஏன், தினமுமே வந்து போவாள் ஜெயலட்சுமி.

இருவரின் கொஞ்சலையும் பார்க்க... பிரியாவுக்கு வயிறு எரியும். கூடவே, என் அம்மாவும் இருந்தால் இப்படித்தானே 'மகள்... மகள்' என்று பதறிக்கொண்டு வருவாள் என்று ஆதங்கப்படுவாள்.

இரவு குடும்ப அங்கத்தினர் அனைவரும் கூடி உணவு மேசையில் சாப்பிட்டுக்கொண்டு இருந்தபோது... அப்பா சந்திரசேகரன் சொன்னார்.

"ஏம்மா ஜெயா... நீ மட்டும் தனியாய் இருந்து எதுக்கு சிரமப்படறே? கடலாட்டம் நம்ம வீடு இருக்க... நீயும் இங்கேயே வந்துடேன். என்னடா கவுதம் நான் சொல்வது சரியா?"

"ஆமாம்ப்பா. அத்தை நீங்க தனியே இருந்து கஷ்டப்பட வேண்டாம். எங்களோடவே வந்துடுங்களேன்" என்று கவுதம் சொல்ல...

"என்ன அத்தை யோசிக்கறீங்க? இது உங்க வீடு! நீங்க பொறந்த வீடு! சந்தோசமாக வந்து தங்கிடுங்க அத்தை! பாவனாவும், அம்மா அம்மான்னு... என்னை இங்கே காயப்போட்டுட்டு அடிக்கடி புறப்படுவது நிற்கும்! ப்ளீஸ் அத்தை!" என்று அரவிந்தன்

அப்பாவியாய் கூறினான்.

"என்ன ஜெயா யோசிக்கிறே? சரின்னு சொல்லும்மா!" என்று மீனாட்சி வற்புறுத்த...

"இது நல்லாயிருக்குமா?" என்று பிரியாவை தயக்கத்தோடு பார்த்தபடி ஜெயா கேட்க...

"ஆமாம், நல்லாவே இருக்காது. பெண்ணைக் கொடுத்த இடத்தில் தங்குவது மரியாதை குறைவான செயல்!" என்று ஜெயாவை பார்த்து சொல்லிவிட்டு... கவுதமிடம் கூறினாள் பிரியா.

"கவுதம்... உங்க அத்தை இங்கு வருவதோ, தங்குவதோ... எனக்கு சுத்தமாப் பிடிக்கலை! இந்த எண்ணத்தை எல்லோரும் விடுங்க. ச்சே... இது என்ன சத்திரமா... சாவடியா?" என்று முகம் சுளித்து நாக்கில் விஷம் தடவி எல்லோரையும் தீண்டினாள்.

பிரியாவின் வார்த்தை சூடு தாங்காமல் அனைவரும் நொந்து தலை குனிய...

"பிரியா..." என்று கவுதம் அதட்டினான்.

"அக்கா..." என்று பாவனா முகம் வெளிறி கூப்பிட...

"யாரு? யாருடி உன் அக்கா? இனி ஒருதரம் இப்படி கூப்பிட்டியோ... நடப்பதே வேறு!"

"பிரியா... ஏய் சும்மா இருடி! அத்தை நீங்க எதுவும் மனசுல வச்சுக்காதீங்க. ஏன்தான் இப்படி அடுத்தவங்களை நோகடிக்கறாளோ... ச்சே! பெரியவங்க... பெத்தவங்க இருந்து வளர்த்திருந்தால் உருப்பட்டு இருப்பாளோ என்னவோ! இப்ப யாரிடம் எப்படி பேசுறதுன்னே தெரியலை! தப்பா எடுத்துக்காதீங்க அத்தை! சாரி அத்தை..." என்று கெஞ்சவும்... கவுதமை முறைத்துக்கொண்டே கைகழுவிவிட்டு மாடிப் படியேறினாள்.

"என்னடா... வயசுக்கு தகுந்தமாதிரி இருக்கமாட்டேங்கிறாளே?" – அப்பா கேட்க...

"எதுவுமே தெரியாதவள். அவளைப் பிறந்த குழந்தையா நினைச்சுக்குங்கப்பா. அவள் செய்யும் தப்புகளை மன்னிச்சுடுங்கம்மா. கொஞ்ச நாள் போனால் சரியாயிடுவாள். உங்களைப் பற்றி முழுமையாய் தெரிந்ததும் திருந்திவிடுவாள். அவள் சார்பா நான் உங்ககிட்ட மன்னிப்பு கேட்டுக்கிறேன் அத்தை!" பரிதாபமாய் கவுதம்



சொன்னான்.

"ஜெயா... கவுதம் சொல்வது போல வெளியுலகமும், குடும்ப வாழ்க்கையும் அறியாத பெண்! உள்ளத்தின் அடியில் தான் ஒரு அநாதை, தன்னைப் பெற்றவங்க இப்படிஆக்கிட்டு போயிட்டாங்களேன்னு ஆதங்கம் இருக்கு! அதுதான் அப்பப்ப வெளிபட்டு... நம்மையெல்லம் தாக்குது. மற்றபடி கவுதம் மேல உயிரா இருக்கா! அவனுக்கு ஒண்ணுன்னா துடிச்சிப் போயிடறாள். அதுவே நமக்கு போதும்மா. அவள் பேசியதை மனதில் வச்சிக்காதே! நாளையே நம்ம வீட்டுக்கு... வீம்பு பண்ணாமல் வந்து சேர்!" என்று அண்ணன் கட்டளையிட... மறுநாளே ஜெயா அந்த வீட்டோடு வந்து சேர்ந்தாள்.

தாயும், மகளும் சந்தோசமாய் சிரித்து பேசிக்கொண்டிருந்தால்... ஆத்திரத்தோடு முறைத்துக்கொண்டே செல்வாள் பிரியா.

ஜெயாவும், மீனாட்சியும் சேர்ந்து சமைப்பார்கள். முதலில் சமையல் அறையை கைப்பற்ற முடிவு செய்தாள் பிரியா.

அன்று விடியற்காலையிலே எழுந்து சமைத்துவிட.... இரு பெண்மணிகளும் சமையற்கட்டுக்கு வந்து ஏமாந்துவிட.... பிரியா புன்னகைத்தாள்.

எட்டு மணிக்கு சாப்பிட அனைவரும் கூடிவிட்டனர். பிரியா பரிமாற அனைவரும் சாப்பிட்டனர்.

"நாங்க ரெண்டு வயசான கட்டைங்க எதுக்கு இருக்கோம்? இத்தனை வேலைக்காரர்கள் இருக்க... நீ ஏன் அடுப்படியில் கஷ்டப்படணும்?" என்று ஜெயா கேட்க...

"என் வீட்டாருக்கும், புருஷனுக்கும் சமைக்கிறேன். இதிலென்ன கஷ்டம்?" பிரியா திரும்ப இடக்காய் கூறினாள்.

"அவன் எனக்கும் மருமகனல்லவா? என் அண்ணிக்கு பிள்ளையல்லவா? அதை ஏன் மறந்துவிடுகிறாய்? எங்களிடம் சொல்லும்போது உங்க மருமகன்னும், அண்ணியிடம் சொல்லும் போது உங்க பிள்ளைன்னும் சொல்லு. என் புருஷன்னு சொல்லாதே! சொந்தம் கொண்டாடாதே! நீஅப்படி சொல்லும்போது எங்களுக்கு அந்நியமாய்படுது!"

"நான் அப்படித்தான் சொல்லுவேன்! என் புருஷன்! என் புருஷன்னு ஆயிரம் முறைகூட சொல்லுவேன்! அதைக் கேட்க...





ங்களுக்கு என்ன உரிமை இருக்கு?

"பிரியா, சும்மா இரு!" கவுதம் அதட்ட...

"சட்டினியில் உப்பு போதல! சாம்பார்ல காரம் அதிகம்! இட்லி வந்தும் வேகாமையும் இருக்கு. அதுக்கெல்லாம் காரணம், நீ வெறுப்போட சமைக்கிறே! சமைக்கும்போது அன்பையும் கொஞ்சம் பாட்டு செய்யணும்! அப்போதான் உணவு பதமாய் இருக்கும்!" ஜெயா குற்றச்சாட்டுகளை அடுக்க...

"அதை நீங்க சொல்லத் தேவையில்லை. இது என் வீடு! என் இஷ்டப்படிதான் சமைப்பேன். பெண்ணைக் கொடுத்த இடத்துல... சியில... உட்கார்ந்து சாப்பிடற நீங்க குறைசொல்ல வேண்டாம். ரிஞ்சதா?" என்று பிரியா வேகமாய் கத்த...

"ஜெயா... அவளிடம் வாயைக்கொடுத்து ஏன் தேவையில்லாமல் பாங்கிக் கட்டிக்கிறாய்?" என்று மீனாட்சி கேட்க...

"நீங்க சும்மா இருங்க அண்ணி! ஏய் பிரியா... உன் திமிர், ஆணவத்தையெல்லாம் வாயில்லா பூச்சியான என் அண்ணனிடம், அண்ணியிடம் வைத்துக்கொள்! என்னிடம் வாலாட்டினால் ஒட்ட றுக்கிடுவேன்... ஜாக்கிரதை! ஏய்... இப்போதான்டி இது உன் வீடு! இதுக்கு முன்னால இருந்தே என் வீடு! நான் பொறந்த வீடு! புரிஞ் சதா?" என்று ஜெயாவும் சண்டைக் கோழியாய் சிலுப்பிக்கொண்டு நிற்க...

"சண்டை வேண்டாம்! ஜெயா, நீ ஏன் பிரியாகிட்டே மல்லுக்கு நிற்கிறாய்? அவளுக்கு என்ன பிடிக்குதோ செய்யட்டும்!"

"இப்படி பணிந்து போய்தான் நாதியத்து இருந்த கழுதையெல்லாம் துள்ளுது!"

"யார் நாதியத்த கழுதை? கவுதம் பார்த்துட்டு சும்மா இருக்கீங்களே!" என்று பிரியா அழுதுகொண்டு ஓட...

"என்ன அத்தை இது? வார்த்தையை அள்ளிவிட்டா திரும்ப பெற முடியுமா? அவள்தான் அறிவு கெட்டத்தனமா நடந்துட்டா... வயசான நீங்களும் எதுவும் யோசிக்காம கீழ இறங்கிடுவீங்களா? கொஞ்சம் விட்டுக் கொடுப்போம்னு எத்தனை முறை படிச்சி படிச்சி சொன்னாலும்... புரியாதா?" என்றவன், பாதி உணவிலேயே எழுந்து போனான்.

அன்றிலிருந்து ஜெயா, பிரியாவின் முதல் எதிரியானாள். நேரம்

கிடைக்கும் போதெல்லாம் சண்டைப் போட்டுக்கொ
ஏன்தான் அத்தையை வீட்டோட வரச் சொன்னோமே
கவுதம் நொந்துகொண்டான்.

இரவானால் கவுதமுக்கு தாயாகவே மாறி... மடியில்
தாலாட்டி தூங்க வைப்பாள். இப்போதெல்லாம் அவள் இனி
பாட்டுப் பாடினால்தான் தூங்குவான். அவள் பாடாமல்
கேட்காமல் தூக்கமே வராது.

அவன் தொழில் தொடர்பாய் வெளியூர், வெ
சென்றுவிட்டால்... அவளின் தவிப்பைப் பார்க்க முடிய
அரவிந்தனையும் தொழிலில் பழக்கினார் அப்பா.

சிறுதலைவலி, காய்ச்சல் என்று படுத்துவிட்டால்... அவளை
நகராமல், கண்கலங்கி, அழுது ஆர்ப்பாட்டம் செய்துவிடு
அத்தனை அபரிமிதமான அன்பால் அவளின் கோப
அவனைப் பாதிக்கவில்லை. சிறுசிறு வார்த்தை மீறல்கள
பொறுத்துக்கொண்டான்.

ஆனால், மற்றவர்களுக்கு என்ன தலையெழுத்தா? ஜெய
மீனாட்சியும் சில நேரம் மல்லுக்கு அவளோடு நின்று நாட்
நரகமாக்கினார்கள்.

பிரியாவைப் புரிந்துகொண்டவர்கள் கவுதமும், சந்திரசேகர
தான்.

அரவிந்தன், பாவனா கோபமே வந்தாலும் கவுதமுக்
பொறுத்துப்போனார்கள்.

கவுதம் காலை நேர அவசரத்திலும், மாலை நேர அலுப்பி
சரியாய் சாப்பிடாமல் கொறித்தால், அவனுக்கு அடாவடி
உணவை ஊட்டிவிடுவாள். முதலில் சங்கடப்பட்டவனுக்கு... பி
பழகிப்போய் அதுவே பிடித்துவிட்டது.

ஒருநாள்...

பாவனா, பிரியாவிடம் இது பற்றி சொன்னாள்.

"அக்கா... மாமா, அத்தை, அம்மா எல்லோரும் இருக்கும்பே
அத்தானுக்கு நீங்க ஊட்டிவிடுவது நல்லா இல்லை. அத்தை இ
பார்த்து கஷ்டப்படறாப் போல தெரியுது. அத்தானுக்கு ஊட
விடற வேலையை உங்க அறையில் வைத்துக்கொள்ளுங்களே
என்று சொல்லிவிட- ஆத்திரமானாள் பிரியா.





"அதைச் சொல்ல நீ யார்? என் புருஷன்! நான் ஊட்டிவிடுவேன்!
கொஞ்சுவேன். அது என் இஷ்டம்! அவர் அவசரத்தில் அரைகுறையா
சாப்பிடும்போது மனசு தாங்காமல் செய்கிறேன். எனக்கு என்
புருஷன் மேல் அக்கறை இருப்பதால் செய்கிறேன்! அதை இங்கே
செய்யாதே, அங்கே செய்யாதேன்னு உத்தரவு போட உனக்கு என்ன
உரிமை இருக்கு? நீயாகவே உன் மாமியார் கஷ்டப்படுறாருன்னு
சொல்லுதைவிடுறியா? பொறாமை பிடிச்சி சில ஜென்மங்கள் அலையுதுங்க!
ச்சே!" என்று பிரியா சொல்லிவிட்டு... கால் முளைத்த நெருப்பாய்
நடந்துபோனாள்.

"மாமா... மாமா..." என்று கண்களை கசக்கிக்கொண்டு
சந்திரசேகரனிடம் நின்றாள்.

"அம்மா பாவனா... பிரியா தன்னோட அன்பையும், பாசத்தையும்
காட்ட வழியில்லாமல்... தன்னுள்ளவே போட்டு புதைச்சிட்டு
வாழ்ந்தவள். இப்போ அந்த அன்பைக் காட்ட ஒருவன் கிடைச்சதும்...
மடை திறந்த வெள்ளமாய் வெளிப்படுத்துறாள். அதை குறை
சொல்ல முடியாதும்மா. பாவம், அநாதையாய் வாழ்ந்த கொடுமை
வேறு! அவள் இத்தனை நாள் பேணிக்காத்த பாசத்தையெல்லாம்
கவுதம் மேல் கொட்டுகிறாள். அவளுக்கு இது வடிகால்! அவள்
எது சொன்னாலும், செய்தாலும் கோபமாய் எடுத்துக்காதே! உன்
சொந்த அக்காவா நினைத்து ஒதுங்கிப் போ!" என்று அறிவுறுத்த...
அமைதியாகிப் போனாள்.

## 14

கவுதம் அலுவலகம் சென்றுவிட.... மெதுவாய் போய் 'டைனிங்
ஹாலி'ல் உட்கார்ந்து... இட்லியை வைத்து சாம்பார் ஊற்றப் போக...
அந்த மணம் நாசியைத் தாக்கி... குமட்டி.... வாந்தி எடுக்க- மீனாட்சி
ஓடி வந்தாள்.

"எனனம்மா? ஏன்?" என்று பதற்றத்தோடு கேட்க- "ஒண்ணு
மில்லே! காப்பி ஒத்துக்கலை" என்றாள்.

"எதுனா விசேஷமாம்மா?" மீண்டும் கேட்க...

பிடிக்கவில்லை! 'அநாதைப் பெண் என்றால் பிரசவம், வளை...
எல்லாம் நாமே பார்க்கணும்!' என்று மாமியார் கூறியது...
நடந்தது போல அவள் மனதை வாட்டியதால், 'ஆமாம்'
சொல்லப் பிடிக்கவில்லை.

கொஞ்ச நேரத்தில் உலகத்து ஒட்டு மொத்த சந்தோசமும் அ...
குத்தகைக்கு எடுத்துக்கொண்டது போல மகிழ்ந்தாள்.

'முதலில் கவுதமிடம்தான் சொல்ல வேண்டும். சொல்லி...
அவன் முகம் மகிழ்ச்சியில் எப்படி பூரிக்கிறது எனக் கவ...
வேண்டும்!'

'மாலைதானே வருவான். அதுவரை தாங்க முடியு...
மலைப்பாய் இருந்தது.

'என்னுள் உயிராய்... உடலாய்... ஒளியாய் உருவெடுத்திருக்கிற...
அது உனக்குத் தெரியுமா கவுதம்?'

'என்னுள் உருகி உருகி காதல் விதையை விதைத்த கள்வ...
என்னுள் நீ குழந்தையாய் வளர்வது தெரியுமா?'

'உன் ஜீவன் என்னுள் ஊற்றாய் பெருக்கெடுத்து வளருதே... அ...
உனக்குத் தெரியுமாடா கிறுக்கா?'

'நம் காதலின் அடையாளம் என்னுள் எனக்கே தெரியா...
வளருதடா... திருடா!'

'ஊடலும் கூடலும் என்னுள் உயிராகிவிட்டதே!'

'புயலில் சிக்கிய மாதிரி இருந்த என் வாழ்க்கையை பூவாய் மல...
செய்த உனக்கு ரொம்பவே நன்றிடா!'

'என்னுள் எனக்கே தெரியாமல் என் உயிரில் கலந்த உயிரே...
கவுதம்... உன்னிடம்தான் இந்த நல்ல செய்தியை முதலி...
சொல்வேன்...!'

'ஏய் பொழுதே... நீ ஏன் இன்று இப்படி என்னை சோதிக்கிறாய்...
இன்று மட்டும் சீக்கிரம் போயேன். ப்ளீஸ்...'

தோட்டத்துப் பூக்களிடம் பேசினாள். தென்றலை கவுதமிட...
தூதுவிட்டாள். காற்றிடம் மழலையாய் கொஞ்சினாள்...
பாட்டுப் பாடினாள். ஆடினாள். ஆனால், போர்காத பொழுதை...
சபித்துக்கொண்டே பொழுதைக் கழிக்க...



...மதியம் மூன்று மணி வாக்கில் சின்னங்குழந்தையின் வீறிடலாய்
...தொலைபேசி மணி ஒலிக்க... ஓடிப் போய் எடுத்தாள். கவுதமாய்
...ருந்தாலும்... அவன் வந்த பின்பு நேரில்தான் சொல்ல வேண்டும்
...ன்ற முடிவோடு...

"அலோ..." என்றாள்.

"அலோ... அண்ணியா? அண்ணி ஒரு வருத்தமான செய்தி!
...ப்படி உங்கக்கிட்ட சொல்றதுன்னே தெரியலையே?" என்று
...பசியவன் அரவிந்தன்.

"என்ன அரவிந்த்? என்ன செய்தி" பதற்றத்தோடு கேட்டாள்.

"அண்ணி... அ... அண்ணி... அண்ணனுக்கு விபத்து! டாக்டர்
...ர்யாகிட்ட 'அட்மிட்' பண்ணியிருக்கோம்!" என்று கூற... ரீசிவரை
...ிட்டுவிட்டு அலறக்கூட முடியாமல் தலையில் கைவைத்து
...ட்கார்ந்தவள்... பின்னர் கத்தினாள். புரண்டாள். விழுந்து விழுந்து
...அழுதாள்.

ஏ.சி. அறையில் அவரவர் உறங்க... அவள் குரல் கேட்கவே இல்லை.
...வலைக்காரர்களும் வீட்டின் பின்புறமாய் இருந்த குடியிருப்புக்கு
...சென்றுவிட்டனர்.

யாரிடமும் சொல்லாமல் வெளியேறி... ஆட்டோ பிடித்து
...ஓடினாள்.

'ஐயோ கவுதம்... நான் வாரிசைப் பற்றி சொல்லி... உன்னை
...சந்தோசத்தில் திக்குமுக்காட வைக்கவேண்டும் என்று காத்திருந்த
...எனக்கு இப்படியொரு துக்கச் செய்தியை சொல்லவைத்து
...கலங்கடித்துவிட்டாயே! கவுதம்... நீ எப்படிடா இருக்கே? எப்படி
...உன்னால் வலியைத் தாங்க முடிஞ்சது? எப்படி துடிதுடித்தாய்?
...கடவுளே, உனக்கு கண்ணில்லையா? இருட்டில் தவித்த எனக்கு
...வெளிச்சம் காட்டியவனை இப்படி பிரிக்க பார்க்கிறாயே!
...எனக்கென்று கொடுத்த ஒரே துணையையும் பிரிக்க நினைக்கிறாயே!
...இது உனக்கே நல்லாயிருக்கா?' புலம்பினாள் மனதிற்குள்.

மருத்துவமனை முன்பு நின்ற அரவிந்தனிடம் ஓடினாள்.

"அ... அரவிந்த். அ... அண்ணனுக்கு எ...எ... எப்படி இருக்கு?"
...கேட்டு கதறவும்... அப்போது அங்கே அழகாய் வந்த கவுதம்– "ஏய்...
...ஏய்..பிரியா... நீ எங்கே? அரவிந்தா என்னடா?" என்ற கவுதமனின்
...குரல் அமுதமாய் காதில் கேட்டு... இதயத்தில் வழுக்கி நின்றது.

"கவுதம்... என் கவுதம்!" என்று சொல்லி மயங்கி சரிந்த... கவுதம் ஓடி வந்து தாங்கினான். பிரியாவின் வாரிசு அதிர்... கலங்கி... உதிரமாய் வெளிவந்தது– ஆணா? பெண்ணா?... அடையாளமே சொல்லாமல்! உடனடியாய் மருத்துவமனை... சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

"ஏய் அரவிந்தா... மடையா! பிரியா இங்கே எதற்கு வந்... ஏன் வந்தாள்?" சீறினான்.

"சாரி... சாரிண்ணா, உங்க மேல ரொம்ப உயிராய்... போறாங்களே... இன்று ஏப்ரல் முதல் தேதி அல்லவா? அத... 'ஏப்ரல் பூல்' ஆக்கலாம் என்று பொய்யாய் உங்களுக்கு விபத்து... வரவழைச்சேன்"

"ராஸ்கல்...!"என்று ஓங்கி அறைந்துவிட்டான் கவுதம்.

"சாரி... சாரிண்ணா...! அண்ணி இப்படி பதறி வருவாங்க... எதிர்பார்க்கல. அவங்க உங்களுக்கு 'போன்' பண்ணுவாங்க... விபத்து எதுவும் இல்லைன்னு சொல்லுவீங்கன்னு எதிர்பார்த்தே... சும்மா விளையாட்டுக்கு செய்ய... இப்படி வினையாயிடிச்... அண்ணா... மன்னிச்சிடுங்கண்ணா. ஐயோ... அண்ணிக்கு என்ன... தெரியலையே!" மெய்யாகவே அரவிந்தன் கலங்கினான்.

கவுதமும், அரவிந்தனும்... தன் அலுவலகத்தில் பணிபுரி... தொழிலாளிக்கு விபத்து என்று வர... அதைத்தான் அரவிந்... பயன்படுத்திக்கொண்டான். ஆனால், அண்ணி இவ்வளவு வேகமா... வருவாள் என்று எதிர்பார்க்கவில்லை.

டாக்டர் கதவு திறந்து வர... அந்த அம்மாவிடம் ஓடினா... கவுதம்.

"சாரி மிஸ்டர்! அதிர்ச்சியில் கர்ப்பம் கலைந்துவிட்டது. மூன்... மாத கர்ப்பம்!"கவுதமின் தலையில் பெரிய பாராங்கல்லை தூக்... போட்டுவிட்டு டாக்டர் அகன்றார்.

"கர்ப்பம் கலைஞ்சிடுச்சா?" ஆச்சரியத்தோடு.... பி... ஆத்திரப்பட–

"என்னை மன்னிப்பீங்களா அண்ணா?" என்று கதறிவிட்டா... அரவிந்தன்.

இதற்குள் வீட்டுக்கு விஷயம் போய்... அனைவரு... வந்துவிட்டார்கள்.



கவுதம் உள்ளே நுழைய... அலறியபடி அவனை ...ணைத்துக்கொண்டாள் பிரியா.

"நம் குழந்தை... என் உயிரில் கலந்து உருவான நம் குழந்தை... ...ருவில்லாமல் போயிடிச்சே! நீங்க மாலையில் வந்ததும் சொல்ல ...வியா தவிச்சிட்டு இருந்தேங்க! பாவி, இப்படி....என்னை ...திர்ச்சியாக்கி... என் பிள்ளையைக் கொன்னுட்டானே!" ...ழுதாள்.

"விடுடா... விடுடா... அழாதேடா பிரியாம்மா!" கவுதமும் கண் ...லங்கினான்.

"அண்ணியோட என்ன விளையாட்டு? உன் பொண்டாட்டிக்கிட்ட ...ச்சிக்க வேண்டியதுதானே! ஐயோ... நம்ம குடும்பத்துல உதிச்ச ...தல் வாரிசை இப்படி இல்லாமல் பண்ணிட்டியேடா... பாவி!" ...ன்று மீனாட்சி கதறினாள்.

"பொறாமை... பொறாமை! இவன் பொண்டாட்டி இன்னும் ...ரு செய்தியும் சொல்லலையேன்னு!" பிரியா கத்த...

"என்னம்மா... இப்படி பேசறே? நீ உண்டானது உன்னைத் ...விர யாருக்குமே தெரியாதே! அப்படி இருக்க அவனுக்கு எதுக்கு ...பொறாமை?" என்றார் சந்திரசேகர்.

"அப்பா...அண்ணியை எதுவும் சொல்லாதீங்க. பிளீஸ்" ...கையெடுத்து கும்பிட்டான்.

"பிரியா... கூல்டா... கூல் பேபி! உடம்புக்கு ஆகாமப் போயிடப் ...பாகுது. உனக்கு ஒண்ணுன்னா என்னால் தாங்கவே முடியாதுடா" ...வுதம் அமைதிப்படுத்த...

"என் சந்தோசத்துல மண்ணை அள்ளிப் போட்டுட்டானே!"

"சபிக்காதே உன் மைத்துனனை!"

"நான் உங்க மேல உயிரா.. அன்பா... பாசமா இருப்பது ...டிக்காமத்தான் இப்படி செய்தான். நம்மை பிரிக்கணும்னே ...ல்லோரும் பார்க்கறாங்க" என பிரியா குற்றம் சாட்ட... அனைவரும் ...கத்தில் வெந்நீர் கொட்டிய மாதிரி துடித்தனர்.

15

அந்தச் சம்பவத்திற்கு பிறகு அந்த வீட்டை நரகமாக்கிக் ...கொண்டிருந்தாள் பிரியா. எல்லோரிடமும் எரிந்து எரிந்து

விழுவாள். அதிலும் முக்கியமாய் அரவிந்தனிடம் ஒரு படி மேலே
போய்விடுவாள். அவனும் தப்புக்கு தண்டனையென்று பேசாம
இருந்துவிடுவான்.

அன்று கவுதம்... மாலையில் காரில் வெளியே அழைத்து
போனான்.

"நாம எங்கே போறோம்?" பிரியா கேட்டாள்.

முதல்ல ஆஸ்பிட்டல், அப்புறமா ஓட்டல், பூங்கா, கடற்கரை"

"ஐயோ! உங்க உடம்புக்கு என்ன?" அவன் நெற்றியில் நேசமாக
கை வைத்துப் பார்த்தாள்.

"பதறாதே! எனக்கு ஒண்ணுமேயில்ல! உனக்கு உடம்பு எப்படி
இருக்குன்னு 'செக்' பண்ணப் போறோம்!"

"எனக்கென்ன? நான் குத்துக்கல்லாட்டம் நல்லாத்தானே
இருக்கேன்."

"பேசாதே! சொல்வதைக் கேளு!" என்றவன்... மனநல
மருத்துவர் என்ற பெரிய போர்டு போட்டு இருந்த ஆஸபத்திரிக்குள்
நுழைய...

"இங்கே எதுக்கு? அதுவும் மனநல மருத்துவர்கிட்ட! எனக்கென்ன
பைத்தியமா பிடிச்சிருக்கு?" என்று கோபப்பட்டாள்.

"உனக்கு பைத்தியம் பிடிச்சிருக்குன்னு சொன்னேனா?
நீ திடீர் திடீர்னு கோபப்படறே! அப்புறம் சரியாகறே
இப்படி கோபப்பட்டாலும், எரிச்சல்பட்டாலும்... உடம்புக்கு
நல்லதில்லே!"

"மனிதனின் இயல்பான வெளிப்பாடுதான் கோபம். அது
...ப்பா?"

"எப்பவாவது கோபப்பட்டால் பரவாயில்லை. நீ சதா எந்நேரமும்
...சிடுன்னுல்ல இருக்கே!"

"அப்ப என்னை பைத்தியம்னு முடிவு கட்டிட்டீங்க..
...படித்தானே?"

...ஏன் தப்பா நினைக்கிறே? பி.பி., சுகர் எல்லாம் சரியா
...க்கான்னு சின்ன பரிசோதனை. இது ஆஸ்பத்திரி! தகராறு
...ணாதே பிரியா!"

...ான் தகராறு பண்ணுறேனா? நான் தகராறு பண்ணுற
...பளையா? என்னைப் பற்றி உங்க மனுசுல என்ன நினைச்சுட்டு



இருக்கீங்க? என்னை ஒரு மனுஷியாவே நினைப்பது இல்லை! சதா
பைத்தியத்தைப் பார்ப்பது போல பார்ப்பது. நடத்துவது! சொல்ல
வேண்டாமா எங்கே போறோம்னு? தெளிவா சொல்லியிருந்தால்
இந்த லூசு வரமாட்டாள்னு நைசா கூட்டிட்டு வந்துட்டீங்களா?
வாங்க, முதல்ல வீட்டுக்கு போகலாம்!" கத்தினாள்.

"ஏன் கத்தறே? எல்லோரும் அசிங்கமா நம்மையே பார்க்கிறாங்க
பாரு! பிளீஸ்... ஒரு நிமிஷம்! போயிடலாம்டா. உன் மேல் எனக்கும்
அக்கறை இருக்குல்ல? உன் அக்கறையில் ஐந்து சதவீதம்கூட
நான் காட்டக் கூடாதா? எனக்காகடா, பிளீஸ் பிரியாகுட்டி...
மறுத்துடாதேடா! இந்த டாக்டர்கிட்ட 'அப்பாய்ன்ட்மென்ட்'
கிடைப்பது கஷ்டம். எனக்காக ஒத்துக்கோ பிரியாம்மா!" அவன்
கெஞ்சினான்.

"என்னை பைத்தியம்னு நினைக்கல இல்லையா?" சிறு
குழந்தையாய் கேட்க...

"நீ என் உயிருடா! என் செல்லம்டா! உன்னைப் போய்
அப்படி நினைப்பேனா? இந்தக் கவுதமைப் பற்றி தெரிஞ்சுகிட்டது
இவ்வளவுதானா?" என்று குறைபட... கோபப்பட...

"என் மேல் கோபமா?"

"ஆமாம்னு சொன்னால் என்ன செய்வே?"

"இறுக்கி கட்டியணைத்து முத்தமிடவா?" பிரியா கண்ணடித்து
கூற...

"கல்யாணத்துக்கு முன் நான் என்னெல்லாம் சொன்னேனோ,
செய்தேனோ அதையெல்லாம் நீ இப்போ செய்கிறாய்!" என்று
அவன் புன்னகைத்தான்.

மருத்துவர் இன்முகத்துடன் வரவேற்று- பரிசோதனை செய்து
உதட்டைப் பிதுக்கினார். பின்னர்...

"மிஸஸ் கவுதம். இந்தப் பெஞ்சு மேலே ஏறி படுங்க!" என்று
கூற... ஏறிப் படுத்தாள்.

டாக்டர் அறையில் இருந்த விளக்கை அணைத்து... சிறு ஒளி
வீசும் விளக்கைப் போட்டு... அவள் கண்களைப் பார்க்க- கொஞ்ச
நேரத்தில் அவள் மவுனநிலைக்கு போக- டாக்டர் கேள்விகள் கேட்க
ஆரம்பித்தார்.

"கவுதம் சாரை முதன் முதலா எங்கே சந்திச்சீங்க?"

"ஒரு கட்டடத்தின் படிக்கட்டில், வேகமாக வந்து என் மீது மோதி... விட... நான் விழுந்து நல்ல காயம்!"

"உங்க கல்யாணம் காதல் திருமணமா, இல்ல....?"

"காதல்தான்! துரத்தி துரத்தி விரட்டி விரட்டி... கொஞ்சி நாளானாலும்.... காதல் பண்ணிதான் கல்யாணம்!"

"அப்பா, அம்மா..."

"இல்லே!" அழுதாள். நான் "அநாதை!"

"ஏன்?"

"தெரியாது! சிஸ்டரும் சொல்லலை. அநாதை இல்லத்தில்தான் வளர்ந்தேன்!"

"அடடா! சரி, உங்களைப் பற்றி மீதியையும் சொல்லுங்களேன்.." டாக்டர் கேட்கவும்... அழுகையோடே சொன்னாள்.

"பள்ளியில் படிக்கும்போது... அப்பா, அம்மா இல்லாத குறை தெரிய ஆரம்பிச்சது! எல்லோருடைய பெற்றோரும் வந்து... பாசமாய் அவர்களை விட்டுவிட்டு- கையில் சாக்லெட்டும், கன்னத்தில் முத்தமும் கொடுக்கும்போது எனக்கு ஏக்கமாக இருக்கும்! மதியம் குழந்தைகளை மடியில் தூக்கி வச்சி, கதை சொல்லி, பாட்டு பாடி சோறு ஊட்டும்போது ஏக்கமா இருக்கும்.

வகுப்பில் முதல் மார்க் வாங்கும்போது... 'வெரிகுட்'னு டீச்சர் சொல்லுவாங்க. அவ்வளவுதான்! ஆனா, என்தோழிங்க பத்து பதினொண்ணாவது 'ரேங்க்' எடுத்தாலும்... ஆசையாய் முத்தமிட்டு... என் செல்லமே... 'ரேங்க்' எடுத்துட்டியேன்னு கொஞ்சும்போது மனசுக்குள்ளே அழுவேன்.

விளையாட்டு, கட்டுரை, கவிதை, பாட்டுன்னு எதுல முதல்ல வந்தாலும்... வாழ்க்கையில் அநாதை பட்டம் வாங்கி பிந்திட்டேன்..."

அதைக் கேட்டதும் கவுதம் தாங்க முடியாமல் தவித்தான்.

"அதனால் எனக்கு யாரையுமே பிடிக்கல. யாரோடவும் பேச பிடிக்கல. எனக்குள்ளே ஒரு வட்டம் போட்டு வாழ்ந்தேன். என் நினைப்பு, உயிர் மூச்சு எல்லாமே படிப்புதான். அதுக்கு மேல் வேலைக்கு போனேன். அப்பதான் கவுதமைப் பார்த்தேன். அது ஒரு விபத்து. எனக்கு அடி பலம். ஆஸ்பத்திரிக்கு அழைச்சிட்டு போறேன்னவரிடம் மறுத்துட்டேன்!"



"...பிடிக்கலையா, கவுதம் சாரை?"

"ம்கும்... ரொம்பப் பிடிச்சிருந்தது. அவரோடு ஜென்மா ஜென்மத்துக்கும் பழகி வாழ்ந்த ஒரு உணர்வு. அவரை ஒரே பார்வையில் பிடிச்சிருந்தாலும், அவர் ஒரு பெண்ணுக்காக ஓடியதில் ஆத்திரம்... கோபம்... மறுநாள் பாவனாவுடன் வந்து நிற்கவும்... எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றியதாய் கோபம் வந்துடிச்சி! பேயாட்டம் ஆடிட்டேன். என்னைத் தேடி தேடி வந்து, வம்பு பண்ணி, அடாவடி செய்து சந்திக்க... ஏற்கெனவே காதல் கொண்ட மனசு அவரிடம் பட்டுன்னு விழுந்துடுச்சி! ஆனால், அவரை பெற்றவர்கள் என்னை அவமானப்படுத்தியதை... என் உயிர் உள்ளவரை மறக்கவே முடியாது..."

"அப்புறம்?"

"அப்புறமாய் கல்யாணத்துக்கு ஒத்துட்டாங்க. ஆனாலும், எனக்கு அவர்களைப் பிடிக்கலே! ஏன்னே தெரியல... ஜெயாம்மாவை ரொம்பவும் பிடிக்கலே!"

"கவுதம் எப்படி?"

"எனக்கே எனக்குன்னு கவுதம் கிடைச்சார். அவரை நான் என் உயிரைவிட அதிகமாய் நேசிக்க... அன்பு செலுத்த... ஆனால், அவரோட அன்பை, பாசத்தை... அப்பா, அம்மா, அரவிந்தன், பாவனா, ஜெயாம்மான்னு எல்லோரும் பங்கு போடுறாங்க. எனக்கு அது பிடிக்கலை. அவரிடம் மற்றவங்க உரிமை கொண்டாடுவது பிடிக்கலை. என் கவுதமை அவர்கள் சொந்தம் கொண்டாடுவது பிடிக்கலை. அதனால அவர்களைப் பார்த்தாலே கோபம் கோபமா வருது! இதுல பாவனா வேறு 'டென்ஷன்'படுத்துகிறாள்."

"அடடா... என்ன செய்கிறா?" டாக்டர் கேட்க...

"மாமா... மாமா... அத்தான்... அத்தான்னு கொஞ்சறாள். நான் என் புருஷன் மேல் அக்கறையாய் இருந்தால் அவளுக்கென்ன? அப்புறம்... அப்புறம் என் கவுதமுக்கு விபத்துன்னு பொய் சொல்லி... என்னை அதிர்ச்சியடைய வைத்து... என் வயிற்றில் உருவான என் பிள்ளையைக் கொன்னுட்டான், அரவிந்தன்!"

"அடப் பாவமே!" டாக்டர் வருத்தத்துடன் கூற...

"என் கவுதமோட அன்பு எனக்கே எனக்கு மட்டும்தான் கிடைக்கணும். எனக்கு கடவுள் கொடுத்த பொக்கிஷம்...

புதையல்தான் என் கவுதம்!" பிரியா அனைத்தையும் கொட்... அழுது ஓயவும்... அறையை வெளிச்சப்படுத்தி... அவளின் ... தெளியவைத்தார்.

"நீங்க போய் கொஞ்சம் வெளியே இருங்க மிஸஸ் கவுதம்..."

அவள் வெளியில் சென்றாள்.

"கவுதம் சார்... அவங்க சின்ன வயதில் இருந்தே அன்புக்கா... பாசத்துக்காகவும் ஏங்கி இருக்காங்க! நீங்க கிடைச்சதும்... ம... போட்டு புதைச்சிட்ட அன்பு, பாசமெல்லாம் பொங்கி வருது... உங்க மேல் கொட்டறாங்க! நீங்க அவங்களுக்கு மட்டுமே சொந்... நினைக்கிறாங்க! சின்ன குழந்தைக்கு பொம்மை கிடைச்... யாரிடமும் கொடுக்காதே... அதுபோல்!

அடுத்தது உங்க பெற்றோர் அவமானமா பேசியதும் ஆழ... பாதிச்சுடுச்சி! அதனால்தான் இந்தக் கோபம், சிடுசிடுப்பெல்லா... அவங்க முன்னாடி கொஞ்ச நாளைக்கு நீங்க மற்றவங்களோ... நெருக்கமா இருக்க வேண்டாம். உங்க பெற்றோரிடமும் சொ... வையுங்க... உங்க மனைவி என்ன கோபப்பட்டாலும்... அன்பா... பாசமாய் இருக்க சொல்லுங்க. பிரியாவுக்கு குழந்தை பிறந்து, தாய்... பாசம் புரியும். நாளடைவில் சரியாகிடுவாங்க. வாழ்த்துகள்... என்றார் டாக்டர்.

அவன் மலர்ந்தான்!

இனிதான் புயலும்... பூகம்பமும் புரட்டிப் போடப்போகிறது... எனத் தெரியாமல்!

## 16

மூன்று மாதங்களுக்கு பிறகு...

பிரியா, பாவனா இருவரும் கர்ப்பம் தரிக்க... அந்த வீடு இருவரையும் தலையில் தூக்கி வைத்துக்கொள்ளாத குறையாக தாங்கியது.

பிரியாவிற்கு பிடித்ததாய்... வாய்க்கு சுவையாய் மாமியார் மீனாட்சி



...கொடுத்தாலும்... சந்தோசமாய் சாப்பிடமாட்டான். ...எல்லாம் உங்களிடம் யார் கேட்டா? இதெல்லாம் வேண்டும்னு ...தேனா? அன்று சீமந்தம், பிரசவம் என்றால் நாமதானே ...க்கணும்னு முகம் சுளித்தவங்கதானே? மறந்துடுமா என்ன?' ...பாள்.

மீனாட்சியும், ஜெயாவும்– ஆஸ்பத்திரியிலிருந்து வந்து கவுதம் சொன்னதிலிருந்து... அவள் எது சொன்னாலும் ஒதுங்கியே போய்விடுவார்கள்.

மாமனார் கடைக்குப் போய் பட்டு சேலையும், நகையுமாய் வாங்கி வந்து குவிக்க...

"எனக்கு வேண்டாம்! எதுக்கு அநாவசிய செலவு? என் புருஷன் கஷ்டப்பட... நீங்க எல்லோரும் உட்கார்ந்து அள்ளி அள்ளி விடறீங்களா? ஏன் காசை கரியாக்கிறீங்க?" ஆத்திரத்துடன் கத்த... அவர் தலையை தொங்கப் போட்டுக்கொண்டு நகர்ந்தார்.

ஒரு நாள் இரவு கவுதமை மடியில் போட்டு... அவன் நெஞ்சில் உள்ள அடர்ந்த முடிகளுக்கிடையில் கையைவிட்டு விளையாடிக்கொண்டே கேட்டாள்.

"உங்க அத்தையோட கணவர் எங்கே? என்ன ஆனார்? என்னிடம் சொல்லக்கூடாதா? ஆள் இல்லை. ஆனால், உங்க அத்தை பொட்டும், பூவும் வைக்கறாங்களே... புரியலையே!" என்றாள்.

"பாவனாவுக்குக்கூட தெரியாத ரகசியம். எனக்கு கொஞ்சமாய் தெரிந்ததை சொல்லவா?"

"சொல்லுங்க... சொல்லுங்க" ஆர்வமானாள்.

"மாமாவை 'லவ்' பண்ணி அத்தை கல்யாணம் பண்ணிக்கிட்டாங்களாம். மாமாவோடு சந்தோசமா குடும்பம் நடத்த... மகாலட்சுமி பிறந்தாள்."

"மகாலட்சுமியா? பாவனா மட்டுமில்லேயா?" ஆச்சரியமாய் கேட்டாள்.

"மகாலட்சுமி பிறந்ததும்... மாமாவுக்கு ஏதோ நோயாம். அந்தப் பக்குவப்படாத வயதில்... இருவரையும் விட்டுட்டு வந்துட்டாங்க. பின் அப்பா போய் தேட, இருவருமே கிடைக்கல. எல்லாத்தையும் நினைத்து... வெந்து வேதனைப்பட்டு காலத்தை ஓட்டுறாங்க, அத்தை. இவ்வளவும்தான் எனக்கும் தெரியும்!"

"இப்போ வேதனைப்பட்டு என்ன புண்ணியம்? பாவம், மகாவும், மாமாவும்" வருந்தினாள்.

"உயிரோட இருக்காங்களா... இல்லையா என்றே தெரிய... மகா என் கண்ணுக்குள்ளே நிற்கிறாள். என்ன அழகு? எல்லோ... அவளைக் காட்டி– 'உன் பொண்டாட்டிடா! நல்லாப் பார்த்துக்... என்பார்கள். அந்த வயதில் வெட்கப்படுவேன்! இப்போ அ... நினைச்சி வேதனைப்படறேன்!"

"அவ உயிரோடு இருந்திருந்தால்... இந்த இடத்தில் நான் இ... முடியாதல்லவா?"

"நீ ஏன் கண்டதை கற்பனை பண்ணுறே?"

"மகாலட்சுமி இருந்திருந்தால்... இந்தப் பஜாரியே... வாழ்ந்திருக்கமாட்டேன்னு நினைக்கிறீங்க, அப்படித்தா... அமைதியான– ஆனந்தமான வாழ்க்கைன்னு உங்கக் க... எல்லாம் கானல் நீராயிடிச்சி இல்லையா? என்னால உங்க... புரிஞ்சிக்க முடியுது! மகா இருந்திருந்தால் நல்லா இருந்திருக்... இல்லையா?"

"விதண்டா வாதம்! வீணான கற்பனை! அவளிருந்தால் இ... அளவுக்கு என்னை பார்த்துக்குவாளான்னு சந்தேகம்தான்!"

பிரியா புரியாமல் புன்னகையோடு பார்க்க...

"ஆமா பிரியா! உலகத்து சந்தோசம் அனைத்தும் ஒரு... கண்டது போல இருக்கு... உன்னோட வாழ்வது! என்ன ஒண்ணு... நீ எப்போ தீயாய் மாறி என்னை சுட்டெரிப்பே! எப்போ தென்ற... வந்து என்னை குளிர்ச்சிபடுத்துவேன்னு எனக்கும் தெரியாது. அ... ஆண்டவனுக்கும் தெரியாது!"

"ஏய் பொய்தானே?" அவள் குஷியாய் கேட்க...

"நிஜம்டி... என்னை தீயாய் தீண்டிய தென்றலே! நெருப்பா... மாறிய நிலவே!"

"என்னடா இது?"

"நான் உனக்கு ஆசையாசையாய் வச்சப் பேரு!"

"உதை பட போறீங்கப்பா..." என்று அவன் கன்னத்தை செல்லமா... கிள்ளி... அழுந்த உதட்டில் முத்தமிட்டாள். அப்படியே கவுத... சொக்கிப் போய் கண்கிறங்கினான்.

"ஒண்ணு கேட்கவா?"



"என்ன தயக்கம்? கேளு."

"நான் உங்களை பேர் சொல்லி கூப்பிடறேனே... அது பிடிக்குதா? இல்ல, என்னங்கன்னு மரியாதையா கூப்பிடவா?"

"இதையெல்லாம்விட என்னை மாமான்னோ... மச்சான்னோ... அத்தான்னோ கூப்பிட்டால் ரொம்பவே பிடிக்கும்!" கவுதம் ரசித்து சொல்ல...

"நீங்க என் மாமா பையனாய் இருந்தால் மச்சான்னு கூப்பிடலாம்! அத்தை பையனா இருந்தால் அத்தான்னு கூப்பிடலாம். ஆனால், ரெண்டுமே இல்லையே! எப்படி அழைப்பது? நான் உங்க மகாவா இருந்தால் அப்படி அழைக்கலாம்... என்ன செய்யட்டும்?"

"உன் அத்தை பையனாய் நினைத்துக்கொள்ளேன். ப்ளீஸ்..." கவுதம் புன்னகைத்துக் கெஞ்ச...

"சரிங்க அத்தான்!" என்று மலர்ந்தாள் பிரியா. வெட்கப்பட்டாள் அழகாய்!

"யாரிடமும் அத்தையைப் பற்றி கேட்டு வைக்காதே பிரியா" எனக் கூற– மண்டையை மட்டும் ஆட்டினாள்.

மறுநாள் காலை...

"அம்மா பிரியா, இந்த டிபனை சாப்பிட்டுப் பாருடா! ஒரு புத்தகத்தில் பார்த்து... செய்தேன். இந்தச் சுவை பிடிச்சிருக்கான்னு சொல்லும்மா?" என்று ஜெயா பிரியமாய் நீட்ட.... முறைத்தாள்.

"பேசாதீங்க... பிடிக்கல!"

"என்னம்மா சொல்றே? பிரியா... நீ வேற, பாவனா வேறன்ன நான் நினைக்கலையே! பாவனாவைவிட ஒரு படி மேலே போய் என் பெண்ணாத்தான் நினைக்கிறேன்! ஏம்மா என்னை எப்போதும் எதிரியாய் பார்க்கறே?"

"ச்சே... நான் உங்க பொண்ணா? அப்படி சொல்லாதீங்க!" கோபமாய் கத்தினாள்.

"உன்னை என் வயிற்றில் பிறந்த மகளாத்தான் நினைக்கிறேன்!"

அவ்வளவுதான்! பிரியாவுக்கு எங்கிருந்துதான் அவ்வளவு கட்டுக்கடங்காத கோபம் வந்ததோ தெரியவில்லை.

"கருவறை என்பது கோவில் சந்நதிக்கு சமம்! ஆனால் உங்க கருவறை... கல்லறை போன்றது. பெத்த மகளையே அநாதையாய் விட்டுட்டு வந்தவங்கதானே! என்னைப் போல் அவள் எங்கே

...நினைக்கிறதாய் சொல்லி... அப்படின்னா நான் பேயா? சாத்தானா?"

பாவனாவுக்கு எதுவும் தெரியாது. முழித்தாள். கவுதம் அவளிடம் ஏன் சொன்னோம்? என்று நொந்தான்.

"நீயெல்லாம் ஒரு பொம்பளையா? புருஷனுக்கு நோ... வந்திடுச்சின்னு புருஷனையும், பெத்த பெண்ணையும் விட்டு... வந்துட்டியே! அதுவே உனக்கு நோய் வந்திருந்தால் உன் புருஷ... உன்னைவிட்டு ஓடி இருக்கமாட்டார். இப்ப பூவையும், பொட்டை... வச்சிட்டு அலையுறே... அந்த ஆள் இருக்காரோ.... இல்லையோ..."

பிரியா வார்த்தை நெருப்பை அள்ளி ஜெயாவின் இதயத்தி... கொட்டி புகைய வைத்துவிட்டுப் போய்விட்டாள்.

# 17

பாவனா ஒரு கூடை நெருப்பை தலையில் கொட்டிய மாதி... அலறினாள்.

"மாமா... அக்கா என்ன சொல்றாங்க? என் அப்பாவையு... அக்காவையும் விட்டுட்டு அம்மா ஓடி வந்துட்டாங்களா? எனக்... என் பிறப்பைப் பற்றியே சொல்லலையே! பிளீஸ் மாமா... சொல்லுங்களேன்!" கதறி கதறி அழுதாள்.

"வேணாம்மா...! நீ அப்புறம் உன் அம்மாவையே வெறுத்... ஒதுக்கிடுவே!"

"எப்படி? எப்படி மாமா? அவங்க என்னைப் பெற்றவங்க! நான் தப்பாவே நினைக்கமாட்டேன். என் மண்டை வெடிப்பதற்குள் சொல்லுங்களேன்" என்று தலையைப் பிடித்துக்கொள்ள... பாவனாவை அருகே அமர்த்தி சொன்னார்.

ஜெயலட்சுமி கல்லூரியில் படித்துக் கொண்டிருக்க... அவளோடு படித்த சிவசங்கர் என்ற இளைஞன் அவளை கவர்ந்தான்.

சிவசங்கர் யாரிடமும் ஒட்டாமல்... அதுவும் ஆண்களிடம்கூட



...நெருக்கம் ... இருந்தான். அழகும், ஆண்மையும் நிறைந்த அவனை... ...வான். அவனைக் கண்ட எந்தப் பெண்ணும் ஏக்கத்துடன் திரும்பிப் பாராமல் போகமாட்டார்கள்.

அவனோ ஏழ்மையில்... அம்மாவின் சம்பாத்தியத்தில் படித்து ...ந்தான். சிறுவயதிலேயே தந்தை இறந்துவிட... தாய் கல்லும், மண்ணும் சுமந்து... காப்பாற்றி படிக்க வைத்தாள். காதல் திருமணம் புரிந்தவள். ஆதலால் குடும்ப உறவுகளே இல்லை. நல்ல மதிப்பெண் பெற்று, வேலை தேடி... தாயை உட்கார வைத்து சம்பாதித்துப் போட வேண்டும் என்பது மட்டுமே அவனுக்கு அப்போதைய ஆசை! கனவு!

கல்லூரி பூங்காவில் அமர்ந்து படித்துக்கொண்டிருந்தவன் முன்பு போய் அமர்ந்தாள், ஜெயா.

சிவா புரியாமல் அவளை பார்த்து கேட்டான்.

"யார்... யார் நீங்க?"

"நானா? இந்தக் கல்லூரிதான்!"

"அப்படியா?"

"உங்க வகுப்புங்கூட! நீங்க நிமிர்ந்து பார்த்தால்தானே யா... யார் உங்கள் வகுப்பென்று தெரியும்! நீங்கதான் சரியா... சாமியாராச்சே!"

"உங்களுக்கு என்ன வேண்டும்?"

"நீங்கள்தான்!"

"நானா? ஏன், பாடத்தில் ஏதாவது சந்தேகம் இருக்கா?"

"பாடத்துல இல்லை!"

"பின்னே?"

"நான் அழகா இருக்கேனா?"

"என்னங்க இது கேள்வி? நான் உங்களுக்கு பாடத்துல... சந்தேகம்னு அக்கறையாய் கேட்டால்... இப்படி பொறுப்பில்ல... பதில் சொல்றீங்களே!"

"என்னை உங்களுக்கு பிடிச்சிருக்கா?"

"உங்களை எதுக்கு பிடிக்கணும்?"

"காதல் பண்ணத்தான்!"

"என்ன... விளையாடறீங்களா?" சத்தமாய் கேட்டான்.

"ஆமாம்! நீங்க என் அத்தை மகன் பாருங்க! அதான் விளையாடறேன்!" நக்கலாய் பதில் சொன்னாள்.

"ஏங்க... உங்களுக்கு ஏதாவது பைத்தியம் பிடிச்சிருக்கா?"

"பைத்தியம் பிடிக்கலே... உங்களைத்தான் பிடிச்சிருக்கு. காதலிக்கிறேன், ஐ லவ் யூடா!"

"இங்கே பாருங்க. ஏதாவது உளறாதீங்க! உங்க வேலையைப் பாருங்க!"

"என் வேலை இனி இதுதான். உங்களை துரத்தி துரத்தி காதலிப்பதுதான் வேலையே! அப்புறம்தான் படிப்பே!"

"அசிங்கமா பேசாதீங்க! எனக்கு வாயில ஏதாவது வந்துடப் போவுது! பெண்ணா லட்சணமா இருங்க" கத்தினான்.

"இப்போ எப்படி இருக்கேன்?" கேட்டாள்.

"பிளீஸ்... வம்பு பண்ணாதீங்க! என்னைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?"

"அழகன், அறிவுள்ளவன், ஆண்மை நிறைந்தவன்னு சொல்லிட்டே போகலாம் கண்ணா!" கன்னத்தைக் கிள்ளினாள்.

"ஏய்... ஏய்... நீ ஓவரா போறே! போ... போயிடு! வேற எவனாவது நாக்கை தொங்க போட்டுட்டு அலைவானுங்க இதுக்குன்னே! அவனை பிடிக்கிற வழியைப் பார்!"

"எனக்கு நீதான்டா வேணும்!"

"நான் படிக்க வந்திருக்கேன்டி!" கோபத்தில் வார்த்தைகள் தடித்தன.

"படியுங்க! அப்படியே பகுதி நேரமா என்னைக் காதலிச்சா குறைஞ்சா போயிடுவீங்க?"

"அறிவுகெட்டத்தனமா பேசாதீங்க மிஸ்!"

"மிஸ் ஜெயலட்சுமி. என் பெயர் பிடிச்சிருக்கா?"

"எனக்கு உன்னையே பிடிக்கலைங்கிறேன்! உன் பேர் பிடிக்குமா? ச்சே! என்ன பெண் நீ? உனக்கு நாகரீகமே தெரியாதா? ஒரு



...ணிடம் எப்படி பழகுவதென்றே தெரியாதா? ஒழுக்கம்னா... அது ...த்தக் கடையில விக்குதுன்னு கேட்பே போலத் தெரியுதே!"

"கொஞ்சம் வேண்டுமானால் அவகாசம் எடுத்துக்கலாம்!"

"எவ்வளவு நாளானாலும் என் பதில் இதுதான்!"

"அப்படியா... பார்ப்போம்!"

"சவால் எல்லாம் விடாதே! என்னைப் பற்றி தெரிஞ்சிக்கோ ...ஸ் ஜெயலட்சுமி... என் தாய் அங்கே கல் சுமந்து, மண் சுமந்து ...ட்டப்பட்டு என்னை படிக்க வைக்கிறாள். உன்னைப் பார்த்தால் ...தி உள்ளவளாய் தெரிகிறாய்! வேண்டாம் என்னைத் தொந்தரவு ...ண்ணாதே! பிளீஸ்..." அவன் கெஞ்சினான்.

அவள் அப்போது நல்ல பிள்ளையாய் போனாள்.

அடுத்ததாக காதலுக்காக படையெடுத்து வெற்றியும் ...பற்றுவிட்டாள். ஜெயாவின் கடைக்கண் பார்வைக்காக... ...வாவை தவமிருக்க வைத்துவிட்டாள்.

படிப்போடு காதலையும் வெற்றிகரமாய் அவன் ...தொடர்ந்தான்.

...மூன்றாண்டுகள் முடிந்து... வீட்டில் சம்மதம் வாங்கி திருமணமும் ...ந்தது. சென்னையைவிட்டு எத்தனையோ மைல்களுக்கு ...ப்பால் உள்ள கள்ளக்குறிச்சியில் வந்து வாழ்ந்தாள்.

சிவாவிடம் எவ்வளவோ கெஞ்சியும், பிறந்த இடத்தைவிட்டு ...ர முடியாது என்று மறுத்துவிட்டான்.

தனியார் பள்ளியில் வேலை பார்த்து வந்த வருமானத்தில்... ...ழகாய் குடித்தனம் நடத்தினாள், கருவுற்றாள். அழகான ...பண் குழந்தையும் பிறந்தது. அவளைத் தாங்கோ தாங்கென்று ...ங்கினான்.

இனிமையாய் குடும்பம் சென்றபோது... புயலாய் புறப்பட்டது... ...வன் உடம்பில் வெள்ளை வெள்ளையாய் தேமல் போல. அதை ...லட்சியப்படுத்திவிட்டான். அது கொஞ்சம் கொஞ்சமாய் ...ரவியது, டாக்டரிடம் சென்று காட்டியபோது... அவர் அவன் ...லையில் பெரிய பாறாங்கல்லைப் போட்டார்.

வெண் குஷ்டம் என்று!

## 18

ஜெயா அவனைக் கண்டு அருவருத்தாள். தாய் இதையெல்லாம் கண்டு ஒரு நாள் உயிரையே விட்டுவிட்டாள். சிவா அழுதான்... அழுதான்... கண்ணீர் நிற்கும் அளவுக்கு. ஆனால் ,ஜெயா ஆறுதல் சொல்லவில்லை.

குழந்தை மகாலட்சுமி... அசல் மகாலட்சுமியாய் இருந்தாள். தகப்பன் என்றால் அந்தப் பிஞ்சுக்கு கொள்ளை பிரியம்! உயிர்!

சோறூட்ட தகப்பன் வேண்டும்! தூங்குவதற்கு அவனது நெஞ்சு வேண்டும்! வீட்டில் அவன் இருக்கும் போதெல்லாம் அட்டையாய்... அவனோடு ஒட்டிக்கொண்டே இருப்பாள்.

ஜெயாவிற்கு இது பிடிக்கவில்லை. அவனோடு இருந்துவிட்டு வரும் குழந்தையை தூக்கவே யோசிப்பாள். பால் கொடுக்கவே தயங்குவாள். குழந்தையையும் அவனோடு சேர்த்து வெறுத்தாள்.

சிவாவோடு பேசுவதில்லை. சாப்பாடு போடுவதில்லை. இரவில் தன்னை தொடவே விடுவதில்லை. அவள் நாளுக்குநாள் அவனிடமிருந்து விலக... அவனால் அந்த அவமானத்தைத் தாங்க முடியாமல் தணலில் விழுந்தவன் போல் தத்தளித்தான்.

அவள் நாளுக்குநாள் பேரழகியாய் காட்சியளிக்க... அவன் நேசம்கொண்டு மணந்த மனைவியை கூடி மகிழாமல் இருக்க முடியவில்லை. எத்தனை நாட்களுக்கு அவனால் அவனைக் கட்டுப்படுத்த முடியும்?

ஒரு நாள் வெட்கத்தைவிட்டான். அவளிடம் போனான்.

"ஜெயா, நான் சொல்வதைக் கேள். என்னால் எதை வேண்டுமானாலும் தாங்க முடியும். ஆனால் உன்





அலட்சியத்தையும், அருவருத்த பார்வையையும் தாங்க முடியவில்லை... பிளீஸ் ஜெயா... என்னை புரிஞ்சுகொள்!"

"..............."

"ஜெயா... இப்படி ஒரு நோய் எனக்கு வரும்னு கனவில்கூட நினைக்கலை! நான் எனக்கு தெரிஞ்சி பாவம் பண்ணினதில்லை. எந்த ஜென்ம வினையோ... என்னை இப்படி செய்யுது!"

"..............."

"இது வெறும் வெண்புள்ளி. நோய் கிடையாது. இது ஒரு உடலியல் பாதிப்பு. தெளிவாக சொல்ல வேண்டுமானால் இது ஒரு அழகியல் பிரச்சினை. அவ்வளவுதான்!

நமது தோலுக்கு நிறத்தை அளிப்பது மெலனின் என்று அழைக்கப்படும் நிறமி. அதை உற்பத்தி செய்வது தோலில் உள்ள 'மெலனோ ஸைட்' என்ற அணுக்களின் வேலை. நமது உடலுக்குள் கிருமிகளின் பாதிப்பு வரும்போது, அதை எதிர்த்துக் கொன்று ஆரோக்கியத்தைப் பாதுகாக்க 'மிலிட்டரி செல்'கள் உள்ளன. இந்த 'செல்'கள் கிருமி என கருதி– 'மெலனோஸைட்'டை கொன்றுவிடுகின்றன. அதனால், மெலனின் நிறமி உற்பத்தியாகாமல் நமது தோலில் வெண்மை நிறப்புள்ளிகளாகவும், திட்டுகளாகவும் வெளிப்படுகிறது. இது தொற்று நோயே இல்லை என்று டாக்டர்கள் சொல்கிறார்கள்."

ஜெயா அமைதியாய் கட்டிலில் அமர்ந்திருந்தாள்.

"ஜெயா, எத்தனை முறை சொன்னாலும் புரிஞ்சிக்க மறுக்கிறியே! நீ படிச்சவள், பண்பானவள்! என் மேல் நிரம்ப பிரியமானவள்! இப்படி உன்னையும், என்னையும் இந்த நோய் பிரிச்சிடுச்சே! நம் அழகான குடும்பத்தின் மீது யார் கண்பட்டதோ? நரக வேதனையை அனுபவிக்க நேர்ந்துடிச்சே! சிறுவயது முதலே சந்தோசத்தை அறியாதவன் நான்!

என்னுடைய வாழ்க்கையை மலரச் செய்தவள் நீ! கட்டிலில் தத்தளிச்ச என்னை கரையேற்றி... உயிர் தந்தவள் நீ! என் மேல் அளவுக்கு அதிகமான அன்பைப் பொழிந்து... என்னை திக்குமுக்காட செய்தவள் நீ! என்னுடைய எல்லாமுமாய்



இருந்தவள் நீ! இப்போ இப்படி மாறிட்டியே ஜெயா!"

அவன் அருகில் வந்து அமர்ந்து பேச... அவள் விலகிப் போனாள். அதைக்கண்டு அவன் நெஞ்சு வெந்துபோனது.

"ஜெயா... நீ எனக்கு வேணும் ஜெயா! என்னை என்னால் கட்டுப்படுத்தவே முடியலை! பசிச்சவன் பக்கத்துல சாப்பாட்டை வச்சுட்டு சாப்பிட வேண்டாம்னு சொல்ற வேதனையா இருக்கு ஜெயா!" அவன் கையைப் பற்ற... அவள் உதறினாள்.

"ஜெயா... ஜெயா... என்னைப் புரிஞ்சுக்கோயேன்! கண்ணு.... பிளீஸ்..." அவள் முன்பு மண்டியிட்டு அமர்ந்தான்... கெஞ்சினான்.

"எனக்கு பிடிக்கலேன்னா பிடிக்கலே!"

"எனக்கு இப்போ நீ வேணும் ஜெயா!"

"இப்படி பேசினால் என் அண்ணன் வீட்டுக்கு போயிடுவேன்"– மிரட்டினாள்.

"என் ஜெயா... என் ஜெயா... என் தங்கம்!"

அவள் மறுப்பை சட்டை செய்யாமல் அணைத்தான். நீண்ட நாட்கள் அவளைத் தொடாததால்... அவன் உடம்பில் தீப்பற்றிக்கொண்ட உணர்வு. அவளை பலவந்தமாய் ஆட்கொண்டான். பசிகொண்ட புலியிடம் அகப்பட்ட மானைப் போலானாள். எல்லாம் முடிந்து அவன் எழ...

"ச்சே...! என்ன மனுசன் நீங்க? மிருகத்தைவிட கேவலமான புத்தி!" கத்தினாள், அழுதாள்.

"தன் பெண்டாட்டியைத் தொடுவது மிருகத்தனமான செயலா ஜெயா?"

"தன் மனைவியாய் இருந்தாலும், அவள் சம்மதம் இல்லாமல் தொடுவது ஈனத்தனமான செயல். இனி ஒரு நாள், ஒரு நிமிடம்கூட உங்களோடு வாழமாட்டேன். நான் கிளம்பறேன்."

சிவாவுக்கு பாறையில் மோதிக்கொண்டது போல் மனதில் வலித்தது.

ஜெயா, பெட்டியில் துணிகளை அடுக்கினாள்.

"வேணாம் ஜெயா! போகாதே ஜெயா! உன்னைவிட்டால்... எனக்கு உறவுன்னு சொல்லிக்க யாருமே இல்லை. என்னை

அநாதையாய் விட்டுட்டு போகாதே ஜெயா! இனி இது போல்... என் உயிர் உள்ளவரை... உன் அனுமதி இல்லாமல் தொட மாட்டேன். இது என் பிள்ளை மேல் சத்தியம்!" என்றான்.

அவள் பெட்டியை மூடித் தூக்கிக்கொண்டாள்.

"நீங்க ஏன் அநாதை? அதான் உங்க அருமை மகள் மகா உங்களுக்கு துணை இருக்கப் போறாளே!"

அவள் சொல்லவும்... இதயத்தைப் பிய்த்து எறிந்தது போல் அவன் துடித்தான்.

"குழந்தையை விட்டுட்டுப் போகப் போறியா? நான்தான் பாவம் செய்தேன்! அது என்ன பாவம் பண்ணியது?"

"உங்களுக்கு பிள்ளையாய் பிறந்ததே பாவம்தானே!"

"பால்குடி மறவாத பிள்ளை! அந்தப் பிள்ளைக்காகவாவது போகாதே! என் மனசைச் சாகடிச்சிட்டு போகாதே ஜெயா! செத்துடுவேன் ஜெயா!"

"இப்படி அசிங்கமா கெஞ்சறீங்களே... உங்களுக்கு வெட்கமா இல்லையா? மான அவமானமா இல்லையா?"

நீ என் பெண்டாட்டி ஜெயா! உன்கிட்ட யாசிப்பதில் எனக்கென்ன வெட்கம்... மானம்? என் உயிர் உன்கிட்ட இருக்கு ஜெயா. என் உயிரை கரைச்சி எடுத்துட்டுப் போறியே? ஜெயா... போகாதே... பிளீஸ்... பிளீஸ்"– அவன் கெஞ்ச கெஞ்ச...

ஒரு வயதே ஆன பெண் குழந்தையையும், அன்பான கணவனையும் அம்போவென விட்டுட்டு, அர்த்தராத்திரி என்றுகூட பாராமல் பஸ் ஏறினாள்.

சிவா பெண் பிள்ளையைப் போல உருகி உருகி அழுதான்.

சந்திரசேகரன், பாவனாவிடம் சொல்லி முடித்தார். பின் சொன்னார்.

"நான் அப்போ தொழில் சம்பந்தமா ஆறு மாதத்துக்கு வெளிநாடு கிளம்பிய நேரம். இங்கே ஜெயா வந்திருக்கிறாள். அண்ணனிடம் சொன்னால் செத்துடுவேன்னு மிரட்ட... அவள் ராட்சசத்தனம் தெரிந்து... மீனாட்சி என்னிடம் வாயே றக்கவில்லை. வெளிநாட்டில் இருந்து வந்த எனக்கு விசாரித்தும், தெரியாது என்று கூறிவிட்டார்கள். அன்றைய ஒரு நாள் விளைவாய்... நீ ஜெயா வயிற்றில் உருவானாய்"

"ஜெயாவும் அவர்கள் காணாமல் போனது கேட்டு அதிர்ச்சியுற்றாள். அழுதாள். தான் செய்தது எவ்வளவு பெரிய தவறு என்று உணர்ந்தாள். வருந்தினாள். இதெல்லாம் தெரிந்தால் சங்கடப்படுவாய் என்றுதான் உனக்கு சொல்லல"

"ஐயோ... அம்மா! எத்தனை பெரிய பாவத்தை செய்துவிட்டு வந்திருக்கிறாய்? என் அப்பா உயிரோடு இருப்பாரா மாமா? என் அக்கா உயிரோடு இருப்பாளா, கவுதம் அத்தான்" கேட்டுவிட்டு அழுதாள்.

"என் கணவன்! என் அன்பிற்குரியவர்! எனது உயிரில் கலந்து... என் உடலில் உருவான என் மகள்! ஐயோ தொலைச்சிட்டு நிற்கிறேனே!" வாயிலும், வயிற்றிலும் அடித்துக்கொண்டு ஜெயா அழுதது... வீடு முழுக்கக் கேட்டது.

## 19

எட்டாவது மாதம்...

பிரியாவும், பாவனாவும் ரொம்பவே கஷ்டப்பட்டனர். பிரியாவுக்கு இன்னுமே வாந்தி நிற்காமல்... சரியாய் சாப்பிடாமல்... மசக்கையிலே இளைத்து மெலிந்தாள்.

"கவுதம்... அடுத்தது ஒன்பதாவது மாதம்! நல்ல விமரிசையாய் வளைகாப்பு செய்ய வேண்டுமடா? நீ என்ன சொல்கிறாய்?" மாமனார், பிரியாவைப் பார்த்தபடி கேட்க...

"எனக்கு அதெல்லாம் வேண்டாம்!"

"ஏம்மா?"

"வேண்டாம்னா விட வேண்டியதுதானே! என்னோட மனசு இன்னும் முதல் நாள் பேச்சையே மறக்கலை!"

"பிரியா... என்ன பேசறே?" கவுதம் அதட்டினான்.

"என்னம்மா சொல்கிறாய்? அதையெல்லாம் இன்னமுமா மனதில் வைத்திருந்தாய்? உன் மாமியார் படிக்காதவள்! பாவம், அறியாமையால் .... ஏதோ சொல்லிவிட்டாள் என்று இப்படி எங்களை வேதனைப்படுத்துறீயேம்மா! நீ இந்த வீட்டுக்கு மருமகளா வந்ததில் இருந்து... ஒரு நாள்கூட பாசமா மாமான்னு கூப்பிடலையேம்மா!" என்று ஏக்கத்துடன் கேட்டார்.

"எதுக்கு கூப்பிடணும்? எனக்கு அப்படி கூப்பிட மனம் வரலை!"

"நான் உன் புருஷனுக்கு தகப்பன்ம்மா!" என்று கூறிவிட்டு... அவ்விடத்தைவிட்டு நகர்ந்தார், சோகமாய்.

ஒருநாள்...

"அம்மா பிரியா... புள்ளத்தாச்சி பொண்ணு நீ! உனக்குன்னு ஒரு ஆசையிருக்கும்! சொன்னால் உனக்கு பிடிச்சதா செய்து தருவேனே தாயீ...!" என்று மாமியார் ஆசையோடு கெஞ்சலாய் கேட்டாள்.

"எனக்கு எதுவும் பிடிக்கலே! நீங்க இப்படி கேட்பதும்தான்!" என்று வார்த்தையை நெருப்பாய் வீச... அதில் பொசுங்கியவளாய் மீனாட்சி துடிதுடித்துவிட்டாள்.

கொஞ்ச நாள் கழித்து ஒரு மாலை வேளையில் வெளியே சென்ற சந்திரசேகரன், வீட்டிற்கு வரும்போது... கூடவே ஒரு புதிய மனிதரை அழைத்து வந்தார். அன்று ஞாயிறு என்பதால் அனைவருமே வீட்டில் இருந்தனர்.

"ஐயோ...!" என்று பிரியா அலறி– கவுதமை கெட்டியாய் இறுக்கிக்கொண்டாள்.

"யார் மாமா இவர்?" என்று பாவனா மிரள...

"என்னங்க... வந்துட்டீங்களா? என் உயிரே... என்னை மன்னிச்சுடுங்க!" என்று அழுதுகொண்டே போய் அவர் காலில் விழுந்தாள், ஜெயா.

கவுதமும், அரவிந்தனும் புரியாமல் பார்த்தனர்.

"பாவனா... அ... அப்பா... அப்பாடி!" என்று அழுதுகொண்டே ...... நொடியும் தாமதிக்காமல் ஓடிப் போய் சிவசங்கரனை அணைத்துக்கொண்டாள், பாவனா.

"வேணாம்... வேணாம்! நான் நோய்க்காரன்! தூரப் போம்மா" என்று விலக...

"ஐயோ அப்பா... என்னைக் கொல்லாதீங்க!" என்று கதறினாள்.

"எனக்கு இப்படியொரு இரண்டாவது பெண் இருப்பாள்னு கனவில்கூட நினைக்கலையே ஜெயா! ஆனால், என் பெரிய பெண் என்ன ஆனாள் என்றே தெரியலையே?" கண்களில் நீர் மின்ன சொல்லவும்...

"ஐயோ... என்னங்க சொல்றீங்க?"– ஜெயா அதிர்ச்சியோடு கேட்க...

"நீ போனதும் அநாதை இல்லத்துல விட்டுட்டு வடக்கே போனேன். ஐந்துஆண்டுகள் கழித்து வந்து பார்த்தால்... அந்த அநாதை இல்லமே இல்லையே! என் பெண் என்ன ஆனாள் என்றே தெரியலையே!" அவரும் கதறினார்.

அவர்கள் இணைந்தது ஒரு பக்கம் ஆனந்தமாகவும் இருந்தது. ஒரு பக்கம் அவர்களுக்கெல்லாம் கருணை காட்டும் தெய்வம்... தனக்கு மட்டும் கருணை காட்டவில்லையே என்று கலங்கினாள் பிரியா.

அன்றிலிருந்து அவள் ஒரு மாதிரி ஆனாள். தனிமையை நாடினாள். இதைக் கண்ட கவுதம் கேட்டான்.

"பிரியா... ஏன்டி ஒரு மாதிரி இருக்கே? பிரசவ நேரம் நெருங்க... நெருங்க பயமா இருக்கா?" பொறுப்போடு கேட்க...

"நான் இல்லத்துக்குப் போய் பிரசவம் வரை தங்கிட்டு வரட்டுமா?"

"ஏய்... ஏய்... விளையாட்டுக்குத்தானே சொல்றே?"

"நிஜமா! எனக்கு இங்கே பிடிக்கலை! அதுவுமில்லாம உங்க அம்மாவுக்கு பாரமா இருக்க விரும்பலே! எனக்கு அனுமதி கொடுங்க. போறேன்!" பிரியா கெஞ்சினாள்.

"அறைஞ்சேன்னா ஒரு பல் உன் வாயில் தங்காது! இனி இதுபோல் பேசினால் உதை விழும்! புள்ளத்தாச்சி பொம்பளைய அடிச்ச பாவம் வந்துடப் போவுது... போ... போடி!"

கோபமானான்.

"நான் போறேன்!" அவள் மீண்டும் உளற...

"என்னை சாகடிச்சிட்டு போடி! நீ இல்லேன்னா செத்துடுவேன்!" என்று உயிர் உருக கவுதம் சொல்ல... சட்டென்று அவனை இழுத்தணைத்தாள்.

"உனக்கு இங்கு என்னடி குறை? என்ன வேண்டும், சொல்லுடி?"

"எனக்கு அப்பா வேணும்! எனக்கு அம்மா வேண்டும்! உங்களால் கொடுக்க முடியுமா?"

இதயத்தை கடப்பாரை கொண்டு கீறியதாய் கலங்கினான். பின்னர் சொன்னான்.

"நீயே அம்மாவாகப் போறே! இப்படி இருக்கும்போது... என்னடி பேச்சு இது?"

சிவசங்கரன், பிரியாவிடம் வலிய வந்து... அன்பாய் பேச– அவளுக்கும் அவரைப் பிடித்துவிட்டது. தன்னைப் போலவே அவரும் அநாதையாய் திரிந்தவர் என்பதால் கூடுதலாய் பாசம் ஏற்பட்டது.

"எனக்கு பாவனாவைவிட... உன்னை அதிகமாக பிடிச்சிருக்கு தாயீ...! ஆனால், சொல்ல தெரியல பிரியாம்மா!"– அவள் உச்சந் தலையில் மென்மையாய் தடவிக் கொடுத்துச் சொன்னார் சிவா.

"எனக்கும் கூடத்தான்! உங்களை அப்பான்னு கூப்பிடவா?" என்று கண்களில் நீர் மல்க கேட்க... ஜெயாவே கலங்கிவிட்டாள்.

"உங்களால் பாவனாவோட அம்மாவை எப்படி மன்னிக்க முடிஞ்சது?"

"மன்னிப்பது தானே மனித இயல்பு... மனிதப் பண்பு தாயீ!" ன்று அவர் சொல்ல... மலைத்துவிட்டாள்.

'எல்லோரும் ஒன்றாகி மகிழ... தான் மட்டும் அநாதையாய் தற்கு உயிர் வாழ வேண்டும்?' என்ற நினைப்பு... அவள் ஆழ்



மனதில் அலையாய் முட்டி மோதியது.

## 20

ஒரு நாள் வலி எடுத்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டாள் பிரியா.

கவுதம் உயிர் போகாத குறையாய் கலங்கினான். பிரியா அத்தனை அலறினாள். கத்தினாள். கதறினாள். சரியாய் உண்ணாததால்... சத்து இல்லாமல் போய்... பிள்ளைப் பெற ரொம்பவே போராடினாள்.

"அவரை... என் அத்தானை நான் பார்க்கணும் டாக்டர், ப்ளீஸ்..." என்று அழ...

கவுதம் பயந்துகொண்டே உள்ளே வந்தான். அவன் கையை கெட்டியாய் பிடித்துக்கொண்டு, "எனக்கு பயமா இருக்குங்க! நான் பெத்து பிழைப்பேனான்னு பயமா இருக்கு! என்னை விட்டுட்டு போகாதீங்க!"

"போகலே... போகலே. பிரியாம்மா!"

"எனக்கு சிஸ்டர் மரியாளை பார்க்கணுங்க! நான் செத்துடுவேனோன்னு கலக்கமா இருக்கு! என்னை வளர்த்த தெய்வத்தைப் பார்க்கணும். வரவழைக்க முடியுமா?"

"இதோ... இதோ... அரவிந்தனை அனுப்பி கையோடு அழைத்து வரச் சொல்றேன்."

வெளியே ஓடினான்.

"அம்மா பிரியா... நீ ஒத்துழைக்கணும்மா. உன் ஒத்துழைப்பு முழுமையா கிடைக்கலேன்னா... என்னால் எதுவுமே செய்ய முடியாதும்மா... பிறப்பு பாதைக்கு குழந்தை வரணும். நீ கொஞ் சம் முயற்சி பண்ணனும்... ப்ளீஸ்ம்மா!" டாக்டர் கூறினாள்.

அவள் வலியால் துடித்தாள்.

சிஸ்டர் மரியாள் தன் வயதான உடம்பை தூக்கிக்கொண்டு வர... குழந்தையின் அழுகுரல் அங்கிருந்த அனைவரின் காதிலும் தேனாய் பாய்ந்து... உள்ளத்தில் தித்தித்தது.

ஆனால், பிரியாவின் நிலை மோசமானது. அவளுக்கு வாழ வேண்டும் என்ற அக்கறை இல்லாததால்... நாடித்துடிப்பு குறைய...

சிவசங்கரனை கண்ட சிஸ்டர் மரியாள் திகைத்தார்.

"யூ... யூ... மிஸ்டர் சிவசங்கரன்! மகாலட்சுமியோட தகப்பன் சரியா?" எனக் கேட்க...

சிவாவும் சிஸ்டரை அடையாளம் கண்டு...

"சிஸ்டர்... சிஸ்டர்... என் பெண் மகா என்ன ஆனாள்? நான் திரும்பி வந்தபோது இல்லம் இல்லையே?"

"சரியான வருமானம் போதாததால்... அந்தக் குழந்தைகளோட சென்னைக்கு வரச் சொல்லிட்டாங்க, வந்துட்டோம்."

"என் பெண்... உயிரோடு இருக்காளா சிஸ்டர்?"

பரபரப்பாய் கேட்க...

"உயிரோடு இருக்காளாவா? மகாலட்சுமிதான் கவுதமை மணந்த பிரியா!"

கூடை கூடையாய் மலர்கள்... தலையில் கொட்டியதாய் மலர்ந்தனர்.

"நிஜமாவா?"

"ஆமாம் சார்! பழைய பேர் பிடிக்கலேன்னு விவரம் தெரிந்து பிரியான்னு மாற்றிக்கொண்டாள்!"

"பிரியா... என் மகளா?" என்று ஜெயா மலர...

டாக்டர் கதவை திறந்து சோகமாய் ஓடி வந்து...

"சாரி... சாரி... பிரியா நிலைமை மோசம். நாடித்துடிப்பு குறையுது. மனசுல வலிமையே இல்லை! வாழணும்னு எண்ணமே இல்லை. வாழணும்னு எண்ணமிருந்தால் முயற்சிப்பாள். அந்த எண்ணமே இல்லாமல்.... அழகான ஆண் குழந்தையை அநாதையாக்கிவிட்டு போயிடுவாளோன்னு பயமா இருக்கு! கவுதம், வாங்களேன்!" என்று கூற... அனைவரும் ஓடினர்.

"பிரியா... என்னைவிட்டு போயிடாதேம்மா... நீ இல்லாமல் நானும் இருக்கவேமாட்டேன்!" அவன் கதற....

"பிரியா... அம்மா தாயீ... அப்பா வந்திருக்கேம்மா! என் மகாலட்சுமி நீ... நீதான்...! என் பெண் நீதாம்மா!" என்று



சிவசங்கரன் கத்த....

"நீ அநாதை இல்லேம்மா... என் பெ... பெண்ணும்மா நீ! பிரியா... எழுந்துக்கோ..."

சிவாவின் குரல்... குழந்தையின் குரல் எல்லாமுமாய் லேசாய் காதில் கேட்க... அவள் நாடித்துடிப்பு சீராக...

ஜெயா சட்டென நர்ஸ் கையில் இருந்த குழந்தையை வாங்கி, பிரியாவின் அருகில் போட.... அது வீறிட்டு கை- காலை உதைக்க... அந்த ஸ்பரிசம் பட்டு அவள் மெல்ல... மெல்ல கண் திறக்க... டாக்டர் திருப்தியாய் புன்னகைக்க...

"என் பெண் கண் விழித்துவிட்டாள்! என் பெண் பிழைத்துவிட்டாள்! உன் அப்பா இவர்தாம்மா!" என்று சிஸ்டர் மரியாள் சிவாவைப் பார்த்து கைகாட்ட..... அதைக் கேட்டு பிரியா பூவாய் புன்னகைத்தாள். மெதுவாய் பேசினாள்.

"அப்பா, அம்மா, தங்கை எல்லாமே... எல்லாமே எனக்கு இருக்காங்க. கவுதம்... நான் அநாதையில்லை!" அகமகிழ்வால் அழுதாள்.

"என் மாமா, அத்தையோட பையன் நீங்க! எனக்கு எவ்வளவு சந்தோசமா இருக்கு தெரியுமா? ஐயோ... அத்தை, மாமா, அரவிந்தா, பாவனா, அம்மா... எல்லோரும் என்னை மன்னிப்பீங்களா? உங்களை... உங்களை மாமா... அத்தைன்னு கூப்பிட அனுமதிப்பீங்களா?" என சிவசங்கரன்– மீனாட்சியைப் பார்த்து அவள் கேட்க...

"என் தங்கமே...!" என்று மீனாட்சி, அவளது கன்னத்தில் முத்தமிட்டாள்.

"நிஜமாகவே உங்க மகாலட்சுமி நான் எனும்போது, என்னால் நம்பவே முடியலை! அத்தான்... அத்தான்!" கவுதமின் கைகளைப் பிடித்து கண்களில் ஒத்திக்கொண்டாள்.

அந்தத் தீயாய் தீண்டிய தென்றல்.... இப்போது அவர்களை பனியின் குளிர்ச்சியோடு அன்பாய் தீண்டியது.

**(முடிந்தது)**

ராணிசிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: ர. பாஸ்கரன், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. அச்சிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ராணி அச்சகம், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.